கம்பர்

பிள்ளைத் தமிழ்க் கோவை

நா. மீனாட்சிசுந்தரம். ✻ முத்து. சம்பந்தன்.

கடவுள் துணை

கம்பர் பிள்ளைத் தமிழ்க் கோவை

(இரு நூல்கள்)

முதற் பரிசில்

புலவர், நா. மீனாட்சிசுந்தரம், பி. லிட்.,

(மீனவன்)

இராமநாதன் செட்டியார் உயர்பள்ளி,

புதுவயல் – 623 108,

முகவை மாவட்டம்.

இரண்டாம் பரிசில்

புலவர், முத்து. சம்பந்தன்,

மீ. சு. உயர்பள்ளி,

காரைக்குடி-623 001,

முகவை மாவட்டம்.

நாச்சி குளத்தார் பதிப்பகம்

உதய மார்த்தாண்டபுரம் (அஞ்சல்)

தஞ்சை மாவட்டம் - தமிழ்நாடு

Kambar Pillai Tamizh Kovai

First Edition June 1978

PRICE Rs. 10/-

Published by :
NACHI KULATHAR PATHIPPAGAM
Udaya marthanda puram (Post)
Thanjavur (District)
Tamil Nadu.

The South India Press, Karaikudi. Phone : 300

பொருளடக்கம்

படைப்பு

ஸ்ரீலஸ்ரீ. குரு. கருணையானந்த ஞானபூபதி அவர்களின் மாணவருள் ஒருவராகிய, தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம் இடையூரில் வாழ்ந்த கம்ப ராமாயணச் சொற்பொழிவாளரும், தவஞானியும், பன்மொழிப்புலவரும் ஆகிய அன்பர் சதாசிவ அடிகள் அவர்களுக்கும், மற்றொரு மாணவராகிய அன்பர் பெருமழைப் புலவர், பொ.வே. சோமசுந்தரனார் (திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப் புலவர் சங்கநூல் உரையாசிரியராகப் புகழ்பெற்று விளங்கியவர்) அவர்களுக்கும் இக்கம்பர் பிள்ளைத் தமிழ்க்கோவையைப் படைக்கின்றோம்.

அவர்களின் ஆன்மா பேரின்பப் பேறெய்த எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இங்ஙனம்,

நாச்சிகுளத்தார் பதிப்பகத்தார்.

திருத்திக் கொள்க

பக்கம்	வரி	சீர்	திருத்தம்
20	15	4	துயர்ந்துலகில்
26	11	2	துறந்தேகி
48	10	3	லாகி
71	6	2	ஏந்திப்
155	5	3	அருகீண்டு
188	2	1	கழறுவ

பாயிரம்

மலேசியா, முதுபெரும் தமிழ்ப்புலவர்

சுவாமி இராமதாசர்

அவர்கள் அருளியது

அம்புவி தன்னில் அறந்திகழ் செம்மல்,
நம்பினோர் தமக்கெல்லாம் அடைக்கலம் தருவோன்
பண்பும் பயனும் மிகவுடை இராமனின்
நண்புநற் காதை நலமுடன் செய்தோன்,
கம்ப நாடனின் கவின்மிகு சிறப்பை
இம்பரில் வாழ்வோர் யாவரும் அறிய
நல்ல கவிஞர்கள் நலமுடன் நோக்கிப்
பிள்ளைத் தமிழெனப் பாடுக என்றே
உரைசால் நிருபம் உலகினர் அறிய,
நாச்சி குளத்து நலமிகு புலவன்
மாட்சியாய்ச் செப்ப வழிதெரிந் தோர்கள்
ஆட்சிச் செந்தமிழ் அடுக்கடுக் கமைத்துக்
காட்சியும் கவினும் கலந்துற வாடப்
பத்தொன் பதுநூற் றெழுபத் தெட்டினில்
மொத்தம் கைவரு பிள்ளைத் தமிழ்நூல்
பலவற் றுள்ளும் மரபும் முறையும்
ஒருங்கமை வுற்ற உவமைசால் இருநூல்
பெருங்கவி மன்றம் பேணிக் கொண்டதால்;
இரண்டிலும் நயமுடை ஒன்றஃ தியாதெனில்

திரண்டசொல் வாய்ந்தநற் புதுவயல் மீனாட்சி
சுந்தரம் யாத்த செந்தமிழ்ப் பனுவல்
முந்துறக் கிடந்த தன்மைத் தாகலின்
அதுவே முதலாம் அமைப்புடன் கொண்டோம்;
இதுவலால் நன்னிலை இயல்பு பெற்ற
திறஞ்செறி முத்து. சம்பந்தன் செய்த
உரஞ்சால் பிள்ளைத் தமிழிரண் டாம்நிலை
பெற்றதால் இஃதைப் பேணிக் கொண்டனம்;
அறந்திகழ் நெஞ்சத் தறிஞர் போற்றும்
நல்லிசை வாய்ந்த பிள்ளைத் தமிழினை
உள்ளத் துவகையோ டியாவரும் ஏற்றுச்
செறியக் கற்றுச் செந்தமிழ் வளர்த்தே
இறைவன் திருவருள் என்றும்
நிலைபெறும் பொருட்டிங் கினிமைசெய் வீரே.

★

பதிப்புரை

அன்பு சால் தமிழ்க்குடி மக்களே!

நமது தாய் மொழியாகிய தமிழ் மொழியின் சிறப்பை ஆழ்ந்து சிந்திப்பின் அநேக விந்தைகளையுடையதாகத் தெரியும். இத்தமிழைச் சங்கத்தார் வளர்த்த காலம், மிகச் சிறப்புடைய காலம். காரணம், ஒவ்வொரு புலவரும் இயற்றுகின்ற நூல்களை அவை கூட்டிச் சிறப்பித்தமையே. இன்றோ! இலக்கணம், மரபு, இயல்பு இன்னதெனத் தெரியாது கண்டவர் கண்டதைப் பாடி வெளியிடத் துணிந்து விட்டனர்.

இஃதை உணர்ந்த நாங்கள் குரு கருணை யானந்த ஞான பூபதிகளின் மாணவர் குரு சதாசிவ அடிகளின் சிசியனும், சுவாமி இராமதாசர் அவர்களது மாணவனு மாகிய பன்னூல் ஆசிரியர், வரகவி நாச்சி குளத்தார் அவர்களைத் துணையாகக் கொண்டு மரபுக் கேற்ப, நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழும், கம்பர் பிள்ளைத் தமிழும், போட்டிக்கு விட்டனம். இஃதில் பல கவிதைகள் வந்தன. அஃதில் இவ்விரண்டு பிள்ளைத் தமிழும் சிறப்புக் குரியது என்று சுவாமி இராமதாசர் அவர்கள் மூலம் தேர்வு செய்தோம். இனி இஃதை உங்களின் முடிவு எப்படியோ! என அறிய விட்டு விட்டனம்.

கம்பர் பிள்ளைத் தமிழ்க் கோவையாகிய இந்நூலின் முதற் பிள்ளைத் தமிழ்க்கு முதற்பரிசில் தொகையைத் தமிழ்ச்சுடர் வழக்கறிஞர், திரு. *T.* சுப்பையா, *P. T. K*, *K M N*. அவர்களும், இரண்டாம் பிள்ளைத் தமிழ்க்கு

இரண்டாம் பரிசில் தொகையை வழக்கறிஞர் திரு. *R.* இராஜசிங்கம், *M.P.* அவர்களும், இந்நூலின் அச்சுக் கட்டணத் தொகையைக் கணக்காய்வாளர், திரு. *M.* சுப்பையா (*SHELLY & SUBBIAH*) அவர்களும் அளிக்கின்றனர். இவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் வெற்றி அளித்தருள்வானாக!

இனி இத்தகைய போட்டிகளை நன்றாக நடத்தித் தமிழுக்கு வாழ்வளிக்க இறைவன் அருள் செய்வானாக!

உதயமார்த்தாண்டபுரம்
15—6—1978

இங்ஙனம்,
நாச்சிகுளத்தார் பதிப்பகத்தார்.

அணிந்துரை

பிரபந்த வகை தொண்ணூற்ருறில் 'பிள்ளைத்தமிழ்' என்பதும் ஒன்று. 'பிள்ளைப் பாட்டு', 'பிள்ளைக் கவி' எனவும இது பெயர் பெறும். தொல்காப்பியப் பொருளதி காரத்தில், புறத்திணை இயலில் உள்ள

''குழவி மருங்கினும் கிழவது ஆகும்''

என்னுப் நூற்பாவே பிள்ளைக் கவிக்கு இலக்கண வித்து எனலாம். அதற்கு உரை எழுதிய நச்சினுர்க்கினியர்,

"மருங்கு என்றதனுன் மக்கட் குழவியாகிய ஒரு மருங்கே கொள்க, தெய்வக் குழவி இன்மையின்! ... ... ஒரு திங்களில் குழவியைப் பற்றிக் 'கடவுள் காக்க' என்று கூறுதலானும், பாராட்டும் இடத்துச்செங்கீரையும், தாலும் சப்பாணியும், முத்தமும், வரவுரைத்தலும், அம்புலியும், சிற்றிலும், சிறுதேரும், சிறுபறையும் எனப் பெயரிட்டு வழங்குதலானும் என்பது"

என விளக்கி மேலும்,

"அக் குழவிப் பருவம் கழிந்தோர் அது வேண்டியக் காலும் அக் குழவிப் பருவமே கருதிப் பாடுக என்றதற்குக் கிழவது ஆகும் (உரியது ஆகும்) என்ருர்" எனக்கூறுவார்.

இதிலிருந்து பிள்ளைத்தமிழ் இருபாலாருக்கும் பொது வாக, அல்லது ஆண்பாலுக்கு மட்டும் உரியதாக இருந்தி ருக்கவேண்டும் என்று கருதவேண்டியிருக்கிறது. மக்களில் பெண்பால் மீது பாடிய பிள்ளைத் தமிழ் காணவும் இல்லை.

அதன் பிறகு மக்கள் மீது மட்டும் இன்றித் தெய்வங்களின் மீதும் பிள்ளைத்தமிழ் பாடத்தொடங்கினர். இதற்கு முன்னோடியாகத் திகழ்பவர் பெரியாழ்வாரே என்னலாம். அன்றியும், ஆண்பாற்பிள்ளைத்தமிழ், பெண்பாற்பிள்ளைத் தமிழ் என்று இருவகைப் பிள்ளைத்தமிழ்கள் தோன்றின. ஆண்பாற் பிள்ளைத்தமிழின்கண் உள்ள "சிற்றில் சிதைத்தல்" "சிறுதேர் உருட்டல்" "சிறுபறை முழக்கல்" ஆகிய மூன்றையும் நீக்கி, கழங்கு, அம்மானை, ஊ(ஞ்)சல் ஆகிய மூன்றைக் கூட்டிப் பெண்பாற் பிள்ளைத்தமிழ் பாடப்பெற வேண்டும் என்று சில பாட்டியல் நூல்கள் விதித்தன. பன்னிரு பாட்டியலோ,

"சிற்றில் இழைத்தல், சிறுசோறு ஆக்கல்,
பொற்பு அமர் குழமகன், புனைமணி ஊசல்,
ஆண்டு ஈர்ஆறு அதில் எழில் காமன் நோன்பொடு
வேண்டுதல் தான் உள விளம்பினர் புலவர்"

என்று, சிற்றில் அமைத்தல், சிறுசோறுசமைத்தல், அழகு பொருந்திய பொம்மைக்குழந்தையை வைத்து விளையாடல் மணிகள் அமைந்த ஊஞ்சலில் அமர்ந்து ஆடுதல், பன்னிரண்டு ஆண்டில் காதற்கடவுளை நோக்கி நோன்பு நோற்றலும் விரும்பிப் பாடுதற்குரியன என்று புலவர்கள் எடுத்துரைத்தனர் என்னும்.

பிங்கல நிகண்டோ, பாவை மணம் பேசல், அழகிய கணவனை அடையத் தவம் செய்தல், குளிர் நீராடல், பதுமை வைத்து விளையாடல், அம்மானையாடல், கழங்காடல், பந்தடித்தல், சிறுசோறு சமைத்தல், சிறுவீடு அமைத்தல், ஊஞ்சல் ஆடல் என்று வழி வகுக்கிறது.

இப்படி ஒன்றனுக்கு ஒன்று வேறுபட்டும் மாறுபட்டும் பிள்ளைப்பாட்டிற்கு இலக்கணம் கூறுகின்றது.

இதுவரை கிடைக்கின்ற பிள்ளைத்தமிழ் நூல்களுள் காலத்தால் முந்தியது இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1135-1150) மீது ஒட்டக்கூத்தர் பாடிய பிள்ளைத் தமிழே! அப்பிள்ளைத்தமிழ் சோழர்வரலாற்றுச் செய்திகள் பலவற்றைப் புலப்படுத்திக் கொண்டு விளங்குகிறது. அதன் பின்னர்த் தோன்றிய பல பிள்ளைத் தமிழ்களுக்கு ஒட்டக்கூத்தரின் பிள்ளைத்தமிழே முன்மாதிரியாக இருந்திருக்கிறது.

பின்னர்த் தோன்றிய பிள்ளைத்தமிழ்களுள் குமர குருபரர் அருளிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழும் முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழும், பகழிக்கூத்தர் பாடிய திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழும் யாவர் நெஞ்சிலும் இடம் பெற்றவையாகும்.

மன்னர், தெய்வங்களின் மீது பாடிய பிள்ளைத்தமிழ் கட்குப் பின்னர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ் குறிப்பிடத்தக்கஒன்றாகும் அதில் அவர் ஒரு புரட்சி செய்துள்ளார். திருமால் முதலிய தெய்வங்களைப் போற்றிப்பாட்டுடைத் தலைவனைக் காக்க வேண்டுதலுக்கு மாறாகத் திருத்தொண்டத் தொகைப் பாடல் முறைப்படி சிவனடியார்களை யெல்லாம் காப்புப் பருவத்தில் பாடிக் காக்க வேண்டுகிற முறை ஒரு சிறப்பாக உள்ளது.

இப்படியாக வளர்ந்த பிள்ளைத் தமிழ் மகாத்மாகாந்தி முதலிய அறவோர்களையும் பாடிப் பரவும் நெறியிற் சென்றது. பின்னர், "கம்பன் பிள்ளைத்தமிழ்" என்றும் ஒன்று தோன்றிற்று.

இப்பொழுது மலேசிய நாட்டில் பிணாங்கு மாநகரில் வாழும் நல்ல தமிழறிஞரும், பன்னூலாசிரியரும், வரகவியு மான திருவாளர் நாச்சிகுளத்தார் என மிளிரும் முகம்மது யூசுப் அவர்கள் அளித்த ஆர்வத்தாலும், அறிவித்த

பரிசிலாலும் "கம்பர் பிள்ளைத் தமிழ்ப் போட்டி" ஒன்று நடைப்பெற்றது அதில் கலந்து கொண்டவர்களில் இருவர் பரிசில் பெற்றனர். முதற் பரிசும் இரண்டாம் பரிசும் பெற்ற இருவருமே காரைக்குடி வாசிகள்.

போட்டிக்கு வந்தபிள்ளைத்தமிழ்கள் எத்தனை என்பது எனக்குத் தெரியாது. இதற்கு முன் புதுக்கோட்டைத் தமிழறிஞர் நா. கனகராஜய்யர் கம்பன்பிள்ளைத் தமிழ் ஒன்று பாடி அதை இலக்கியப் பதிப்பகம் சுமார் இருப்பத்தைந்து ஆண்டுகட்கு முன் அச்சிட்டு வெளியிட்டது. அச்சில் வராத கம்பன் பிள்ளைத்தமிழ் ஒன்றிருப்பதாகவும் கேள்விப் படுகிறேன். எனவே எந்தைபிரான் கம்பன் மீது நிச்சயம் நான்கிற்கு மேற்பட்ட பிள்ளைத் தமிழ்கள் உள்ளன.

பரிசு பெற்ற இரு பிள்ளைத்தமிழ்களும் "கம்பர் பிள்ளைத் தமிழ்க் கோவை'' என்ற பெயரில் ஒரே புத்தகமாக வெளி வருகிறது. முதற்பரிசு பெற்றவர் புலவர், நா. மீனாட்சி சுந்தரம் பி. லிட். அவர்கள். இவர் புதுவயல் இரா. செ. உயர்பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். இரண்டாம் பரிசு பெற்றவர் புலவர், முத்துசம்பந்தன் அவர்கள். இவர் காரைக்குடி மீ. சு. உயர் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

முதற்பரிசுப் பிள்ளைத் தமிழ்தொன்மை மரபுக்கேற்பத் திருமால் முதலாகச் சத்தமாதர் ஈறாகவுள்ள தெய்வங்களைப் பரவிக் கம்பனைக் காக்க வேண்டுகிறது.

இரண்டாம் பரிசுப் பிள்ளைத் தமிழோ, புது நெறியைப் பின்பற்றி வான்மீகி முதலாகச் சடகோபர் ஈறாகப் பத்துச் சான்றோர்களைப் போற்றிக் கம்பனைக் காக்க வேண்டுகிறது.

இரு பிள்ளைத்தமிழ்களுமே கம்பன் காப்பியச் சொற்றொடர்களையும், கதையையும் போற்றிப் புனையப் பெற்றுள்ளன. பிள்ளைத்தமிழில் அம்புலிப்பருவம் பாடுவோரைப் பதம் பார்ப்பது ஆகும். சாம, பேத, தான, தண்டம்

என்ற நான்குவித உபாயங்களையும் பயன் படுத்தி நிலா வைக் கீழே இறங்கி வந்து பாட்டுடைத் தலைவனுடன் ஆடப் பணிப்பதாய் அமைய வேண்டும். மேலும் திங்க ளினும் மேம்பட்டவன் பாட்டுடைத் தலைவன் என்பதையும் அம்புலிக்கு உணர்த்த வேண்டும்.

முதற் பிள்ளைத்தமிழின் அம்புலிப் பருவத்து மூன்றும் பாடலில் ஒப்புநோக்கி உயர்வுரைத்தல் சிறப்பாக அமைந் திருக்கக் காணலாம். அங்ஙனமே இரண்டாம் பிள்ளைத் தமிழில் அம்புலிப்பருவத்து ஐந்தாம் பாடல் சிறந்து விளங்கக் காண்கிறோம்.

“அரியணை அனுமன் தாங்க'' என்ற தொடக்கத்தை உடைய முடிசூட்டுக் கவியை இருவருமே சிறுதேர்ப் பருவத்தில் பயன்படுத்திப் பிள்ளைத் தமிழை நிறைவு செய்கிறார்கள்.

இரு புலவர்களையும் அவர்கள் கொண்ட வெற்றிக்குப் பாராட்டுகிறேன்.

இந்தப் போட்டிக் குரிய பரிசில்களை வழங்கிய நல்லுள்ளம் படைத்த தமிழ்ச் சுடர் வழக்கறிஞர் திரு. *T* சுப்பையா *P.K.T.KMN* அவர்கட்கும், வழக்குரைஞர் திரு. *R.* இராசசிங்கம் *M.P.* அவர்கட்கும் நம் வாழ்த்தும் பாராட்டும் உரியனவாகும்.

இத்தகைய புனிதப் பணியில், புலவர்களை ஊக்குவிக்கும் முறையில், வேண்டத்தக்க ஒரு போட்டியை ஏற்படுத்திய அறிஞர் — கவிஞர் — பன்னூல் ஆசிரியர் — நாச்சிகுளத்தார் ஆகிய திருவாளர் முகம்மது யூசுப் அவர்களை எத்துணைப் பாராட்டினும் தகும். இங்ஙனம் நற்றமிழ்ப் பணியாற்றும் அத்திருமகனை மனமார வாழ்த்து கிறேன்; வணங்குகிறேன்.

கம்பன் புகழ் வாழ்க! கன்னித் தமிழ் வாழ்க!

கம்பன் மணி மண்டபம்
காரைக்குடி-2,
24—5—1978

அன்பன்,
கம்பன் அடிப்பொடி.

அணிந்துரை

(பேராசிரியர், புலவர்கோ க. தேசிகன், பள்ளத்தூர்)

வாழியர் உலகு !

'தமிழ்தந்த சடகோபர் உளங்கொண்ட கம்பமுனி! சப்பாணி கொட்டியருளே' என்று கவிஞர் மீனாட்சிசுந்தரம் (மீனவன்) சப்பாணிப் பருவத்துக்கு மகுடம் அமைத்துள்ளார். இதற்கு விளக்கங் கூறுவதே என் அணிந்துரையின் முகமாகும்.

இந்தப் பரத கண்டத்தில் 'தேவர்கள் முப்பத்து முக்கோடியினர், முனிவர்கள் நாற்பத்தெண்ணாயிரவர் என்றும் போற்றுவதுண்டு. இம்முனிவர்களில், நடைபெற்ற இராமசரிதத்தைக் கண்ணுக்குக் கண்ணாகக் கண்டு இராமபிரானின் புன்முறுவல், பேச்சு செயல்களனைத்தையும், பிரமனுடைய வரபலத்தால் உள்ளபடி நன்கறிந்து இதிகாசமாகப் பாடிய மேம்பட்ட முனிவரே வான்மீகியாவர்.

முனிபுங்கவர்கள் தாங்களே சொந்தமாகப் பாடுபட்டுத் தவம் புரிகின்றவர்கள். தவத்தின் உருவமான தருமத்தின் ஆற்றலால் உண்டான ஞானத்தையுடையவர்கள். இத்தகைய ஞானத்தாலே அறிய வேண்டுவனவற்றைத் தெளிய அறிந்து கொண்டவர்கள். அவ்வறிவினாலே உண்டான மகிழ்ச்சிப் பெருக்கால் உந்தப் பட்டவர்கள். தெளிவும், மகிழ்ச்சியும் சொற்களைத் தொடர்ந்து எடுத்துக் கொடுக்க, மேலும் மேலும் அச்சொற்களைத் தொடுத்த அனுபவ மாலையே முனிவர்களின் கவிதைகளாயின. கவிதைப் பிறப்பிற்கு இஃதும் ஒரு முறையாகும். இம்முறையிலும் பிறர் துயர்கண்டு உண்டான ஒரு சோக நிகழ்ச்சி மட்டும் தூண்டுதலாக அமைந்து காவியத்தைத் துவக்கி வைப்பது வான்மீகியாரிடம் அமைந்த சிறப்பியல்பாம்.

ஆழ்வார்கள் நாயன்மார்களாகிய அடியார்களின் பாடல்களோ தங்களின் முயற்சி, தவம், ஆகிய நிலைகளன் களுக்கு இடமில்லாமல் தருமத்தின் ஆற்றலால் வந்த தற்கும், அங்ஙனம்வந்ததும் ஞானமாத்திரம் ஆனதற்கும் 'எதிர்த்தட்டு' ஆம்படி ஒருகாரணமும் பற்றாமல் இறைவன் திருவருளால் தோன்றி, ஞானத்தின் பரிபக்குவ நிலை யென்றுபோற்றப்படும் பக்தியினாலே பொங்கி எழுவனவாம் முனிவர்களின் தெளிவுக்கும் மகிழ்ச்சிக்கும் எதிர்த்தட்டு என்னும்படி ஆழ்வார்கள் மூலப்பொருளாகிய இறைவனைப் பிரிந்த பிரிவாற்றாமையாலே ஞானமெல்லாம் அடிமண்டி யோடே கலங்கப் பெற்றவர்கள். விரும்பியபடியே இறைவன் அனுபவத்தைப் பெறாமையாலே மகிழ்ச்சிக்குப் பதில் சோகமே வடிவானவர்கள். இறைவனின் கல்யாண குணங்களிலே ஈடுபட்ட மயக்கமும் விழிப்புமாகக் கிடப் பவர்கள். உலகில் ஏனைய உயிர்களின் சார்பாளியாய் நின்று அவர்கள் உய்யும் பொருட்டு ஏங்கும் வருத்த உணர்வுடையவர்கள். சொல் எடுக்கும்போது ஒரு மலை எடுக்குமாறுபோலே வருத்தப்பட்டும் பொருமிப் பொருமி, அழுதும் கட்டுக்குலைந்த மனத்தில் உருவான தழுதழுத்த ஈரச்சொற்களாலே வண்தமிழ்ப்பாடல்களை வடித்தவராவர் இவர்களில் 'நம்மாழ்வாரோ' இராமயண காவியத்தில் புலப்படுத்தப்பட்ட இறையன்பு பூண்ட காவிய மாந்தர் திறங்களனைத்தையும் தம்மிடத்தில் அமையப்பெற்று அவர்களின்அனுபவ வடிவமாகக் காட்சியளிப்பவர், என்று சான்றோர்கூறும் சிறப்பியல்புடையவராவர்.

இப்படியாக முனிவர் திறமும், ஆழ்வார் திறமும், காவியமும், தோத்திரமுமாகப் பின்னி மானிடத்தின் வளர்ச்சியில் கடவுளைக் கண்டும் கடவுளின் அவதாரத்தில் மானிடத்தைக் கண்டும் இணைத்த இணைப்புக்கு உலகக் காவியங்களில் கம்பராமாயணத்துக்கு நிகர் வேறில்லை யென்பர் சான்றோர். இப்படி ஆன்றோர் கொண்ட

பொருளடக்கத்தையுடைய தொடரைத் "தமிழ் தந்த சடகோபர் உளங் கொண்ட கம்பமுனி" என்று கவிஞர் மீனுட்சிசுந்தரம் (மீனவன்) யாத்திருப்பது போற்றற்குரியது.

பிள்ளைத் தமிழிலக்கியங்களிலே பாடற் பொருளாக அமைந்தவர்களைப் பாடுபவர்கள், பாடல்களின் இறுதி யடியில் மகுடங்களாக அமைத்துப் பருவங்களைச் சுட்டும் போது மட்டும் பிள்ளை என்று கருதும் படியாகப் பாடியுள்ளார்கள். அப்பிள்ளைகளே தங்கள் பிள்ளைமை புலப்படும் படியாகத்தேனுகப் பேசும் பாங்கை அமைத்துப் பாடியதாகத் தெரியவில்லை. நம் தமிழ்க் கவிஞர்கட்கு இந்த இடத்தில் மகாகவி தாகூர் பெருமான் இயற்றி யருளிய 'வளர்பிறை' என்னும் தொகுப்பை ஞாபகப் படுத்திக் கொள்கிறேன். தாகூர் வழியிலும் நாம் நடை போடுதல் சிறப்புக்குரிய செயலே.

வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் காலக் கிரமத்தில் வேறுபாடுகள் தோன்றி மாறுபாடுகளாக நிலைத்து விடுவதுண்டு. இம்மாறுபாடுகள் தெய்வ வழி பாட்டுத் துறையில் சிவனென்றும் திருமாலென்றும் வாதிட்டு உயர்வு தாழ்வுச் சண்டைகளாகத் தொடர்வதை நாமறிவோம். இத்தகைய இழிநிலைகட்கு நம்மனம் இடந் தராத நெறியில் கவிச்சக்கரவர்த்தி கம்பன் தான் பாடி யருளிய காவியத்தில் தக்க வாய்ப்புக்களை ஏற்படுத்திப் பயன்படுத்திக் கொள்கிருன். ஈதொன்று. இராமபிரான் முதன்முதல் சீதையைக் கண்ணுற்றுக் காதல் நினைவால் உறங்காது காம உணர்வினனுய்க் கிடந்து விடிந்தவுடன் எழுங்கால் ஞாயிறு தோன்றக் காண்கிருன். அஞ்ஞாயிறு காம தகனனுகிய சிவபெருமானின் தோற்றமாகத் திகழ்கிறது. கம்பன் வாக்கில் காண்போம்.

"செய்ய வெய்யோன்
புதை பொருளின் எழுகின்ற புகர்முக
யானையின் உரிவை போர்த்த
உதையகிரி எனும்கடவுள் நுதல் கிழிந்த
விழிபோல் உதயம் செய்தான்''

என்றமைந்துள்ளது. இவ்விணைப்பில் நாடகப் பாங்கும் ஏறி நிற்கிறது. சிவபெருமான் உணர்வும் ஏறி நிற்கிறது. இதனை மறவாது போற்றத் தக்க மாண்பார் ஓவியமென்று கருதிய நம் கவிஞர் மீனவன் 'காதல் கண்ணளவில் வைத்தரகு ராமனுளத் தெழுவிரகக் கடுநோயால் வருந்தும் போது, கதிர், சிவன்தன் நுதல் கிழித்த விழியென வான் உதித்திட்டான் காகுத்தன் மகிழவென்று' — என்று 36 ஆம் பாடலில் எடுத்தாண்டுள்ளார். கம்பன் கற்பனைகளை இத்தகைய பாங்கில் கவிஞர் மீனவன்பால் பல இடங்களிலும் காணலாம்.

முத்தப்பருவம் 43ஆவது பாடலில் முதல்வரியில் பரம் பொருளாகிய இறைவனின் ஏற்றத்தைக் கம்பன் கூறுமாறு கூறி அவன் இறக்கத்தை இரண்டாவது வரியில் காட்டி மறுபடியும் மூன்ருவது வரியில் பரம்பொருளாக அவனை ஏற்றிப் பாடியுள்ளார். சீரும்சந்தமும் இறகுங் குரலுமாகக் கம்பனெனும் வானில் பறக்கும் கானக்குயிலாகிய மீனவன், இந்த இடத்தில் தன் ஆன்ம வெளியீடாகக் கம்பனைக் 'கானக்குயில் போல் பாடியசீர்க் கனிவாய் முத்தந் தந்தருளே' எனப் போற்றியிருப்பது பாராட்டத்தக்கது. கம்பன் கவிக் குயிலாவான் காகங்கள் ஏற்கனவே கட்டியிருந்தகராமுராக் கூட்டில் உருவாகி மாந்தளிர் கோதி, அழகும் விரைவுங் கொண்டு சுதந்திர உணர்வொடு வாழ்ந்துஊனும் உருகக் கானமிசைக்கும் குயில், கீழேவந்தால் மரத்துச்சியும்மேலே பறந்தால் வானத்தின் கீழுமாகத் திகழ்தல் போல் மானிட உச்சியிலும் தெய்வத் திருவடியிலுமாகப் பறந்து திரிகின்ற கவிஞனே கம்பனுவான், இக்கருத்து சொட்டச் சொட்டப் பாடுகிருர் நம் கவிஞர் மீனவனுர்.

பிளாட்டோ என்னும் பேரறிஞர் 'கவிஞர்கள் தாங்கள் அறியாமலே மகத்தானதும் ஞான நிறைவுடையதும் ஆன செய்திகளை வெளிப்படுத்தி விடுகிருர்கள்' என்று கவிஞர் களின் சொற்ருெடராட்சியின் சிறப்பைக் குறிப்பிடுகிருர். அது போலவே கவிஞர் மீனவன் தாலப் பருவத்தில் பொன்னிநதி வையம் வாழ்வு பெறுவான் வேண்டி அகத்தியனர் கரகத்துள் அடங்காமல் குதித்தோடும் போது 'கூம்பா மலரும் கழனிகளும் குளிர்ந்து வளரக் கால்வாங்கி, ஓடுகிருள் என்று குறித்துள்ளார். இதில் 'கூம்பா மலர்' என்னுந்தொடர் வினை எதிர் மறுத்துப் பொருள் புலப் படுத்தும் விபாவனையாகத் தமிழர்கள் தாமே அனுப வித்துக்கண்ட பேருண்மைகளாகிய அனுபவ ஞானங்கள் என்னும் பொருளுடையதாய் ஒளி வீசுகிறது.

இனி இஃதே போல்கவிஞர் முத்துசம்பந்தன் பிள்ளைத் தமிழில் ஒருவமைத் தொடர், உவமையென்னுங் குன்றி லிட்ட விளக்குப் போல் ஒளிர்வதை மறக்க முடியாது. அத் தொடராவது 'குளகக் கவியின் வளர்கழை' — என்பது. 'குளகம் பலபாட்டொருவினை கொள்ளும்' என்பர். அஃதே போல் மூங்கில் குருத்துக்கள் பக்கவாட்டில் வெடித்துக் கிளம்பித் தனித் தனி மூங்கில்களாக நெருங்கிநின்று வானளாவுமியல்பு மட்டும் குறியாமல், சிங்கம், புலி, கரடி, யானைகள் ஊடுருவுத்திரியும் காட்சியும், வண்டுகள் துளைத்த மூங்கில் துளைகளில் காற்றுப் புகுந்து வெளியேறுங்கால் எழும்பும் இனிய ஓசைத் தொகுதியும், மந்திகள் மருண்டு நோக்க மயில்கள் அங்குமிங்கும் குதித் தாடும் ஆடற்சிறப்பும் நம் அகக்கண்ணில் விரிந்து பரந்து தோன்றும் கானகப்பரப்பையே கொண்டு வந்து நிறுத்தி விடுகிறது.

கவிஞர் முத்துசம்பந்தன் முத்தப் பருவத்தில் கம்ப ஞகிய குழந்தைக்கு முத்தங்கிசார்த்தி முத்தமிட்டு 'முத்தந்

தருக' என்றே கொஞ்சுகிறார். முத்து சம்பந்தன் என்னும் தன் இடுகுறிப் பெயர் முத்தப் பருவத்தைப் படிக்குங்கால் காரண இடுகுறிப் பெயராகி விடுகிறது. எழுபதாவது பாட்டில், 'மிகப்பெரிய நெருப்புக் கோளமாகிய சூரியனையே பழமென்று பற்றிடச் சென்ற மாருதி கம்பனின் பக்கத்தி லுள்ளான் என்றால் மிகச்சிறிய அமுத உருண்டையாகிய நீ ஏறுமாறு நடந்து கொள்ளாதே' என்னும் பாங்கில் — "மதியாய்! மதியாய் இவனழைப்பை! எல்லினைப் பழமெனப் பற்றிய மாருதி இவனுழை இருந்திடல் காண்" — என்று அமைந்த பகுதி போற்றற்குரியது.

73ஆவது பாடலில் 'காசிப் பட்டுக் கஞ்சுகந்தான் கனக்குமென்று கைவிட்டுக் காஞ்சிப்பட்டு மெய்யணிந்து' என்றமைந்துள்ள தொடரில், 'காஞ்சிப்பட்டு' என்ற தொடரில் உள்ள தொனிப்பொருளில் கம்பனின் காவிரி நாட்டுப் பற்றையும் விஞ்சிய இனப்பற்றைக் கண்டு களிக் காமலிருக்க முடியாது.

75ஆவது பாடலாகிய அமுது சமைத்துச் சுவைகள் படைக்கும் திறம் கவிதை படைப்போர் கற்பனை இயலுக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். அனைத்துக்கும் சிகரமாக 77-ம் பாடலாகிய சொல்லுஞ் சொல்லை வெல்லுஞ் சொல் தோன்றலின்றிச் சொல்கின்ற, என்று தொடங்கும் சந்தப்பாவில்—செல்லும் வழியில் ஒரு கல்லும் செம்மல் இராமன் கால்பட்டுத் தெரிவை யான கதையதனைச் செப்பும் நீயோ சிறுமியர்பால் அல்லல் இழைக்க அருகுற்றாய்! அடியேம் சிற்றில் சிதையேலே! என்னும் பகுதி சொல்லும் பொருளும் சந்தமுகமாகக் குழைந்து மனத்தைத் தழுதழுக்கச் செய்யும் கவிதையுலகக் காட்சியாகி விடுகிறது.

கவிஞர் மீனவனாரின் கம்பர் பிள்ளைத் தமிழும் கவிஞர் முத்துசம்பந்தனாரின் கம்பர் பிள்ளைத்தமிழும் ஒன்று என்னும் எண்ணருகில் எழுதிய ஒன்று என்னும் எண் போல் இணைந்துள்ளன. ஒன்றின் அருகில் ஒன்றிணைந்து

பதினொன்றாகி, அவ்விரண்டெண்களின் மதிப்பு பதினொரு மடங்கு உயர்ந்திடுதல்போல அடுத்தடுத்துள்ள இவ்விருவராலும் கம்பன் மதிப்பும் கவிதை மதிப்பும் பன்மடங்கு உயர்ந்துள்ளதாக வாழ்த்துகிறேன்.

இனி, கீரைக் கடைக்கு எதிர்க்கடை வைப்பது போன்ற பாங்கில் நம் புலவர் பெருமக்கள் இயங்காமல் பிரபந்த வகைகளிலும் புதியன படைக்கும் கற்பனை இமயங்களாகத் திகழுநாள் தொலைவிலில்லை என்று கருதுகிறேன்.

செயல் வீரரும் செந்தமிழ்த் தொண்டர்தம் தொண்டரும் ஆகித் திகழும் பரந்த மனம் படைத்த இசுலாமியர் தோன்றல் வரகவி நாச்சிகுளத்தார் உள்ளிருந்து தூண்ட பரிசிலளித்த புரவலர் பெருமக்களாகிய தமிழ்ச்சுடர் சுப்பையா பிள்ளை அவர்களும், வழக்கறிஞர் இராசசிங்கன் அவர்களும், வானின் பரிதிபோல் கதிரொளியைவீச, இடைநின்று மலரும் மருதக் கருப்பொருளாகிய நூற்றிதழ்த் தாமரை மலர்கள் இரண்டே பூத்துள. தமிழெனும் பொய்கையில் மேன்மேலும் தாமரைகள் மலரட்டும். இந்நெறியில் முன்னோடியாக அமைந்த செஞ்ஞாயிரும் காரைக்குடியில் தமிழ்க்கல்லூரிகண்ட இராம. பெரிய கருப்பன் அவர்கட்கும் நன்றி.

கம்பன் கழகங்கண்டு, தமிழ்த்தாய்க்குக் கோயிலெடுத்த தமிழன்னையின் இருபதாம் நூற்றாண்டின் தவமகன் கம்பனடிப் பொடியெனப்படும் – அண்ணல் சா. கணேசன் அவர்கள் அடிசூடும் முடியெண்ணில் ஆயிர நூறுயிரமே. அம்முடியில் என் தலையும் ஒன்றென்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

'வாழியர் உலகினி வரம்பில் நாளெலாம்'

பள்ளத்தூர்
24—5—1978

அன்பன்,
க. தேசிகன்

அணிந்துரை

புலவர் தெ. முருகசாமி, M.A., B.O.L.,
முதல்வர், இராமசாமி தமிழ்க்கல்லூரி, காரைக்குடி.

(நேரிசை வெண்பா)

நாச்சி குளத்தாரால் நற்றமிழும் வாழ்ந்ததெனப்
பேச்சுக்குப் பேச்சு, பெருமைகொள— மூச்செல்லாம்
செந்தமிழாக் கொண்டிலகும் சீர்க்கம்பன் மீதுநண்பர்
தந்திட்டார் பிள்ளைத் தமிழ்.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

கானடை இராமன் மீது
காவியம் படைத்த தூய
ஞானமார் கம்பன் மேலே
ஞாலமே புகழ நாளும்
தேனடை போல நல்ல
தீந்தமிழ்க் கவிதை பாடும்
மீனவ நண்பர் சொன்னார்
மேலான பிள்ளைப் பாட்டே.

பாட்டிலே சந்தங் கூட்டிப்
பைந்தமிழ் இன்பம் காட்டி
ஏட்டிலே மணக்கும் நல்ல
எழில்மிகு வளங்கள் ஊட்டி
தோட்டிலே வைர மாகத்
துலங்கியே ஒளிர வைத்தார்
நாட்டிலே உள்ள நல்லோர்
நாவினாற் புகழு தற்கே.

வானுயர் இராமன் மீது
வண்டமிழ்க் கவிதை சொன்ன
ஊனமில் கம்பன் தன்னை
உவப்புடன் பிள்ளை யாக்கித்
தானமும் தவமும் போலத்
தமிழ்க்கவி நிலவ வைத்தார்
மானமும் மறமும் கண்ணு
மன்னுசம் பந்த னுரே.

முத்தான காப்புப் பாட்டில்
முன்னுயிர் எழுத்தைக் காட்டிப்
பத்தான பருவ மாகப்
பைந்தமிழ்த் தேரைச் செய்து
சத்தான அம்பு லிக்கே
சாபத்தை இட்டுச் சொன்னுர்
வித்தான கவிஞ ரெல்லாம்
விரிவாகப் புகழு தற்கே.

அன்பன்,
தெ, முருகசாமி.

★

நன்றியுரை

இக்கம்பர்பிள்ளைத் தமிழ்க் கோவையில் உள்ள நூல்களைப் பாடிப் பரிசில் பெறும் புலவர் மணி, திரு. நா மீனுட்சிசுந்தரம், பி. லிட்., அவர்களுக்கும், புலவர் மணி, திரு. முத்து. சம்பந்தன் அவர்களுக்கும் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இக்கோவை நூலின் அச்சுக் கட்டணத் தொகையைப் பெருந்தன்மையுடன் ஏற்றுள்ள, தமிழ்நாடு முகவை மாவட்டம் தெற்கூர் கருணையாளர், திரு. முத்துராமன் அவர்களின் அன்புமகனார், கணக்காய்வாளர், திரு சுப்பையா (*SHELLY & SUBBIAH*) அவர்களுக்கும், முதற்பரிசில் தொகையைத் தந்துதவிய தமிழ்ச்சுடர், வழக்கறிஞர், திரு. *T.*சுப்பையா, *P.K.T.*, *K.M.N.* அவர்களுக்கும், இரண்டாம் பரிசில் தொகையைத் தந்துதவிய வழக்கறிஞர், திரு. *R.*இராஜசிங்கம், *M.P.* அவர்களுக்கும் எங்கள் நன்றி!

பலவகையிலும் ஒத்துழைப்புநல்கிய சுவாமிஇராமதாசர், சுவாமி சுத்தானந்த பாரதியார், புலவர் மணி, திரு. *V.K.* சுப்பிரமணியம், மதுரகவி சி. அன்பானந்தம், திரு *P.S.A.* அனிபா (*S.P.* பட்டினம்) திரு *M.* இரகுமத்துல்லா (பனைக்குளம்) ஆகியோர்க்கும் எங்கள் நன்றி!

இந்நூற்கு அணிந்துரை வழங்கிய அறிஞர்பெருமக்கள் திரு. கம்பன் அடிப்பொடி (சா. கணேசனார்) பேராசிரியர் புலவர் கோமான் திரு. க. தேசிகனார், புலவர் திரு. தெ. முருகசாமி, *M.A.*; *B.O.L.* ஆகியோர்க்கும் எங்கள் நன்றி!

இந்நூலை அழகுற அச்சிட்ட, காரைக்குடி 'தி சௌத் இந்தியா பிரஸ் மேலாளர் திரு. வீர. சுப்பையா, *B. Sc.* அவர்களுக்கும் எங்கள் நன்றி!

இங்ஙனம்,

நாச்சிகுளத்தார் பதிப்பகத்தார்

நா. மீனுட்சிசுந்தரம்



அவர்களைப் பற்றி

முகவை மாவட்டத்தைச் சார்ந்த கண்டரமாணிக்கத்தில் 4 - 5 - 1940இல் பிறந்தவர். தந்தை பெயர் சுப. நா. நாச்சியப்ப செட்டியார். தாயார் பெயர் விசாலாட்சி ஆச்சி. கண்டரமாணிக்கத்தில் திரு. தண்டாயுதபாணி உயர்நிலைப் பள்ளியில் உயர்நிலைக் கல்வி முடித்தபின், தென்னுர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த மயிலம், சிவத்திரு, சிவஞான பாலைய சுவாமிகள் தமிழ்க்கல்லூரியில் நான்காண்டுகள் தமிழ்பயின்று புலவர் பட்டம் பெற்றவர். புதுக்கோட்டை அரசினர் பயிற்சிக்கல்லூரியில் ஆசிரியப்பயிற்சி பெற்றவர்.

1963 ஆம் ஆண்டு காரைக்குடியைச் சார்ந்த மெய்யம்மை என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டவர். இவருக்கு மூன்று பெண்களும் ஓர் ஆணும் உள்ளனர். இவர் மனைவியார் காரைக்குடி மீ. சு. உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றி வருகிறார்.

இவர் நாச்சியார் புரத்தைச் சார்ந்தவரும், பினாங்குத் தண்டாயுதபாணி மேலும், பிற தெய்வங்கள் மேலும் சந்த விருத்தங்கள், ஆசிரிய விருத்தங்கள் பாடியவரும், தேவகோட்டை வன்றொண்டச் செட்டியாரவர்கள் மாணாக்கருள் ஒருவருமாகிய கூத்தலூர் இராமையா செட்டியார் அவர்களின் மகன் வயிற்றுப் பெயரராவார்

இவர் செங்கை மாவட்டம் திருவள்ளூர் கவுடி உயர்நிலைப்பள்ளியிலும், பின் மதுரைத் தியாகராசர் உயர்நிலைப் பள்ளியிலும் தமிழாசிரியராகப் பணியாற்றித் தற்பொழுது முகவை மாவட்டத்தைச் சார்ந்த புதுவயல் இராமநாதன் செட்டியார் பேருயர் பள்ளியில் முதனிலைத் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

பல்வேறு கவியரங்குகளில் பங்குபெற்றுப் பாடிவரும் இவர், 'பறியாத தூண்' என்ற நாடகச் செய்யுளையும், 'செங்கயல்' என்ற சிறுகாவியத்தையும், மறைமலையடிகள் மேல் பிள்ளைத் தமிழ் ஒன்றும், மீனாட்சி மாலையும் பாடியுள்ளார். இவையனைத்தும் அச்சேறாத நிலையிலுள்ளன.

முத்து. சம்பந்தன்



அவர்களைப் பற்றி

தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்தில் முத்துசாமி, மாரிமுத்து அம்மை என்பார்க்கு மகனாக 13-9-1933- இல் பிறந்தார். தொடக்கக் கல்விக்குப்பின் சிதம்பரத்திலேயே யாழ்ப்பாணம் திருவருள் திரு. ஆறுமுகநாவலர் அவர்கள் பெயரால் அமைந்த ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் எட்டாம் வகுப்பு வரை தமிழும் ஆங்கிலமும் பயின்றார்.

அந்நாளில்வகுப்பில் பயிற்றுவிக்கப் பெற்ற ஆறுமுக நாவலர் பெருமானின் பாலபாடங்கள், இலக்கண வினா விடை, இலக்கணச் சுருக்கம், நன்னூற்காண்டிகையுரை ஆகியவற்றால் தமிழ்மொழியறிவு தனித்து வளர, நாவலர் பெயரால் அமைந்த தனித்தமிழ்ப் பள்ளியில் சேர்ந்து பயின்று சென்னைப் பல்கலைக் கழகப் புலவர் நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றார்.

பின்னர், அண்ணாமலைப் பல்கலைக் கழகப் புலவர் வகுப்பில் சேர்ந்து பயின்றார். அப்பல்கலைக் கழகத்தின் உதவித் துணைவேந்தராகப் பொலிந்த திரு A. இராமநாதன் பிள்ளை அவர்களால் 'திருவள்ளுவர் நாளை' யொட்டி 1954இல் நடத்துவிக்கப் பெற்ற திருக்குறள் கட்டுரைப் போட்டியில் முதற் பரிசில் பெற்றுப் பேராசிரியர் களின் பாராட்டையும் நன்மதிப்பையும் பெற்றார். 1955 இல் புலவர் பட்டம் பெற்றார்.

1955 ஆம் ஆண்டு முதல், ஈராண்டு புதுக்கோட்டை யிலும பின்ஈராண்டு விருது நகர்க்கு அடுத்துள்ள குல்லூர்ச் சந்தையிலும் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்.

அரசின் விதிகளுக்கு ஏற்ப உயர்நிலைப் பள்ளியின் பணிக்கு முழுத்தகுதி பெறப் 'பொதுக்கல்வித் தகுதி'யில் தேர்ந்து மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று ஆசிரியப் பயிற்சி (*Dip-in-Teaching*) பெற்றார்.

1960 ஆம் ஆண்டு முதல் காரைக்குடி மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகின்றார். நல்லியல்பு அமைந்த இவர்தம் இல்லத் தரசியார் தில்லைக்கரசி ஆவார்.

'தமிழே தெய்வம்' என வழிபடும் இவர் தமக்குத் தமிழறிவு ஊட்டிய ஆசிரியப் பெருமக்களை என்றும் உள்ளத்தில் நிறுத்தித்தொழும் இயல்பினர். நெறிபிறழாக் கொள்கையாளர்.

இவர்தம் கவிதையாற்றல் மேன்மேலும் வளரத் தூண்டுகோலாக இருந்தவரும், இப்பொழுது மதுரைப் பல்கலைக்கழகத்தில் "அஞ்சல்வழிக் கல்வி" தமிழ்த் துறை முதல்வராகப் பொலிபவரும் ஆகிய பண்டாரகர் (*Dr.*) தமிழண்ணல் அவர்களை என்றும் நினைவுகூரும் இயல்பினர்

இவர்தம் இயல்புணர்ந்து ஊக்கம் கொடுத்து வரும் கவியரசு முடியரசன் அவர்களையும், பாவலர் மணி ஆ. பழநி அவர்களையும் தம் உடன் பிறவாத் தமையனார்களாக் கொண்டு போற்றி மகிழ்கின்றார்.

பிள்ளைத் தமிழ்ப் பருவ விளக்கம்

பிள்ளைத் தமிழ்: இறைவனையோ, ,ஆன்றோரையோ குழந்தையாக நினைத்து,அக்குழந்தையின் சிறப்புக்களையும் பருவ நிகழ்ச்சிகளையும் தமிழில் பாடுதலாகும். இஃது ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இருவகைப்படும்.

காப்புப் பருவம்: இரண்டாம் திங்களில் பிள்ளையைக் காக்குமாறு தெய்வங்களையோ சான்றோர்களையோ வேண்டுதல்.

செங்கீரைப் பருவம்: இஃது ஐந்தாம் திங்களில் நிகழ்வது. ஒரு கால் மடக்கி, ஒருகால் நீட்டி, இரு கையையும் நிலத்தே ஊன்றித் தலை நிமிர்த்தி, முகம் அசையக்குழந்தை ஆடுதலாம்,

தாலப் பருவம்: இஃது ஏழாம் திங்களில் நிகழ்வது, தாலாட்டு. தால்—நா. தாலே தாலேலோ எனப் பாடுதலாகும்.

சப்பாணிப் பருவம் : இஃது ஒன்பதாம் திங்களில் குழந்தை இரு கைகளையும் ஒன்று சேர்த்துக் கொட்டுதலாம்.

முத்தப் பருவம்: இது பதினோராம் திங்களில் நிகழ்வது. குழந்தையை முத்தம் தருமாறு வேண்டிப் பாடுதலாகும்.

வருகைப் பருவம்: இது பதின்மூன்றும் திங்களில் நடக்கும் குழந்தையைத் தம்பால் வருமாறு வேண்டுதல்:

அம்புலிப் பருவம் : இது பதினைந்தாம் திங்களில் நிகழ்வது. வான் நிலவைக் குழந்தையுடன் விளையாட வருமாறு சாம, பேத, தான, தண்ட முறைகளால் அழைத்துப் பாடுதல்.

(இவை ஏழும் இருபாற் பிள்ளைத் தமிழ்க்கும் பொதுவாம்.)

சிற்றிற் பருவம்: இது பதினேழாம் திங்களில் நிகழ்வது: சிறுவீடு கட்டி விளையாடும் சிறுமியர், அதைத் தன் காலால் அழிக்க வரும் சிறுவனை அழிக்க வேண்டா என வேண்டுதலாகும்.

சிறுபறைப் பருவம்: இது பத்தொன்பதாம் திங்களில் நிகழ்வது சிறுபறை கொட்டி விளையாட வேண்டுதலாகும்.

சிறுதேர்ப் பருவம்: இஃது இருபத்தொன்ரும் திங்களில் நிகழ்வது. சிறுதேர் உருட்டி விளையாடுதலைக் கூறுதலாகும்.

இம்மூன்று பருவமும் ஆண்பாற்குரியவை இவற்றிற்குப் பதிலாக அம்மானை, நீராடல், ஊசல் எனும் மூன்று பருவங்கள் பெண்பாற்கு அமையும்.

கம்பர் பிள்ளைத் தமிழ்

முதற் பரிசில்

புலவர், நா. மீனுட்சிசுந்தரம், பி. லிட்.,
(மீனவன்)
இராமநாதன் செட்டியார் உயர்பள்ளி,
புதுவயல் - தமிழ்நாடு

Kambar Pillai Tamizh

(FIRST PRIZE)

Nachiappan Meenakshi Sundaram
(MEENAVAN)

Born : 4-5-1940

நன்றியுரை

பொருப்பிலே பிறந்து, தென்னன் புகழிலே கிடந்து, சங்கத் திருப்பிலே தவழ்ந்து, நெருப்பிலே நின்று, வைகை ஏட்டிலே தவழ்ந்து, கற்ருேர் நினைவிலே நின்று வாழும் செந்தமிழில் வெல்லரிய புலமை பெற்று, விளங்குகவிக் கம்பநாடன் மேல், யாப்பினில் வழுவாக் கோப்புடைத்தூய முறையில் பிள்ளைத் தமிழ் நூலொன்று பாடுக எனப்பணித் துப் பாடிய எனக்கு, முதற்பரிசு பெறும் வாய்ப்பினை வழங்கிய நண்பர், இனிய பண்பும், இறையுணர்வும் வாய்க்கப் பெற்ற, பினங்கு வாழ் நற்றமிழ் வரகவி நாச்சி குளத்தார்க்கும், முதற்பரிசுக்குரிய தொகையினை வழங்கி மகிழும் நண்பர், தமிழ்ச்சுடர் வழக்கறிஞர் *T.* சுப்பையா அவர்களுக்கும் நன்றியெனும் மலர்களைத் தூவி நான் மகிழ்கின்றேன்.

அன்பன்,
நா. மீனுட்சிசுந்தரம்.

என்னுரை

எழுதற் கரிய இராகவன் புகழைப்
பழுதிலா விருத்தப் பாவினுல் ஈந்தோன்
அம்புவி போற்றும் அருங்கவிக் கரசன்
கம்பன் பெருங்கவிக் கார்முகில் அனையான்
பார்புகழ் கவியைப் பாராட் டிடவே
சீர்மிகு பிணுங்கின் செந்தமிழ் வரகவி
மூச்செலாம் தமிழென முழங்கும் புகழான்
நாச்சி குளத்தார் எனுநற் புலவன்
இன்கவி மரபுடன் இலக்கணச் சொற்றிறம்
நன்குறப் பொருந்திய நற்கவி தருகெனச்
சொன்னதை அறிந்து சுடர்தமிழ் மின்ன
உருவுற் றிலங்கும் உயர்கவித் தொகுப்பிது
எண்ணிலாப் புலவர் இன்தமிழ்த் தாய்க்குப்
பண்ணுர் தமிழ்க்கவிப் பணிபல சூடி
என்றும் மகிழ்ந்த இயல்பினை எண்ணி
என்கவி யணியும் இலங்கிடக் கருதி
பொன்னுர் தமிழிற் பூங்கவி யாரம்
கம்பனும் சேய்க்குக் கட்டி மகிழ்ந்தேன்
பம்புசீர் இலக்கணம் பாவியல் வண்ணம்
செந்தமிழ்ச் சொற்கள் சிற்சில வோடு
சந்தத் தியல்முறை சற்றே அறிவேன்
இதயத் தார்வம் எழுப்பிய கிளர்ச்சியில்

உதயம் ஆனதிங் கொருகவித் தமிழ்நூல்
குருபரர் பகழிக் கூத்தர் பலருடன்
திரிசிர புரத்துப் பிள்ளை அவர்களும்
ஆக்கிய பிள்ளைத் தமிழ்நூல் அழகெலாம்
தேக்கியே உண்டு தேன்தமிழ்ச் சொல்லால்
செய்த சிறுகவி சீர்மிகு நூலாய்ப்
பைய உலகைப் பார்க்க வருவதால்
செய்ய புலவீர்! செந்தமிழ் மக்காள்!
வையத் திந்நூல் வாழ்வுற அருளி
உய்யச் செய்வீர் உவந்தினி மகிழ்ந்தே.

அன்பன்,

நா. மீனாட்சிசுந்தரம்.

கம்பர் பிள்ளைத் தமிழ்

படைப்பு

என்னைத் தமிழுலகில் ஈன்ற விசாலாட்சி
அன்னை திருவடியில் அன்புடன்யான் — இந்நூலை
இன்று படைத்தே இதயம் மகிழ்கின்றேன்
என்றென்றும் வாழ்க இனிது.

நா. மீனாட்சிசுந்தரம்.

விநாயகர் காப்பு

(பதினான்கு சீர் விருத்தம்)

சீருலவு மிதழிமுடி யணிகின்ற பரமனுளச்
சிந்தையினில் மகிழ்வை யூட்டிச்
செழித்துயர்ந்த வரைமேரு தனிலன்று வியாசருரை
பாரதத்தை வரைந்து காட்டி,

தாருலவு கின்றதனித் தம்பிமனம் வள்ளிகொளத்
தான்கரியாய் வந்து காத்துத்
தந்தைரதத் தச்சுபொடி யாகவென வைத்ததனி
யானைமுகன் தாள்கள் காப்பாம்;

ஏருலவு கின்றதமிழ் எழுந்துநட மாடவென
எண்ணிநறுங் கவிதை யென்னும்
எழில்துளவ நறுமாலை சூட்டிவளர் இராமனடி
இதயத்தில் இனிது போற்றிப்

பாருலவு காவியமாய் வரவிடுமோர் கம்பனெனும்
பசுங்குழவி பற்றி யிங்கே
பகரவரு கின்றதமிழ்க் கவிகளெனும் மலர்களிவை
படர்ந்துலகு மணக்க வென்றே.

நூல்

காப்புப் பருவம்

திருமால்

(பன்னிரு சீர் ஆசிரிய விருத்தம்)

2 பெருந்தேன் அளிக்கும் செழுங்கமலப்
பெண்ணைப் பிரியா மார்பானை,
பிறங்கும் பச்சை எழில்வடிவப்
பெம்மான் பார்த்த சாரதியாய்
இருந்தே கீதை இசைத்தவனை
இலங்கும் ஆழிப் புயல்வண்ணன்
எழுதா மறையாய் இலங்குபவன்
என்று லகோதும் எம்மானை,
பொருந்தும் கவிதைப் பூவிட்டுப்
புகழ்ந்து வணங்கிப் போற்றிடுவாம்;
பொன்னார் கமலச் சேவடியைப்
பூமேற் பதித்த புண்ணியனோர்
மருந்தே யனையான் இராமகதை
மகிழ்ந்து பாடப் பிறந்தவனை
மன்னன் கவிதைக் கம்பனெனும்
மகிழ்சேய் தன்னைப் புரக்கெனவே. (1)

சிவபெருமான்

3 பொங்கும் கிழிப்பொன் தருமிபெறப்
புகழ்சால் கீரன் வெம்மைபெறப்
புலவன் ஆன புரவலனை,
பூந்தா துகுக்கும் நறுங்கொன்றை
தங்கும் முடியில் நதியரவம்
தாங்கும் மதிசால் வேணியனை,
தாயாம் உமையாள் இடத்தவனை,
தண்ணார் மதுரைத் தனியரசை,
எங்கும் திருநீற் றொளிபரப்பி
இயலும் சிவனை, வணங்குதுமே;
இதயக் கமலம் தனிற்றமிழை
இலங்கும் திருவென் றேற்றியவன்,
கொங்கும் நாணக் கவிதருமோர்
கோலக் கம்பன், இயல்கவிஞர்
குழாத்துள் மன்னன், எனவருமோர்
குழந்தை தன்னைக் காக்கவென்றே. (2)

காப்புப் பருவம்

சிவசக்தி

(வேறு)

(இருபத்தெண்சீர் ஆசிரிய விருத்தம்)

4 நீடாழி உலகங்கள் அன்னையெனத் துதிபேச
நிகரிலா திலங்கு வாளை,
நித்திலத் தனிமூரல் ஒளிவெய்யில் ஒளிவெல்ல
நிற்கின்ற ஞான மாதை,
நினைக்கின்ற மனமேறி அருள்கின்ற சீமாட்டி
நேசத்தை உயிர்கள் மீது
நிறுத்துமொரு பெண்ணமுது சகலவுயிர் புவனங்கள்
நிலைக்கவருள் செய்கு வாளை,
பீடாழி துயிலுமொரு பேராழி கரமுடைய
பெம்மானின் தங்கை யாகி,
பேதங்கள் கடந்துலகு பெருமையுற நிறுத்துமொரு
பெருமானின் துணைய தென்று
பேசரிய மறைநான்கும் ஆநந்த வல்லியெனப்
பேசவரு கின்ற தாயை,
பேறுதர வருவாள்தன் பாதமலர் போற்றிமனம்
பேணியே அஞ்ச லிப்பாம்,

ஓடாழி தனையொப்ப உருளுமன முடையவர்கள்
உலகத்தே உயர்ந்து வாழ,
ஓங்கிவளர் வேதங்கள் பணிகின்ற திருப்பாதம்
உயிரெல்லாம் காணு மாறே;
உயிர்கொண்ட படமென்னத் திகழ்கின்ற உருவோடு
கோசலைதன் வயிறு வாய்த்தே
ஓயாத தீமையெனும் அரக்கரினம் அழியவொரு
கோதண்ட பாணி யாகி,
பாடாழி சூழிலங்கை தனையன்று கடந்தேகிப்
பாவவடி வான வேந்தன்
படுமாறு சரங்கோடி புகவிட்ட பரந்தாமன்
திருவடிகள் பணிந்து பாடும்
பைந்தமிழர் குடிக்கழகு செய்யவரு தமிழ்க்கவிதை
பகர்குழவி கம்ப னுன
பாலகனும் உவந்துநலம் பல்கிவளர்ந்
துயர்ந்துலகில்
பல்வளமும் பெறுக வென்றே. (3)

காப்புப் பருவம்

விநாயகர்

வேறு

(பதினான்குசீர்ச் சந்த விருத்தம்)

5 கடலலை இடையே துரும்பெனத் திகழும்
கருத்தினில் திரிதரும் உயிர்கள்;
கவலையை அறுக்கும் கடகரி வடிவன்,
கனிதரு பழமதை விரும்பித்
திடமுள உலகம் எனவுயர் இறையைத்
திகழ்வுற வலம்வரு திருவன்,
தென்முகக் கடவுள் தன்முதல் மதலை,
கருணையே சிந்திடு களிறு,
மடலணி கொன்றை யறுகுடன் அணிந்து
மகிழ்பவன் தாளிணை நினைவாம்;
மரகதக் குன்றம் அனையபொன் உருவன்;
மழலையம் சொற்கனி கனியும்
தடமலர் அனைய சீதைதன் கணவன்
தருமெழிற் காவியம் பாடும்
தமிழ்க்கவி மன்னன் அபயனின் சபையின்
தலைவனைக் காத்திட வென்றே. (4)

முருகன்

வேறு

(இருபத்தொரு சீர் ஆசிரிய விருத்தம்)

6 புனங்காத்துக் கிளிகடிந்த புண்ணியநற் குறக்கொடியை,
புகழ்கானில் வேட னாகி,
பொல்லாத வாதிட்டு நிற்கவவள் கூவியதால்
போய்மறைந்து வேங்கை யாகி,
பொன்மாலை கழுத்திட்டுப் புகழ்மாலை கொண்ட
போற்றியே வாழ்த்து ரைக்க [மரர்

வனங்காத்த கரியவனின் உளஞ்சேர்ந்த மருமகனென்
றுலகமெலாம் வணங்கி நிற்க,
வளர்கோடி உயிர்பலவும் படைக்கின்ற வேதா
வம்பிட்டு மறைகள் கூறி, [வை
வளங்கண்ட தமிழ்மாலை பலகோடி யதுசூடி
வாழ்கந்த வேள்நி னைப்பாம்;

தனங்காத்த பூதமெனப் பொய்காத்த மனமுடையோர்
தாரணியில் வாழ்வு கொள்ளத்
தனியரவப் பாயலிடை அறிதுயிலில் ஆழ்ந்துலகு
தான்வாழ மூர்த்தி யாகித்
தத்து-புனல் அள்ளிவரும் சரயுநதிக் கோசலத்
தானெழுந்த இராம பாதம் [தில்

தினங்காக்க வேணடுமெனத் துதிபாடும் நாவுடைய
தெய்வநிலைக் கம்ப நாடன்
தேடரிய வரங்கொண்டு பாடரிய புலவனெனத்
தென்தமிழர் போற்றி செய்யத்
திகழ்கின்ற இக்குழவி அருள்கவிதை உலகத்தில்
திகழட்டும் மன்னன் என்றே. (5)

நான்முகன்

7 மறையாதி நான்கென்ற கடலோடி யமுதுண்டு
நாவாலே பொழியும் மேகம்,
மகிழ்கலைகள் பலகொண்ட பெருமாட்டி,
தனிலேறு வெள்ளை மஞ்ஞை, [வெண்கமலம்
மகிழ்ந்தேறு நாவுடையன் எண்ணாது பல்லுயிர்
மண்வாழத் தந்த வேதா [கள்
குறையாத கலையிலகும் உலகிலறம் தழையவரு
குன்றுடைய கந்த வேளால்;
குட்டுற்றுச் சிறையுற்றுக் குளிர்வேத மறிவுற்றுக்
குறையில்லாப் பான்மை யுற்றுக்
கோடிபல தேவர்குழாம் துதிசெய்யக்
குறள்மாயன் நாபி பூத்து, [கண்வளரும்
முறையாகப் படைத்துலகை நிறைவிக்கும் நான்
முன்னின்று வணங்கு வோமே; [முகனை
முழுதுலகும் வாழவென ஏந்தியவத் தனியாழி
முழங்கிவரு சங்க மாதி
முற்றுநனி மறைத்துநிறம் மறைக்காமல் தயர
முதல்மகனாய்ப் போந்த மூர்த்தி [தற்கு
இறையாகும் எனக்கவிதை விளக்கேற்றிச் சொற்
இனியபடி அர்ச்சித் தேற்றி [களினால்
இதயமதில் இராமகதை எனும்பெயரில் வரு
தரவருமோர் குழவி தன்னை [கவிதை
எழிலுவச்சர் குலத்திலணி செய்யவரு
[கம்பனெனும்
இனியவனைக் காக்க வென்றே. (6)

இந்திரன்

வேறு

(பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்)

8 அணிசேர் வேள்வி ஆயிரங்கள்
அவைசெய் துயர்ந்த தவமுடையான்;
அமரா வதிக்கோர் அதிபதியான்;
அழகார் சிந்தா மணியுடையான்,
பணிசெய் தேவர் பலருடையான்,
பாராள் குலிசப் படையுடையான்,
பசுவாய்க் காம தேனுடையான்,
பாதம் பணிந்து பரவுதுமே;
மணிசேர் மார்பிற் பொன்னுடைய
மாயன் உலகில் அறம்வளர
மனங்கொண் டுலகில் தோன்றியதை
மலர்வாய் இதழிற் கவியரும்ப,
பிணிசேர் பிறவிக் கடல்நீந்தப்
பெரிதும் துணையாய்ப் பெறுகவெனப்
பேசும் கம்பன் எனுங்குழவிப்
பெம்மான் தன்னைக் காக்கவென்றே. (7)

திருமகள்

9 செந்தா மரையிற் சேரன்னம்,
சீர்சால் மாயன் அடிவருடி,
சிந்தைக் கோயில் குடிகொண்டு
செகத்திற் கருளும் பெருமாட்டி,
சிந்தா குலந்தீர் செல்வமகள்,
செழிக்கும் கருணைத் திருக்கோயில்,
செல்வப் பயனை உலகுணரச்
செய்யும் திருவை வணங்குதுமே;
வந்தா தரிக்கும் இனியகுணம்
வாய்த்த பெம்மான், தந்தையுரை
வாழக் கானிற் கேகியவன்
வாழ்க்கைச் சரிதம் கவியாக்கி;
கந்தாம் இவன்தாள் பற்றுெனக்
காட்டும் கருணைப் பெருங்கவியை,
கம்பன் என்னும் திருமகனைக்
கருணை செய்து காக்கவென்றே. (8)

கலைமகள்

(வேறு)

(பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்)

10 கற்றோர்கள் நெஞ்சத்தில் விளக்காகி, ஒளிர்கின்ற
கலையாகி விளங்கு வாளை,
கள்ளூறி வழிகின்ற தவளநிறக் கமலத்தில்
காலமெலாம் இலங்கு வாளை,
பற்றோடு வேதங்கள் படைத்தோதும் பிரமாவின்
படர்நாவில் தவிசு கொண்டு;
பல்கலையும் வளர்க்கின்ற வெள்ளன்னம் என
பாதங்கள் பழிச்சு வோமே; [வந்தாள்
நற்றாயர் தம்முள்ளே வளர்கின்ற கைகேயி
நாவெழுந்த வரத்தி னாலே
நானிலம் துறந்தேகிக் கானுண்டு இரட்சித்த
கவினிராம வள்ளல் தன்னை,
பற்றாசை விட்டொழியப் பற்றுங்கள் அறம்வளரும்
பாவங்கள் நீங்கு மென்றே
பாடவரு கம்பனெனும் பாவலர்க்கு மன்னவனைப்
பரிந்துநிதம் காக்க வென்றே. (9)

சத்தமாதர்

(வேறு)

(பதினாறுசீர்ச் சந்த விருத்தம்)

11 புகழ்மறை உணர்த்திய பூவார் முகத்தினள்,
புரமெரி சடையவன் பாகத் துடையவள்,
புனிதர்கள் உயர்வுற வேலைப் படைத்தவள்,
பொருகடல் தனிலொரு பாம்பில் அமர்ந்தவள்,
அகழ்ந்தெயி றதுகொடு பூமி பெயர்த்தவள்,
அமரர்கள் அரசனின் காதல் மனத்தவள்,
அரவது தரித்தவன் ஆடக் களித்தவள்,
அணங்கிவர் எழுவர்கள் தாளை வணங்குதும்;
இகழ்பவர் புறமுற ஏந்து புயத்தினன்,
இனியநல் வடிவொடு காணு முகத்தினன்
எழில்பெறு கயலொடு காவிப ழிச்சிடும்
இருவிழி அமுதொடு பார்த்து வளர்ந்தவன்,
மகிழ்வுறு முயர்தமிழ் வாழ வகுத்தவன்,
மனமகிழ் கவியர சான நலத்தவன்,
மதிநிகர் முகமுள கம்பன் எனுமொரு
மயல்தரு குழவியை நாளும் புரக்கவே. (10)

2. செங்கீரைப் பருவம்

(வேறு)

(பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்)

12 மண்ணாதி பூதங்கள் இயல்கின்ற உலகத்தில்
மறைநான்கும் வாழ வைத்து
மகமாதி புரிகின்ற முனிவோர்தம் துயர்நீங்க
மாண்பாரும் வில்லை யேந்தி,
கண்ணான விசுவமுனி ஆற்றிவரு மாவேள்வி
கானகத்தே புரிந்து காத்துக்
கனியெழில்வாய் முத்துநகைக் கயல்விழிகொள்
கவினிலவின் கரங்கள் பற்றிப் [சீதையெனும்
பண்ணாரும் இன்பநலம் பார்த்தவள்தன் சரிதை
பசுந்தமிழால் பாட வந்த [யினைப்
பாவரசே! கவியமுதே! தத்துவங்கள் சுவையாகப்
பழுத்துவரக் கவிதை யீன்று
விண்ணாரும் தேவர்களும் வியக்கவரு தமிழ்க்கம்ப!
செங்கீரை யாடி யருளே!
விளைகின்ற சொல்மாரி பொழிகின்ற கவிமன்ன!
செங்கீரை யாடி யருளே! (1)

13 காராழி நிறவண்ணன் அவதாரம் பலவாகிக்
காட்டுமுயர் உண்மை யெல்லாம்
ககனங்கள் முடியாக நின்ருடும் உலகத்தில்
கடல்போலப் பெருகு மக்கள்;
நீராழி அலேபோல வருகின்ற துயரத்தில்
நினேவின்றிச் சிக்கி, என்றும்
நிலேயாக இருக்கின்ற துயர்மாற்றி இன்பங்கள்
நிதங்கோடி எய்த வைக்கும்
பேராளன்! என்றுமறை புகழ்ந்தோத வருகின்ற
பெம்மான்தன் லீலே யெல்லாம்
பெருங்காதல் களிகூர உருவான சொல்லாலே
பேசுகவி மேக மாஞய்!
சீராளு கின்றகவி பாராள வருகம்ப!
செங்கீரை யாடி யருளே!
செழிக்கின்ற கவிமாரி பொழிகின்ற கவிமன்ன
செங்கீரை யாடி யருளே! (2)

14 காரணியும் மைநிறத்துக் காகுத்தன்; அறம்வளர்த்த
கண்ணாளன்; உலகிற் கெல்லாம்
கதியளித்து வளங்காக்கும் கருணைமனத் தயர
காதல்மனக் கோயி லுள்ளான்; [தன்தன்
ஆரணங்கள் ஐயா!வென் றேலமிடும் தனிச்கீர்த்தி
அத்தனையும் தனக்கே யாக்கி,
அமரர்களும் முனிவர்களும் அடிபணிய மறம்
அரக்கரினம் பொருது சாய்த்த [மாற்றி
நாரணன்தன் விளையாட்டை; நற்கவிஞன் வான்மீகி
நவின்றபடி அறிந்து, கான
நாரதன்தன் யாழிசைபோல் நற்றமிழின்
நவிலவரு கம்ப வள்ளால்! [இசைகூட்டி
சீரணியும் சோணாட்டுத் திருவழுந்தூர் வாழ்புலவ!
செங்கிரை யாடி யருளே!
செழிக்கின்ற கவிமாரி பொழிகின்ற கவிமன்ன
செங்கீரை யாடி யருளே! (3)

15 பணிசுமந்த திருநாடு பலசுமந்து வளங்கொழிக்கப்
பருவத்து மாரி யென்னப்
பாவலர்தம் நாசுமந்த பாசுமந்தே அறத்துவழிப்
பாராளும் மன்ன வர்க்குள்
அணிசுமந்த புகழ்சுமந்து, தேவர்களும் அடிபணிய
அன்புருவாய் ஆண்ட கோமான்
ஆட்சியிலே கோசலத்தில் வறுமையின்றி
அளப்பரிய செல்வ மோடு
மணிசுமந்தே இலம்விளங்கமனம்சுமந்தமகிழ்வினொடு
மாநிதியக் கடலில் மூழ்கி,
மலர்முகத்தில் நகைசுமந்து வாழ்ந்தவகை இந்
மலரவென எண்ணிச் செம்பொன் [நாட்டில்
மணிசுமந்த கலன்களெனப் பொலிகவிதை தருகம்ப!
செங்கீரை யாடி யருளே!
மதிக்கின்ற புலவோர்கள் துதிக்கின்ற தமிழ்வாண!
செங்கீரை யாடி யருளே! (4)

16 வானுடர் தந்தநல் அமுதமாய் வடித்தசொல்
பேசுவாய் குதலை சிந்த,
வண்டாடு மலர்கொண்ட கருமேக வான்குழற்
கற்றையோர் நுதலி லாட,
மானுடு விழிமாதர் கண்ணேறு படுமென
வைத்தவோர் திலக மாங்கே
மதியான திருநுதல் வியர்வையில் வழிந்தோட
மணக்குமுன் மேனி யாட,
தானுடு தண்டைகள் அணிந்தவக் கால்மலர்
தாளமோ டொன்றி யாட,
தமிழ்கோடி எழுதுமோர் கைமலர்கள் ஊன்றியே
தானுடு கின்ற தேவா!
தேனுடு சொல்மலர் நாவாடு கம்பனே!
செங்கீரை யாடி யருளே!
செழிக்கின்ற கவிமாரி பொழிகின்ற கவிமன்ன!
செங்கீரை யாடி யருளே! (5)

17 நிலவுற்ற நெற்றியில் இடமுற்ற சுடரென
நிலைத்தபொற் சுட்டி யாட,
நினைவுற்ற தமிழெனும் நித்திலப் பொன்மகள்
குடிகொண்ட நெஞ்சி லேறி,
கலையுற்ற நிலவென விளங்குபொன் மாலைகள்
கவினுடன் இலங்கி மின்ன,
கவியுற்ற தீந்தமிழ் புவியுற்று வாழ்வுறக்
காகுத்தன் காதை சொல்லி,
மலையுற்ற அருவியாய்க் கவிவந்து பொழிந்திட
மகிழ்வோடு வந்த தேவே!
மலருற்ற தேனென இனிக்கின்ற கவிக்கனி
மற்றதன் சுவையை எல்லாம்
சிலையுற்ற இராகவன் புகழெனச் செப்பினுய்!
செங்கீரை யாடி யருளே!
செழிக்கின்ற கவிமாரி பொழிகின்ற கவிமன்ன!
செங்கீரை யாடி யருளே! (6)

(வேறு)

(பன்னிரு சீர்ச் சந்த விருத்தம்)

18 கருமுகில் எனவரு குழல்மிசை ஒளிவரு
கதிர்மணி படர்ந்தாட,
கயலென வருவிழி புரள்சிலை படுமதி
முகமது களித்தாட,
ஒருதனி உலகிடை எழுமதி ஒளியுடன்
உலவிடு குழையாட,
உயரற மெனுமழை யதுவிழ எழுபயிர்
உனதுரை தனில்மேவ,
வருபனி எனவரு சிறுவியர் வுனதுடல்
தனிலுடன் வழிந்தோட,
வளர்பிறை எனுநுதல் மிசையினிற் பொலிதரு
சிந்துரம் மணநாற,
தருபகை வெலுதமிழ் மகிழ்வுற வருபவ!
செங்கோ செங்கீரை
தமிழ்வளர் சடையன் கொடைவளர் புலவ!
செங்கோ செங்கீரை. (7)

(வேறு)

(பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்)

19 நெட்டிதழ்த் தாமரை தனைவேத னுற்றதால்
நீள்புவியிற் பீடு கொள்ளும்;
நித்திலம் தனைமங்கை மூரலுக் குவமையென்
றோதிட நின்று வாழும்;
பட்டிதழ் வெண்கமலம் தனிலந்தக் கலைமகள்
வாழ்வதாற் பெருமை சேரும்;
படங்கொண்ட பொறியரவம் தனையந்தச் சிவன்
படமெடுத் தாடி நிற்கும்; [கொளப்
மொட்டிதழ் மலருற்ற வேதனை ஈன்றதால்
முளரிக்கோர் பீடு சேரும்;
முத்துமிழும் அலையாழி தனிலந்த மாயனார்
துயில்கொள்ள முதன்மை கொள்ளும்;
கொட்டிதழ்த் தேனென்ற தமிழ்வாழ வைத்தவா!
செங்கீரை யாடி யருளே!
குலமுற்ற கவிஞனாய் நலமுற்ற கம்பனே!
செங்கீரை யாடி யருளே! (8)

20 பொங்கிவரு கின்றகரு முகில்பொழிய விழுந்தமழை
முழங்கிவரை மீதி ருந்து
முத்துக்கள் ஒருகோடி எனத்துளிகள் சிதறஒலி
முழக்கிவீழ் அருவி யாகி,
கங்கையணி சிவன்சடிலத் திருந்துபுனல் பொழிவ
கால்பிரிந் தொன்று சேர்ந்து, [தெனக்
கயல்விழிகள் கொண்டுமலர்த் துகிலணிந்தே
தன்மேனி சார்த்திக் கொண்டு [அகிலாரம்
மங்கிவரு மறியாமைப் புலமுழுதே பயிர்வளரக்
கல்விநீர் பாய்ச்சும் ஆசான்
மாண்பினையொத் தோடிவரும் நதிவளர்ந்து
கோடியென மலர்ந்து நிற்க, [காக்கள்பல
செங்குமுத மிடைவாழும் செய்ச்சடையன் தருபுலவ!
செங்கீரை யாடி யருளே!
செழிக்கின்ற கவிமாரி பொழிகின்ற கவிமன்ன!
செங்கீரை யாடி யருளே! (9)

21 மழையுயரத் திருந்துவிழ, மற்றதன்நீர் நிலம்பாய,
மண்குளிர, உழவ ரெல்லாம்
மனமகிழ்ந்து, கொழுமுகத்தை ஏந்தியதோள்
மண்ணுழுது பண்ப டுத்திக் [வீறுபெற,
குழையிட்ட நிலமதனில் விதைத்திடுநெல் பசும்
கூட்டமெனத் தலையெ டுக்கக் [பாம்புக்
குறுமதியர் போலவிடைச் சிலகளைகள் புகுந்து
காண்உழவர் குறைய கற்றித் [வரக்
தழையவதற் குரமிட்டுத் தாளறுத்துக்கொண்ட பொலி
தனிவருவாய் தருதல் கண்டு;
தனித்தொரு மருதமெனும் இசைபுகன்று
தரமுயர்ந்த சோழ நாட்டில், [களிப்பேறும்
செழியரெனத் தமிழ்வளர்க்கும் எழில்குலவு தமிழ்க்
செங்கீரை யாடி யருளே! [கம்ப!
செழிக்கின்ற கவிமாரி பொழிகின்ற கவிமன்ன!
செங்கீரை யாடி யருளே! (10)

3. தாலப் பருவம்

(வேறு)

22 பங்கப் பழனத் தெழுவாளை
பாயத் தெங்கின் காயுடைந்து
பாயும் புனலோ டெழுகுவளைப்
பைந்தேன் பாயக் கமலமலர்
தங்கும் அன்னப் பார்ப்பினங்கள்
தன்வாய் மடுத்தே உண்டுவக்கத்
தளரும் மடிசார் மேதியினம்
தன்வாய் குதட்டும் கருநீலம்
பொங்கும் செந்தேன் வழிந்தோடிப்
பூவார் கழனித் தடம்பாயப்
பொலியும் சாலி வான்பார்க்கும்
பொன்னித் துறைசேர் வளநாடா!
கங்கைப் பெருக்காய்க் கவிபுனையும்
கம்பா! தாலோ தாலேலோ!
காகுத் தன்தன் சீர்பாடும்
கண்ணே! தாலோ தாலேலோ. (1)

23 ஓதும் வேதத் துட்பொருளை,
உணரத் துடிக்கும் மறைமுனிவர்;
உள்ளம் அடக்கித் தன்காலில்
ஒருகால் மடக்கி நிற்பதுபோல்;
மோதும் அலைகள் தம்நடுவண்
முயன்றோர் காலில் நின்று, கயல்
முகத்தைப் பார்க்கும் கொக்கினங்கள்
முன்னின் றொலிக்கும் நீர்த்துறையாய்!
வேதம் ஒலிக்கும் அந்தணர்போல்
விரும்பி ஒலிக்கும் தவளையினம்,
விரைந்து துள்ளக் கயலினங்கள்
விழுந்து புரளும் நாடுடையாய்!
காதல் மணக்கக் கவிபுனையும்
கம்பா! தாலோ தாலேலோ!
காகுத் தன்தன் சீர்பாடும்
கண்ணே! தாலோ தாலேலோ! (2)

24 பொன்னேர் தூக்கிப் பரிதிவரப்
போதும் உழவர் கொழுகிழித்துப்
போடும் சாலின் இடைநடுவில்
புரளும் வெண்மைச் சங்கினங்கள்,
மின்னும் கெண்டை யுடன்தழுவி,
மெல்ல நகர்ந்து கரையேற,
மின்னூர் மருங்கும், வெண்ணகையும்,
மேவும் கிரிபோற் பெருந்தனமும்
துள்ளித் திகழும் இளமடவார்
தோளைத் தொட்டே அவைகாட்டித்
தோயும் இன்ப வெள்ளத்தின்
துறையை அறியா திருக்கின்ற
கன்னற் பொன்னி வளநாட்டுக்
கம்பா! தாலோ தாலேலோ
காகுத் தன்தன் சீர்பாடும்
கண்ணே! தாலோ தாலேலோ. (3)

25 குன்றைப் போல்செஞ் சாலிதனைக்
குவித்துப் பசித்தார் முகம்பார்த்துக்
கொடுக்கும் சடையன் கொடைபோலக்
கொட்டும் குடகுப் புனல்வழிந்து
சென்றே ஆருய்க் கால்காலாய்ச்
செல்லக் கொழிக்கும் வளர்காவில்
செழிக்கும் பச்சைப் புல்லுண்டு
சித்தம் மயங்கித் தடுமாறி
நின்றும் புரண்டும் புனலிடையில்
நிமிர்ந்தும் படுத்தும் நீருழக்கி
நிலைக்கா தெழுந்து மாலைவர
நினைந்து பாலை முலைவழியே
கன்றுக் கிரங்கிச் சொரிநாடா!
கம்பா! தாலோ தாலேலோ
காகுத் தன்தன் சீர்பாடும்
கண்ணே! தாலோ தாலேலோ. (4)

26 முத்துப் பவள முழுநிலவை
முழுதும் வெல்லும் முகமடவார்
முல்லைக் காடு விரிந்ததென
மூரல் விரிய நகைவழிய,
கொத்துச் சுமந்த செஞ்சாலி
குவிக்கும் உழவர் முகமலர,
கூனற் பிறைவான் தனில்மேவ,
குழல்மேற் குவளைப் பூவொசிய,
சத்தம் இடுங்காற் சலங்கையுடன்
சாரும் மடவார் தோள்தழுவி,
சால முயங்கி மணிச்செவ்வாய்
சார்ந்த தேனை உண்டு, மனம்
தத்தும் இன்ப வளநாட்டுக்
கம்பா! தாலோ தாலேலோ.
தண்ணூர் பொன்னிக் தமிழ்வடிவே
தலைவா! தாலோ தாலேலோ. (5)

(வேறு)

(பன்னிரு சீர்ச் சந்த விருத்தம்)

27 மழைவிழ வருபுனல் தனிலொரு துளிதனை
மலருடல் தனிலேற்று,
மகிழ்வுற வருமது திகழொளி முத்தென
மண்ணினில் வெளியாக,
இழையணி மகளிர்தம் இனியசொல் வருமணி
இதழிடை வெளித்தோன்றும்;
இன்னகை தரவுடன் அரும்பிய பல்லினின்
எழில்தனைக் காணவென,
தழைதரு கமுகினை வென்றவர் கழுத்திடைத்
தனிலொரு மாலையெனத்
தகைவுற எழில்மயில் எனவரு கின்றதோர்
தையலர் நாடுடையாய்!
கழையினை வெல்மொழி கொண்டுல குயர்வுறும்
கம்பா! தாலேலோ
கலைபயில் அரசர்க ளுளமுறை கின்றதோர்
கண்மணி! தாலேலோ. (6)

(வேறு)

(பன்னிரு சீர் ஆசிரிய விருத்தம்)

28 பொங்கும் கமலப் பூவிடையில்
பொலிந்த தேனும், கதிர்ப்பகையின்
புல்லி வடித்த புதுத்தேனும்,
புரண்டு பாய்ந்தே கால்காலாய்
எங்கும் பெருகக் கழனியிடை
இறங்கும் மள்ளர் கால்பின்னி
இடர்ப்பா டுற்றுத் தடுமாற,
எழில்மின் வென்ற இடைமாதர்
தங்கை கொண்டு தழுவியவர்
தடந்தோள் பற்ற, ஒளிமுத்தம்
தான்கண் டங்கு நகைசெய்யும்
தணியாக் காதல் வளநாடா!
தங்கக் கவிக்கோர் தாயாகித்
தாங்கும் கம்பா! தாலேலோ!
தண்ணார் பொன்னித் தனிவடிவே!
தலைவா! தாலோ தாலேலோ! (7)

29 சாரும் மேகம் சூலுடைந்து,
சடையன் கொடைபோல் மழைபெய்யச்
சங்கக் கவிபோல் அதுபெருகிச்
சங்கும் மீனும் இனமணியும்
சேரக் குதித்துக் கதித்தோடி,
செய்வாய் நெற்பெண் தாள்பார்த்துச்
செல்லும் விரைவுக் காற்ருது
சேல்மீன் புரண்டு சிலிர்த்தோட;
வாரார் கச்சுத் தனமாதர்
வாழைக் கால்கள் தனைத்தழுவி
வளைந்து தவழ்ந்து நெளிந்தோடும்
வளமார் பொன்னி வடிவழகா!
தாரார் தெய்வத் தமிழ்க்கொருசேய்த்
தமிழா! கம்பா! தாலேலோ
தண்ணூர் பொன்னித் தமிழ்வடிவே!
தலைவா! தாலோ தாலேலோ. (8)

பாம்பும் மதியும் பகைமாற,
படரும் வேணி தனிற்சூடும்
பரமன் அருளுக் குரியமுனி;
பரவை ஏழும் வயிறடக்கித்
தேம்பும் தேவர் துயர்தீர்த்த
தெய்வப் புலமை அகத்தியனுர்,
திருக்கைக் கரகத் துள்ளடங்கித்
திகழும் வையம் வாழ்வுபெற,
கூம்பா மலரும் கழனிகளும்
குளிர்ந்து வளரக் கால்வாங்கி,
கோதை மகளிர் உடைநழுவக்
குதிக்கும் பொன்னித் திருநாடா!
காம்பார் பூப்போல் கவிதைதரு
கம்பா! தாலோ தாலேலோ
காகுத் தன்தன் சீர்பாடும்
கண்ணே! தாலோ தாலேலோ. (9)

31 அள்ளற் பழனத் திடைமலரும்
ஆம்பல் நிகர்த்த விழிமாதர்
ஆகம் தழுவு தோள்மள்ளர்
அசையும் அடிக்கீழ்; கயல்மீன்கள்
துள்ளித் திரிய, தங்காதல்
தோகை மடவார் விழியென்று;
தோன்றும் காம மயக்கத்தில்
தோயும் அன்னூர் தனியின்ப
வெள்ளத் தழுந்திச் செயல்மறந்து;
வேளை வெல்தற் கியலாமல்
விளங்கும் காட்சி விளைமருத
வேலித் திருநா டுடையவனே!
வள்ளற் சடையன் வாழ்வுதர
வந்தாய்! தாலோ தாலேலோ
வாழும் கவிதைத் தமிழ்கம்ப!
வள்ளால்! தாலே தாலேலோ. (10)

சப்பாணிப் பருவம்

வேறு

(பதினான்குசீர் ஆசிரிய விருத்தம்)

32 கத்துகடல் சூழ்ந்தபுவி இடையெழுந்த மனிதகுலம்
கடலனைய துயரி லாழ்ந்து;
கவிழ்ந்தலையில் சிதைந்தகலம் என்றபடி பலவாறு
கவலுற்று வருந்து போதில்;
முத்திநெறி விளக்கவரு கின்றதனி முதல்வனென
மூவாத வேத நான்கும்,
முழங்குமொரு பீடுடைய கார்மேனித் தனியழகன்
முத்தெறியும் கடலை விட்டு,
பத்தர்மனம் இன்பமுறப்பாம்பணையைத்துறந்திந்தப்
பாருதித்த செம்ம வாகி,
படருமறக் கொடிவளர வில்லெடுத்த பரந்தாமன்
திருவடியைப் பணிந்து, பாவால்
சத்தமிடும் ஆழியலை எனக்கவிதை எழுதியகை
சப்பாணி கொட்டி யருளே!
சடையர்கோடை அளக்கவரு கின்றதமிழ்க்
கம்பமுனி
சப்பாணி கொட்டி யருளே! (11)

33 கருதரிய பல்கோடி அண்டங்கள் கடந்தோங்கி
வளர்கின்ற கரிய மாயன்;
கடலோடு மேகங்கள் கருநீலம் மையிவற்றின்
வண்ணங்கள் கண்ட மேனி;
ஒருகோடி எண்ணங்கள் உதிக்கின்ற இதயத்தில்
ஒளிமேரு போல நிற்க,
உயர்கின்றகோதண்டம் என்கின்ற சிலையேந்தி
உலகங்கள் நீடு வாழ
மருகொண்ட துளவத்தின் மணம்நாற வருகின்ற
இராமனும் மனித தெய்வ
மாண்புரைசெந் தமிழ்க்கவிதை மனங்கனிய
மலர்கவிதை மன்ன னாகி [உரைசெய்து
தருகொண்டல் எனக்கவிகள் வரைகின்ற கைமலரால்
சப்பாணி கொட்டி யருளே!
தமிழ்தந்த சடகோபர் உளங்கொண்ட கம்பமுனி!
சப்பாணி கொட்டி யருளே! (2)

34 பொங்கரவப் பாயலிடைப் பூமகள்தன் கால்வருடப்
பொருந்துதுயில் கொள்ளுங் காலை
பூவிலயன் முதற்றேவர் தும்புருநா ரதர்முதலாப்
பொருந்தியவண் போற்ற, வாவி
தங்கரவம் தனிலன்று நடனமிடும் சிறுகுழவி
தானுகி வந்த மாயன்;
தாங்கரவம் இளையோனுய், *சங்காழிதன்னிரண்டு
சோதரராய்த் தானு திக்க,
அங்கரவம் இட்டகடல் இலங்கைவளர் அரக்கரினம்
அத்தனையும் அழிக்கும் தீயாய்
அவதரித்த காதைதனை ஆன்மாக்கள் [உய்திபெறத்
தேனுடனே அமுதும் சேர்த்து,
சங்கரிதன் வில்லழகை இங்குலகில் எழுதியகை
சப்பாணி கொட்டி யருளே!
சடையர்கொடை அளக்கவரு கின்றதமிழ்க்
சப்பாணி கொட்டி யருளே! [கம்பமுனி!
(3)

---

* சங்கும் ஆழியும்—பரத சத்துருக்களாராய்ப் பிறந்தமை.

35 சம்பரனை அழித்ததய ரதன்மகனை விசுவமுனி
அன்றொருநாள் சபையில் வந்து
சாருமொரு வேள்விதனைக் காக்கரகு
எனவுரைத்த சால்பு கேட்டுக் [ராமனைத்தா
கும்பமத களிற்றிடையில் அம்புவந்து புகுந்ததென
கொடுந்துயரால் வருந்தி, வாடிக்
குழைவுற்று வருந்துதய ரதனுளத்துக்
குளிர்கவியாற் குவல யத்தோர் [கடுந்துயரைக்
அம்புவியில் இனியமகன் தனைப்பிரியும் தந்தைமனம்
அடைதுயரைக் காண வென்றே
அழகொழுகு தமிழ்க்கவிதை பழகிவரு
செய்யுளினால் ஆக்கி வைத்த [கின்றதனிச்
கம்பமுனி! பொதியமலைக் கும்பமுனி ஒத்தவன்நீ!
சப்பாணி கொட்டி யருளே!
கவிகோடி வரைகின்ற கைகொண்ட தமிழாளி!
சப்பாணி கொட்டியருளே! (4)

36 விண்ணிருந்து நீங்கியதோர் மின்கொடியு மிப்புவியில்
மேகலையை இடையில் தாங்கி,
விரிகமல மேற்குவளை இரண்டுடனே
வெண்டரளம் ஒளியைக் காட்ட, [பிறைதாங்கி,
பண்ணெழுந்து வந்ததென வருகின்ற பாலமுதை
ஒத்தபசுந் தோகை என்னப்
பஞ்சடிகள் கொண்டவெழிற் சீதையெனும்
விழியாலே பருகிக் காதல் [பேரமுதை
கண்ணளவில் வைத்தரகு ராமனுளத் தெழுவிரகக்
கடுநோயால் வருந்தும் போது
கதிர்சிவன்தன் நுதல்கிழித்த விழியெனவான்
காகுத்தன் மகிழ வென்று [உதித்திட்டான்
தண்ணியசெந் தமிழ்க்கவியால் வரைந்தகர
சப்பாணி கொட்டி யருளே! [மலருடையாய்!
தமிழ்தந்த சடகோபர் உளங்கொண்ட
சப்பாணி கொட்டி யருளே! [கம்பமுனி!
(5)

37 வையகத்தார் எனையிகழ இவ்வுலகில் மாசெனக்குப்
பலவாருய் வந்து சேர,
வளையேந்து கையுடையான் வரலாற்றுத்
உலகத்தே வாழ்வா ரெல்லாம் [தேனமுதை
எய்தவெனச் சீர்கூட்டி இசைசேர்த்து முற்புலவர்
இன்பமுடன் இயம்பி வைத்த
இராகவன்தன் திருச்சரிதம் நான்விரும்பி இசைத்
எனக்கேட்பின் உயர்ந்து தோன்றும் [ததுவேன்
தெய்வநிலை பெற்றகதை மாட்சியுல கறியவென
விருத்தத்தால் இசைத்தே னென்று
தென்றமிழர் வாழ்வுபெற வந்தகவிச் சந்தநிலை
திகழ்கின்ற பாவ ரைந்த
கையுடைய கம்பனெனும் பொய்யறியாக் கவிமகன்நீ!
சப்பாணி கொட்டி யருளே!
கவிகோடி வரைகின்ற கைகொண்ட தமிழாளி!
சப்பாணி கொட்டி யருளே! (6)

(வேறு)

(பன்னிருசீர்ச் சந்த விருத்தம்)

38 கங்கையின் இருகரை ஆண்டிடு காவலன்;
கருமுகில் வென்றவனோர்
களிறென வருமுடல் கொண்டவன்; வலிதரு
கார்சிலை தாங்கியவன்;
பொங்கிடு மன்பினில் அன்னையை நிகர்தரு
புண்ணிய வடிவுடையான்;
பூமகள் நாயகன் மேல்வளர் பத்தியில்
பொலிதரு மனமுடையான்;
பங்கமில் நட்பினுக் கொருகுகன் என்றுல
கோதிடு பரிவுடையான்;
படர்சிலை வேடுவ னின்புகழ் புவிமிசை
பலருளம் போற்றுவணம்
கொங்கலர் மலரென வருகவி எழுதுகை
கொட்டுக சப்பாணி!
குளிர்புனற் காவிரித் துறைவளர் கம்பநீ!
கொட்டுக சப்பாணி! (7)

39 கண்டனன் கற்பினுக் கணியினை இலங்கையில்
எனவுரை கழறியவன் ;
கடக்கரு மலைபொரு கடல்கடந் தன்னையைக்
கண்டவன் ஆற்றலுளான்;
திண்டிறல் மலைநிகர் புயமலை கொள்சிறு
திருவடி என்றுலகோர்
தினமுறை பகர்தர வலிதனி அனுமனின்
தோள்வலி தீட்டியவா!
வண்டொலி செய்மலர் எழில்தர வருபுனல்
வழங்கிடு காவிரியாள்
வருகதி எனக்கவி வரைகவி மன்னவ!
உனைவழி காட்டியெனக்
கொண்டநற் புலவர்கள் உளமுறை நாயக!
கொட்டுக சப்பாணி!
குளிர்புனற் காவிரித் துறைவளர் கம்பநீ!
கொட்டுக சப்பாணி! (8)

தன்னுயிர் புகழ்க்கென விற்றவப் பறவையின்
தனிப்பெருஞ் சரிதையினை,
தாயவள் சீதையை வௌவிய ராவணன்
தனிமுடி சரித்தவனாய்;
மன்னுயிர் பரவிட வருதனித் தலைமகன்
தன்மனை காத்திடவே
மாபெரும் போர்முறை ஆற்றிய காலையில்
மற்றவன் சிறகினையே
தன்னொரு வாள்கொடு வீழ்ந்திட அரிந்தவன்
தாயுடன் தனியேக,
தளர்ந்தவன் வீழ்ந்துயிர் விடுமுனர் இராமனும்
தழுவிட உயர்ந்தவனின்
கன்னலை நிகர்சுவைச் சரித்திரம் எழுதுகை
கொட்டுக சப்பாணி!
காவிய மாலைகள் சூடிய கம்பநீ!
கொட்டுக சப்பாணி! (9)

41 நைவளம் எனுமிசை நவின்றிடு பண்பினில்
நடந்துடன் வருஞ்சீதை
நல்லெழில் பொருந்திய கருமுகில் அனையவன்
நகரினில் வரும்போது
கைவளை கழன்றிட ஒருதனி மகிழ்வுடன்
கண்கொடு நோக்கிடவே
கௌசலை தன்மகன் இருவிழி களுமவள்
கண்வலை சிக்கிடவே
மைவளை விழிமலர் அவளுரு மறைத்தவன்
மயங்கிய செய்தியினை
மன்மத வேதனை படுமவள் தன்மையை
வளமார் கவிவடிவில்
தைவளம் தருமணி நெல்லெனத் தந்தகை
கொட்டுக சப்பாணி!
தமிழ்நில முழுதொரு கவியினில் அளந்தகை
கொட்டுக சப்பாணி! (10)

★

5. முத்தப் பருவம்

(வேறு)

(பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்)

42 வாளை தாவும் வயல்களிடை
வான்பாய் சாலி முகில்தடவ
வழியும் சாரல் ஆருகி
வரும்போ திடையில் எழுதெங்கின்
பாளை உடைந்து வருந்தேறல்
பாயப் பெருகும் புனல்நீத்தம்
பருகி வளர்ந்த பயிர்களெலாம்
பரதம் ஆடப் புள்ளினங்கள்
காளை முதுகின் மேலேறிக்
காணும் மருத வேலியுறை
கன்னற் பொன்னிக் கவியரசே!
கம்பா! வள்ளல் இராமனது
தாளைப் பாடும் வாய்மலரால்
தலைவா! முத்தம் தந்தருளே!
தண்ணூர் அமுதக் கவிபொழிவாய்த்
தளிரால் முத்தம் தந்தருளே!

43 வானின் றிழிந்து மாபூத
வைப்பாய் விளங்கி வையகத்தில்
வாழும் மக்கள் மனமிருந்து
வளரும் கருணைத் திருவடிவை,
கூனற் பிறையை நெற்றியெனக்
கொண்டாள் பேதைக் குளமுருகி,
கொற்றம் சுமந்த வில்முறித்த
குவவுத் திண்டோள் படைத்தவனை
ஞானம் சுமந்த வேதங்கள்
நாளும் அறியாப் பரம்பொருளை
நன்கு பரவித் துதிபாடி
நலமார் விருத்தக் கவியாக்க,
கானக் குயில்போல் பாடியசீர்க்
கனிவாய் முத்தம் தந்தருளே!
காமர் பொன்னி வளநாட்டுக்
கம்பா! முத்தம் தந்தருளே! (2)

44 அன்னச் சேவல் தாமரைமேல்
அணையக் கிடந்த பெடையன்னம்
அசையப் பூந்தேன் வழிந்தோடி
ஆற்றின் பாங்கர் வண்டலிட,
செந்நெற் சாலி அதில்வளர்ந்து
செழித்துத் தழைந்து வான்பார்க்க,
செல்வம் கொழிக்கும் திணைமருதம்
சேரும் இன்பத் திருநாட்டின்
மன்னர் மதிக்க உயரறங்கள்
மாரு வண்ணம் காக்கவென
மாயோன் எடுத்த அவதார
மாண்பைப் புகலும் இராமகதை
கன்னற் றமிழில் நவின்றிடுவாய்க்
கனியால் முத்தம் தந்தருளே!
காமர் பொன்னி வளநாட்டுக்
கம்பா! முத்தம் தந்தருளே! (3)

திங்கள் என்றும் கரியதெனத்
தெரியும் வண்ணம் தூயதெனத்
திகழும் வெண்மை தீற்றியவாய்
தேவன் வாயில் வைத்தூதும்
சங்கை வெல்லும் தவளநிறம்
சார்ந்த மனைகள் பலவாக
சாற்றும் கவிதை யடிபோலச்
சதிரிட் டாடும் இளமாதர்
தங்கள் மேனி எழில்மின்னத்
தானே விரும்பிச் சித்திரங்கள்
தத்தம் கண்ணை இமையாமல்
தங்கி இருக்கும் நகரழகைத்
தங்கக் கவியால் பாடியவாய்த்
தளிரால் முத்தம் தந்தருளே!
தண்ணார் அமுதக் கவிபொழிவாய்த்
தளிரால் முத்தம் தந்தருளே! (4)

46 வண்மை இல்லாக் காரணத்தால்
வறுமைச் சூழல் அறியாத
வாழ்க்கைத் திறத்தை உடையவர்கள்
வாழும் அணிகொள் கோசலத்தில்
திண்மை இல்லை எதிர்த்துவரும்
செறுநர் இல்லாக் காரணத்தால்
தேடும் உண்மை அங்கில்லை
தீய பொய்யும் இன்மையினால்
ஒண்மை இல்லை அங்குற்றார்
ஓங்கும் கேள்வி பெற்றமையால்
என்றே உரைத்துத் தன்மனத்தில்
உயர்ந்த நாட்டின் வளம்விரும்பும்
தண்ணார் கவிதை தந்திடுவாய்த்
தளிரால் முத்தம் தந்தருளே!
தண்ணார் அமுதக் கவிபொழிவாய்த்
தளிரால் முத்தம் தந்தருளே! (5)

47 சீதக் கடல்வாழ் நித்திலமும்
செழித்த சோலை இடைவளர்ந்து
சிரிக்கும் முல்லை அரும்பிணையும்
சேர்த்துச் செய்த வணம்விளங்கி
ஓதக் கடற்கங் கொலிகாட்டி
உவகை தருமோர் குதலைமொழி
உதிர்த்துப் பெற்றோர் மனங்களிக்க
உயிராய் விளங்கும் தமிழ்க்கம்ப!
வேதப் பொருளும் அறியாத
வீரன் புகழைச் சீராக்கி
விளம்பும் ஞானத் தனிவேந்தன்
விளங்கும் குருகூர்ச் சடகோபன்
ஓதும் கவிதை மாலைபெற
உரைவாய் முத்தம் தந்தருளே!
உயிரும் தமிழும் ஒன்ருக்கி
உணர்வாய் முத்தம் தந்தருளே! (6)

48 பத்திக் கடலின் இடைமுழ்கிப்
படமார் அரவில் நடம்பயின்று,
பார்த்தன் மகிழத் தேரோட்டி,
பாவந் தொலைய வருமாயன்
சித்தம் மகிழப் பாசுரங்கள்
செய்யும் ஆழ்வார் பன்னிருவர்
சிந்தைத் தடத்தில் பூத்தெழுந்த
செந்தேன் என்னத் தகுந்தமிழ்மேற்
பித்தம் கொண்டே இராமகதை
பேசி மகிழ்ந்து பேறுற்றுப்
பிரியா இன்பம் தனையெய்திப்
பிறங்கும் இதழ்வாய்க் கடல்கொடுத்த
முத்தம் திகழும் செந்துவர்வாய்
முதல்வா! முத்தம் தந்தருளே!
மூவாத் தமிழ்சொல் கம்பனெனும்
முதல்வா! முத்தம் தந்தருளே! (7)

49 ஞாலம் அளந்த திருவடிகள்
நயந்தோர் ஐவர்க் காகவென
நடந்த தூதின் திறங்கண்டு
நற்றேன் ஒழுகும் தமிழ்மாலை
காலம் முழுதும் நிலைக்கவெனக்
கருதிச் செய்த ஆழ்வார்தம்
கருத்துட் பொருந்தித் திகழ்மாயன்
கடல்சூழ் இலங்கை நகரரக்கர்
சீலம் தவறி மறமிழைக்கச்
சீறி யழித்த ரகுராமன்
சிறப்பைக் கவிதைச் சிமிழடக்கிச்
செகத்திற் களித்த சிறப்புடையாய்!
கோலக் கவிதை நலம்பாடும்
குளிர்வாய் முத்தம் தந்தருளே!
குறையாப் புலமைத் தமிழ்க்கம்ப!
குளிர்வாய் முத்தம் தந்தருளே! (8)

கோதை படைத்த தமிழ்கேட்டுக்
குளிரும் அரங்கத் தரவணைமேல்
கோலப் பள்ளி கொண்டருளும்
கோமான் உலகம் காத்தருளும்
ஆதிக் கடவுள் மாமாயன்
அகிலம் அளந்த திருவுடையான்;
அமரர்க் காக மோகினியாய்
அமுதம் தந்த கருணைநிதி
வேத மறிந்த நான்முகனை
விளைக்கும் நாபிக் கமலத்தான்
விளங்கும் அடியை முடிக்கணியாய்
விழைந்து பரவும் சடகோபன்
சீதப் புகழைப் பாடியவாய்ச்
செல்வா! முத்தம் தந்தருளே!
செந்தேன் பொழியும் கவிக்கம்ப!
செவ்வாய் முத்தம் தந்தருளே! (9)

51 வரிவில் ஏந்திக் கைகேயி
வரத்திற் கிசையச் சீதையுடன்
வலிசால் தம்பி பின்னுக
வனத்திற் கேகும் நிலைகண்டு
திருவே நகர்நீங் கிற்றென்று
தியங்கும் மக்கள் கட்டமெலாம்
தேடற் கரிய திரவியமாம்
தெய்வச் சிலையார் ரகுவேந்தன்
உரிமைக் குடையான் பின்னேகி
உள்ளம் வருந்திக் கவலையெனும்
உயர்பே ராழி வீழ்நிலையை
உணர்த்தும் செஞ்சொற் கவியரசே!
அருமைத் தமிழ்க்கோர் நாயகமே!
அணிவாய் முத்த மளித்தருளே!
அம்பொன் கம்பத் தமிழ்க்குழவி
அணிவாய் முத்த மளித்தருளே! (10)

★

6. வருகைப் பருவம்

(பன்னிரு சீர் ஆசிரிய விருத்தம்)

52 குன்றினை நிகர்த்த தோளிரண்டு
கொண்டு பொருத சம்பரனைக்
கொன்ற வந்நாள் உயிர்காத்த
கோதைக் கீந்த வரமிரண்டால்
நின்றுடன் மறுகித் தயரதனும்
நினைவில் இடங்கொள் கைகேயி
நீள்பொற் றுளின் கீழ்விழுந்து
நெஞ்சில் அமர்ந்த காகுத்தன்
இன்றளிர் மரங்கள் பொலிகானிற்
கேகா வரத்தைத் தந்தருள
இறைஞ்சிக் கிடந்து தடுமாறி
இறந்த நிலையை உளமுருக
ஒன்றிய கவியால் உரைத்துலகில்
உயர்ந்த கம்பா! வருகவே!
உயர்தா மரையை வென்றவடி
வுடையாய் வருக! வருகவே! (1)

53 வந்து முனிவன் எய்துதலும்
வளமார் அமரர் உலகாளும்
வானோர் தலைவன் இந்திரனும்
வந்தான் கடவுள் எனக்கருதிச்
சிந்தை மகிழ்ந்து சிறப்பெய்தச்
செல்வம் கொழித்து வளஞ்சேரச்
செங்கை இரண்டும் சிரங்கூப்பிச்
செகத்தைப் படைத்த முனிமுன்னே
முந்திப் பணிந்த விதம்போல
முன்னர்ப் பணிந்து புகழ்பெற்ற
மூவாப் பெருமைத் தயரதனார்
முதன்மைத் திறத்தை முத்தமிழில்
சந்தக் கவியாய்த் தந்ததமிழ்
சாரும் கம்பா! வருகவே!
சலியாக் கொடைசால் சடையன்வளர்
சால்பே! வருக! வருகவே! (2)

54 தருவார் வனத்துள் யானியற்றும்
தவத்திற் கிடையூ றியற்றரக்கர்
தன்னை அழித்துப் பெருவேள்வி
தடங்கல் இன்றி நிறைவேற
வருவார் அரக்கர் வலியழிக்க
வன்மைச் சிலையார் இராமபிரான்
வனத்திற் கென்னோ டுடனாக
வருதற் கியைவு தரவேண்டும்
பெருமைக் குரியாய்! என்றுமுனி
பேசக் கேட்ட தயரதனும்
பெரும்புண் தனிலே வேல்நுழையப்
பிறக்கும் துன்பம் தனையடையத்
திருவார் வேந்தன் துயர்தமிழில்
தீட்டும் கம்பா! வருகவே!
தென்னன் தமிழ்க்கோர் திருமணியாய்த்
திகழ்வாய்! வருக! வருகவே! (3)

மேவுங் கானில், நீர்வளஞ்சூழ்
மிதிலைக் கோமான் கண்டமகள்
மேகம் நிகர்த்த குழல்மாது
மென்சொல் வஞ்சி எழிற்சீதை
பூவின் இதழை வெல்பாதப்
போது பொருந்தி உடன்போதப்
போர்வில் ஏந்திந் போம்தம்பி
புதுமை யழகு பொருந்துவதாய்த்
தாவில் சாலை அமைத்தனைத்
தமிழிற் கவிதை அமுதூறத்
தந்த குழந்தாய்! தமிழ்க்கம்ப!
தன்னேர் இல்லாக் கவியரசே!
பாவிற் கெளியாய்! படர்நிலவே!
பழகும் தமிழாய் வருகவே!
பழனத் துழவர் புகழ்பாடும்
பண்பே வருக! வருகவே! (4)

56 சந்த மலர்த்தண் கற்பகத்தைச்
சார்ந்த நீழற் றலைவற்கும்
சலியா தென்றும் உயிர்களினைச்
சாடிப் பிடிக்கும் தென்றிசையோன்
அந்த கனுக்கும் தம்மனத்தில்
அச்சம் சேர அரசாள்வாய்!
அலைசூழ் இலங்கை தனையாளும்
அரசே! நெடிய மரஞ்சூழும்
இந்தக் கானிற் குன்வருகை
ஏனென் றியம்ப வேண்டுமென
இயம்பி உறுதி பலபகர்ந்தே
இறுதி கண்ட மாரீசன்
முந்தும் தன்மை பாடியசீர்
முதன்மைச் செல்வா! வருகவே!
மூவாக் கவிதைத் தமிழ்க்கம்ப!
முத்தே! வருக! வருகவே! (5)

57 தென்றல் தவழும் சோலையிடைத்
திகழும் மலர்த்தண் பூஞ்செடிகள்
தேனைச் சிந்த மதுமாந்தித்
திரியும் வண்டு குழலூத
மன்றல் கமழும் தாமரைகள்
மணிசேர் விளக்கம் போலாக
மண்டும் புனலில் விழுந்தவலை
மாரு எழினி தானுக
ஒன்றும் மேகத் தொலிகூடி
ஒலிக்கும் முழவாய்த் திகழ்ந்திலக
ஒளிசேர் தோகை நடமாட
உயர்ந்த குவளை அதுநோக்க
என்றும் மருதம் இருந்தவளம்
இயம்பும் கம்பா! வருகவே!
ஏருக் கிங்கோர் எழுபதுபா
இசைத்தாய்! வருக! வருகவே! (6)

58 கட்டும் சுரிகை, சினமீறிக்
கடித்த வாயும் புகையெழும்பக்
கனலும் விழியும் கொண்டவனாய்க்
கங்கைக் குடையான் குகனென்பான்
வெட்டும் மொழியும் அடங்காமல்
விளைந்த சொல்லும் துணையாக்கி
வேக முற்ற மனத்தானாய்
வேடர் குழாங்கள் வீறுகொளக்
கொட்டும் துடியும் ஒலிமுழக்கு
கொம்பும் கொண்டு பரதாழ்வான்
கூட்டும் சேனைப் படையெதிர்க்கும்
கொள்கை தன்னை, இன்பத்தேன்
சொட்டும் கவிதைத் திறந்தவழச்
சொல்லுங் கம்பா! வருகவே!
சொல்லுக் கடங்காத் தமிழுலகின்
சொத்தே! வருக! வருகவே! (7)

59 தாயை வனத்திற் சிறைவைத்த
தருக்கன் ஆளும் தனியிலங்கை
தன்னைக் காணக் கடல்தாவித்
தணலில் வேகத் தீயிட்டுப்
பாயும் சிங்கம் எனப்பகைவர்
படையின் ஊடே திறங்காட்டிப்
பண்பின் உருவார் சீதையினைப்
பார்த்துச் செய்தி பலபகர்ந்து
தூயன் சிலைசேர் பகழியெனத்
தோன்றிக் கிளம்பி மீண்டேகித்
தோகை நிலையை அறத்தின்தாய்
துணைக்குச் சொன்ன மாருதியை
நேயத் தமிழிற் பாடியதோர்
நேர்மைக் கம்பா! வருகவே!
நினைவார் நெஞ்சில் தமிழாகி
நிற்பாய்! வருக! வருகவே! (8)

கன்றின் ஓசைக் குரல்கேட்டுக்
கறவைக் கூட்டம் மனமகிழ்ந்து
கால்போல் விரைந்தே இலஞ்சேரக்
கண்ட அவைதாம் மடிமுட்டி
நின்று காம்பைச் சுவைத்திழுக்க
நிதமும் பெருகும் பாலோடி
நிறையும் முற்றம் சேருக
நேயப் பெண்டிர் கால்வழுவி
முன்றில் விழக்கண் டேருழவர்
முகிழ்க்கும் நகைதான் சிறிதரும்ப
முல்லை வென்ற நகைமாதர்
முயங்கா தூடும் மருதநிலம்
ஒன்றும் காட்சி ஊருடையாய்!
உயர்ந்த கம்பா! வருகவே!
உயர்தா மரையை வென்றவடி
வுடையாய்! வருக! வருகவே! (9)

61 ஓதப் புணரி இடையெழுங்கார்
உருவ மொத்த மேதியினம்
ஓங்கு செந்தேன் உடன்மல்கி
ஓடும் கழனி இடைமுளைத்த
சீதக் கமலச் செவ்விதழைச்
சேர்த்துக் குதப்ப, வாழன்னம்
சிந்தை குலைந்து பறந்தோடச்
சேற்று நண்டு வளைபுக்குப்
பாதிக் கண்ணால் பார்த்திருக்கப்
பாடும் கிள்ளை இனங்கூடிப்
பச்சை இலைமேற் காட்சிதரப்
பரந்த வளஞ்சால் நாடுடையாய்!
வேதப் பொருளை விளக்கியவோர்
வித்தே! கம்பா! வருகவே!
வெற்றிக் கவிதைத் தமிழ்வேந்தாய்
விளங்கும் பெம்மான்! வருகவே! (10)

7. அம்புலிப் பருவம்

(வேறு)

(பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்)

62 எண்ணரிய கடலிடையில் எழுந்துலகை வலமாகி
இதயத்தில் மகிழ்ச்சி செய்வாய்,
இவனுயர்ந்த தமிழ்க்கடலின் இடையெழுந்து
[கவியரசாய்
வலங்கொண்டே இலங்கு கின்றான்;
தண்ணெழில்சேர் மதியுனையே வியந்துவான்
விருப்போடு பாடு கின்றார்; [தமிழ்ப்புலவர்
தமிழுலகில் இவன்மதியைக் கண்டுவந்த புலவ
தண்டமிழாற் போற்று கின்றார்; [ரெலாம்
வண்ணமுற நீவானின் இடையுலவி உலகத்தார்
வாழ்த்துமா றிலங்கு கின்றாய்,
வளர்கவிதை உலகத்தில் இவன்கவிதை
பலபாடி வாழு கின்றான்; [வண்ணங்கள்
அண்ணல்சிவன் பெற்றவிழி ஆதலினால் இவன
அம்புலி! ஆட வாவே! [மைத்தான்
ஆற்றலுள வில்லிகதை சாற்றுகவிக் கம்பனுடன்
அம்புலி! ஆட வாவே! (1)

63 மன்னுலகில் உனதுருவைப் பெண்முகத்திற்
மதிப்புற்ருய்; அகில மீது [குவமைசொலும்
மரகதப்பொன் வடிவுடையான் மனைவியென
மதிமுகத்தைப் பாடி நின்ருன், [வருசீதை
பொன்னுருவாம் உன்னெளியை அமுதமெனப்
ஓயாது புகழு கின்ருர்; [பூவுலகோர்
புவிமிசையில் இவன்படைத்த பூங்கவியை
புலவரெலாம் புகழு கின்ருர்; [அமுதமெனப்
பன்னரிய விண்மீன்கள் படைதொடர வந்துலகைப்
பார்க்கின்ற தன்மை பெற்ருய்;
பாரிலிவன் புலவர்பலர் பின்தொடர
வருந்தன்மை
படைத்துயர்ந்த பான்மை பெற்ருன்;
அன்னவன்தான் உடனுட மகிழ்ந்திங்கே
அம்புலீ! ஆட வாவே! [உனையழைத்தான்
ஆற்றலுள வில்லிகதை சாற்றுகவிக் கம்பனுடன்
அம்புலீ! ஆட வாவே! (2)

64 கலைகளினில் எண்ணிரண்டே உனக்குண்டு
காகுத்தன் காதை சொல்லும் [வையகத்தில்
கம்பனிவன் பெற்றகலை அறுபத்து நான்கென்று
கவிஞரெலாம் சொல்லு கின்றார்;
நிலையின்றித் தேய்ந்துலகில் பின்வளரும் நிலைபெற்று
நிற்கின்றாய்; இவனோ இங்கே
நிலையாய புகழுடனே தேய்வின்றி வளர்கின்ற
நிலைபெற்றே உயரு கின்றான்!
மலைகளென வருமுகிலால் நீமறைக்கப் பட்டொளி
மங்கிடுவாய்; இவனோ என்றும் [தான்
மலையெனவே வரும்புகழின் உச்சிமிசை
மாறாமல் நல்கி நிற்பான்; [நின்றொளிதான்
அலையாமல் நிலையாக ஆடவரும் நினைவிருந்தால்
அம்புலி! ஆட வாவே!
ஆற்றலுள வில்லிகதை சாற்றுகவிக் கம்பனுடன்
அம்புலி! ஆட வாவே! (3)

65 பூமகளை மனமுடைய மாயவனின் இதயமதில்
பொருந்துமொரு தன்மை பெற்ருய்;
பூவுலகில்இவனவனைத் தன்மார்பில் ஏற்றுயர்ந்த
புகழ்பெற்று வாழு கின்ருன்;
ஓமென்ற கடலிலலை உன்வரவு கண்டால்தான்
உலகத்தே மகிழ்வு கொள்ளும்;
உயர்புவியில் மக்களெலாம் இவன்கவிதை
[கேட்டவுடன்
உளம்நிறைந்த உவகை கொள்வார்;
நாமலரும் பாடல்களால் இவனுலகில் உனைச்சிறை
நயந்தடைத்த கார ணத்தால் [யில்
நலிவுற்றுக் குறைமதியாய்த் தளர்வுற்று
நடக்கின்ருய் இவைகளெல்லாம் [வானிடையில்
ஆமென்ருல் உயர்வுற்ருன் இவனழைக்க
அம்புலி! ஆட வாவே! [மறுத்திடாமல்
ஆற்றலுள வில்லிகதை சாற்றுகவிக் கம்பனுடன்
அம்புலி! ஆட வாவே! (4)

66 திமிரமிடு கடலுகுத்த விடமுண்ட சிவன்முடியிற்
செறிவுற்று நிற்ப தாலே
சிந்தனையில் இறுமாப்புச் சேரவிவன்
திறமெண்ணி மகிழ்ந்திடாமல் [தன்னமைப்பின்
அமைதியுடன் செல்லுவதோ இவனந்தக்
அறிதுயில்தான் பொருந்துமாயன்[கடலிடையில்
அடியிரண்டும் முடிகொண்ட மன்னவரும்
அகிலமிசை வாழு கின்றான்; [அதிசயிக்க
அமையாதிங் குன்றெளிதான் அகிலமிசைஒருநாளில்
வாராமல் அணைந்து போகும்;
அன்பனிவன் கவியொளியோ அணையாமல்
அகிலத்தில் பெருமை சேர்க்கும்; [நிதம்பெருகி
அம்மையொரு பாகமுளான் விழியமர்ந்த நாண்மதிநீ
அம்புலி! ஆட வாவே!
ஆற்றலுள வில்லிகதை சாற்றுகவிக் கம்பனுடன்
அம்புலி! ஆட வாவே! (5)

67 பண்டுமுதல் இன்றுவரை நின்னுடலில் தக்கனிடு
சாபத்தாற் பரவி நின்று
பரிதவிக்கச் செய்கயநோய் தீர்ந்தினிய மெய்-
பார்வலமாய் வருதல் வேண்டின் [பெற்றுப்
அண்டருல கில்லாத மருத்துவனுய் இவ்வுலகில்
அவதரித்த மருந்து வல்லான்
அகிலத்தில் இவனென்பர்; அறியாய்நீ தமிழ்க்
சஞ்சீவி அடிக ளெல்லாம் [கவிதைச்
கொண்டுனது நோய்தீர்ப்பான் குறையகன்ற
கோதிலா ஒளிகள் பெற்றுக் [வாழ்வுறலாம்
குவலயத்தில் முழுமதியாய் இறவாத புகழ்
குலவிடலாம்; ஆத லாலே [பெற்றுக்
அண்டமெலாம் தன்கவியால் அளந்துயர்ந்த
அம்புலீ! ஆட வாவே! [புலவனுடன்
ஆற்றலுள வில்லிகதை சாற்றுகவிக் கம்பனுடன்
அம்புலீ! ஆட வாவே! (6)

68 உரகமொரு நாளிலுனை விழுங்கிடவோர் சாபமுள
தன்மையினை உண்மை யென்றே
உரைத்திடுவார் அக்குறைதான் உனைவிடுத்திங்
உளங்கொள்ளின்ஒன்றுசொல்வேன் [ககலவென
அரவமொரு நாளிலன்று தில்லைமூ வாயிரவர்
அணிதலைமைக் குருக்கள் சேயை
அரிசினத்தால் கடித்திடவும் அவன்மாளக்
தன்கவிதை அடிக ளாலே [கண்டுடனே
வரியரவ விடமாற்றி வைத்தகதை நாடறியும்
வளர்தமிழால் இவனு முன்னை
வாழுதற்கு வைத்திடுவான்; அரவுன்னைத் தீண்
வரங்கொள்வாய்; அந்தச் செய்கை [டாத
அரியதிலை இவனுக்கே ஆதலினால் வித்தகனோ
டம்புலி! ஆட வாவே!
ஆற்றலுள வில்லிகதை சாற்றுகவிக் கம்பனுடன்
அம்புலி! ஆட வாவே! (7)

69 வஞ்சியென வருதமிழிற் கொஞ்சுகவி வளமனைத்தும்
இவன்பாடும் வண்ணம் கேட்டு
வாழ்க்கையினில் நல்லின்பம் வாய்த்திலகி
வானகத்தே உடுக்க ளோடு [மகிழ்ந்திடலாம்;
கொஞ்சிவரும் நீயவன்தன் குளிர்கவியில் நான்மறை
கூறுதிறம் பலவும் கேட்டுக் [கள்
குவலயத்தில் மறையணிந்த முனிவரெனப் பலர்
கொள்கைவரப் பெற்று வாழ்வாய்! [போற்றும்
எஞ்சலிலாக் கடலுன்ருல் மகிழுதல்போல் இவன்
இன்கவியால் நீயு வப்பாய் [பாடும்
இவன்கவிதை இருப்பதனுல் நீயுலகில் பலர்
என்றென்றும் நிலைத்து வாழ்வாய்! [போற்ற
அஞ்சாத கவிக்கரசன் ஆனதமிழ்ப் புலவனுடன்
அம்புலீ! ஆட வாவே!
ஆற்றலுள வில்லிகதை சாற்றுகவிக் கம்பனுடன்
அம்புலீ! ஆட வாவே! (8)

70 நெறிகொண்ட உலகத்தில் மேலுற்ற நெடுவானில்
நீயுற்று வாழ வேண்டில்,
நெஞ்சுற்ற கவிமாரி பொழிகின்ற கவிவாணர்
நினைவுற்று வாழ வேண்டில்,
குறிகொண்ட எல்லைக்குள் அடங்காத கடவுளெனக்
குவலயத்தில் வாழ வேண்டில்,
குறையாத நிலவென்னும் கதிர்கொண்டிவ்
குளிர்விக்கும் தன்மை வேண்டில், [வுலகத்தைக்
செறிகின்ற புலமைக்குள் உறைகின்ற இவனோடு
விளையாட உன்னி வாநீ;
செகமளந்த மாயவனைத் தன்கவியுள் அடக்
சினமீறிச் சீறி நின்றே [கியவன்
அறைகின்ற சொற்சாபந் தனையடைதல் மெய்யாகும்
அம்புலி! ஆட வாவே!
ஆற்றலுள வில்லிகதை சாற்றுகவிக் கம்பனுடன்
அம்புலி! ஆட வாவே! (9)

71 பழமறைகள் அறிந்துலகில் தேவரினம் மதிக்கவரு
கின்றதொரு பான்மை பெற்று,
பரமகுரு எனப்புகழ வருவியாழ முனிமனைவி
பரவுபுகழ்த் தாரை என்னும்
அழகிமன வசமாகி உறவுகொளும் நின்னுடைய
வஞ்சனையை அறிந்து கொண்டோர்
அகிலமிசைப் பழிசொல்ல வருமுன்னே இவன
ஆடவர வில்லை யென்றால் [ழைத்தும்
இழவுவரும் உனக்குமிவண் இழிவுவரும், ஆதலினால்
இரக்கமுடன் இயம்பு கின்றேன்
ஏதுமறி யாதவன்போல் நீசென்றால் இவன்
ஏவுமொரு சாபம் சேரும்; [கவிதை
அழகுடைய இராமனெழில் பாடவரு புலவனுடன்
அம்புலீ! ஆட வாவே!
ஆற்றலுள வில்லிகதை சாற்றுகவிக் கம்பனுடன்
அம்புலீ! ஆட வாவே! (10)

62, 63, சாமம் 64, 65, 66, பேதம் 67, 68, 69, தானம்
70, 71 தண்டம்

8. சிற்றிற் பருவம்

(வேறு)

[பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்]

72 தும்பிக் கூட்டம் வெருண்டோடத்
தோன்றும் கல்லாம் தோளுடையான்,
தோகை தன்னைப் பிரியாத
தோன்றற் கிரங்கும் மனமுடையான்,
அம்பிக் கூட்டம் இடைவாழும்
அன்பன்; பரதன் வரக்கண்டே
அண்ணல் இராமன் சார்பாக
அவனை வெல்வேன் எனப்போகிக்
கும்பிட் டவனைத் தொழுதேற்றிக்
கூறும் அன்பு மொழிகேட்டுக்
குழையும் பரதன் பின்வந்த
கொள்கை பாடும் தமிழ்க்கம்ப!
செம்பொற் திருக்கும் சேவடியால்
சிறியேம் சிற்றில் சிதையேலே!
செழிக்கும் கவிதைச் செழுமுகிலே!
சிறியேம் சிற்றில் சிதையேலே! (1)

73 பொய்யே அறியா திருக்கின்ற
புகழுக் குரிய யாமெல்லாம்
பொற்போ டுனக்குக் குற்றேவல்
புரியும் சிந்தை கொண்டுள்ளோம்;
கையிற் பிடித்த சிலையுடையாய்!
காவும் மரமும் புனல்வழியும்
கங்கை உண்டிங் குண்ணமலர்
கனியும் தேனும் மிகவுண்டே;
உய்யும் நிலையை இன்றடைந்தோம்;
உவந்தே ஒருநாள் எம்மூரில்
உறைவாய்! என்னும் குகப்பெருமான்
உள்ளம் உரைத்த கம்பனெனும்
செய்ய புலவா! சீரடியால்
சிறியேம் சிற்றில் சிதையேலே!
செழிக்கும் கவிதைச் செழுமுகிலே!
சிறியேம் சிற்றில் சிதையேலே! (2)

74 உள்ளம் மகிழப் பணிசெய்யும்
உண்மைக் குகனை உடல்தழுவி
உயர்ந்த நெஞ்சாய்! இக்கானம்
உரிதே எனக்கென் றுரைசெய்தாய்
கள்ளம் அறியாய்! என்தம்பி
காலம் எல்லாம் நின்தம்பி
காவிக் கிணைசொல் விழிகொண்ட
கன்னி சீதை நின்கொழுந்தி
வெள்ளக் கங்கை தனையாளும்
வேடர் தலைவ! என்றுரைசெய்
வேந்தன் புகழைப் பாடியவா!
வெள்ளம் தள்ள வந்தொதுங்கும்
தெள்ளும் மணலால் யாமமைத்த
சிறியேம் சிற்றில் சிதையேலே!
செழிக்கும் கவிதைச் செழுமுகிலே!
சிறியேம் சிற்றில் சிதையேலே! (3)

நெறிகள் அமைப்பேன் கானிடையே
நிகழும் நெறிகள் யாளறிவேன் ;
நிலைக்கும் கானில் நீயுறையின்
நேடிக் கனிகாய் யான்கொணர்வேன் ;
உறையும் சாலை நினக்கிசைய
உடனே அமைக்கும் திறமுடையேன்
உம்மை என்றும் பிரியாமல்
ஒன்னார் மற்றும் விலங்குகளால்
உறுகண் வருதற் கொவ்வாதேன்
உயிரைக் கொடுத்தே உடன்காப்பேன்
உண்மை எனுமோர் குகனுள்ளம்
உலகம் அறியப் பாடியவா !
செறியும் அழகுச் சீரடியால்
சிறியேம் சிற்றில் சிதையேலே !
செழிக்கும் கவிதைச் செழுமுகிலே
சிறியேம் சிற்றில் சிதையேலே ! (4)

76 அன்னான் குகன்தன் உரைகேளா
தண்ணல் அவனைத் தனிநோக்கி
அன்போ டெந்தைக் கின்றுமுதல்
ஐவர் மக்கள் உன்னுடனே;
மன்னும் பரதன் அவனாள
மற்றிக் கானம் நீயாள்க!
மாறா எந்தை ஆணைவழி
மான்கண் சீதை உடனாக
இன்னே கானம் செல்கின்றேன்
எந்தன் ஆணை இவணிருந்தே
இனிதே யாள்க! என்றுரைத்த
ஏந்தால்! கவிதைக் கோரரசே!
செந்நெற் கழனி நாடுடையாய்!
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செழிக்கும் கவிதைச் செழுமுகிலே!
சிறியேஞ் சிற்றில் சிதையேலே! (5)

77 அங்கே மக்கள் சுற்றமினம்
ஆளுங் காவற் குளனும்பி
அச்சந் தருமோர் வனத்துதவி
ஆற்றத் துணையாய் இவனுள்ளான்;
இங்கே வாழும் கிளைகாவல்
இனிதே ஆள்தல் தனைவிடுத்தே
என்னோ டேகின் இவரெல்லாம்
ஏங்கித் தவிப்பர்; ஆதலினால்
பொங்கும் துயரிற் பொருந்தாமல்
புரத்தல் கடனாம் என்னுணை
பொருந்தி வாழ்க! எனராமன்
புகலும் மொழிசொல் பெருமானே!
செங்கால் நோக யாமிழைத்த
சிறியேம் சிற்றில் சிதையேலே!
செழிக்கும் கவிதைச் செழுமுகிலே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே! (6)

78 மேவற் கரிய வனத்தூடே
மிதிலைப் பொன்னுள் சானகிதன்
மென்மைப் பூவார் திருவடிகள்
மெல்ல நடந்து துயரடைய,
தாவா வலிமைத் தனித்தம்பி
தடந்தோள் சுமந்த வில்லுடையான்;
தன்கை அமைத்த சாலையெழில்
தன்னைக் கண்ட காகுத்தன்
யாவை யாதும் இலாதார்க்கே
இயைய என்னப் பாராட்டி
இசைத்த சொல்லின் இனிமைநலம்
எழுதும் கம்ப! எம்தலைவ!
தேவர் அமுதம் திகழ்கவியாய்!
சிறியேம் சிற்றில் சிதையேலே!
தென்னர் கவிதைத் தேன்கடலே!
சிறியேம் சிற்றில் சிதையேலே! (7)

79 கழுகின் குலத்தைக் காத்துவரும்
கருணை வேந்து, கடுங்கானில்
கயவன் பத்துத் தலையுடையான்,
கன்னி தன்னைக் கவர்ந்தேக
அழுத சீதை துயர்மாற்ற
அரக்கன் உடலம் தூளாக
அடித்துக் கிழிக்கச் சிறகொடிந்தே
அலறி வீழ்ந்தான்! இராமன்வரத்
தொழுது வணங்கிச் செய்திசொலத்
தொடங்கும் நிலையில் உயிர்பிரியத்
துடித்த வள்ளல் நிலைபாடும்
தூய கவிதைத் துறையுடையாய்!
செழுமைத் தமிழ்சொல் எம்கம்ப!
சிறியேம் சிற்றில் சிதையேலே!
சேலார் பொன்னிச் செந்தமிழா!
சிறியேம் சிற்றில் சிதையேலே! (8)

பொங்கும் ஆழி தோண்டியவர்;
புனிதக் கங்கை வரவழைத்தோர்;
பொல்லா வேங்கை மானினங்கள்
புரிந்து நட்பாய்ச் செய்தவர்கள்;
எங்கும் உள்ளார் போற்றிசெய
எழுந்த குலத்தின் பெருமையினை
என்றும் உயிராய்க் காத்தவர்கள்;
இதயத் தூய்மை உள்ளவர்கள்;
தங்கி வாழ்ந்த குலம்பிறந்தும்
தாரம் கொண்ட பீழையினைத்
தவிர்க்கும் வலிமை இலனென்று
தவித்த இராமன் புகழ்பாடும்
சிங்கக் கவிதைத் தனிவேந்தே!
சிறியேம் சிற்றில் சிதையேலே!
சேலார் பொன்னிச் செந்தமிழா!
சிறியேம் சிற்றில் சிதையேலே! (9)

81 அமரா பதிக்கு நாயகனும்
அடைந்த துயரை மாற்றவென
அரக்கன் தலைகள் ஐயிரண்டும்
அறுத்த பெம்மான்; தந்தைசொலத்
தமது முடியைத் தனிதுறந்து
தம்பி சீதை தனைத்தொடரத்
தருவார் வனத்திற் குடனேகித்
தாரம் இழந்து தவித்தவராய்க்
குமையும் வள்ளல் துயறுற்றுக்
கொட்டும் சொல்லைத் தீந்தமிழில்
கொடுத்துச் சிறந்த நாவுடையாய்!
குறையா வேதக் கொள்கைதமிழ்ச்
சிமிழில் அடக்கிச் சிறந்தவனே!
சிறியேம் சிற்றில் சிதையேலே!
சேலார் பொன்னிச் செந்தமிழா!
சிறியேம் சிற்றில் சிதையேலே! (10)

9. சிறுபறைப் பருவம்

(வேறு)

[பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்]

82 வாய்மையொடு தன்மரபு நிலைகாக்கும் நினைவினொடு
தன்னுயிர் துறந்த வள்ளல்
தன்மைந்தன் எனவந்த பரதனுக்கு முன்தோன்
தருமநிலை நிற்க வென்று [றித்
தீமைபுரி அரக்கரினம் வேரறுப்ப தெனமுடிவு
செய்துசிலை ஏந்து கையால்
தேவியினைப் பிரிந்ததுயர் நனிவருத்தச்
தருமநெறி சிதையு மாறு [செயல்மறந்து
கோமுறைகள் தவறிடவவ் வாலியவன் மார்பூடு
கொடுங்கணையை ஏவ வாலி
கூறியவப் பழியுரைகள் குளிர்தமிழில் வரைந்த
குலத்தரசே! பரவி நின்ற [கவிக்
செய்மையுறும் உலகமெலாம் சிறந்தபுகழ் பூண்டகவி
சிறுபறை முழக்கி யருளே!
செந்தமிழர் செல்வமென வந்தகவி மன்னநீ!
சிறுபறை முழக்கி யருளே!

83 தம்பியுயிர் கொளத்துணிந்த மதமுடைய ஞகியவன்
தாரத்தைக் கற்ப ழித்தாய் !
தாரணியில் வேந்துமுறை நன்குணரும்வேந்தநீ
தவருன செயல்கள் செய்தாய் ;
எம்பியென என்னையவன் வந்தடைய நண்பாளுன்
இன்னலவற் கில்லை யாக்கும்
இயல்புடனிக் கதிர்மகனுக் குலகறிய உதவுகின்ற
இதயத்தால் மறைந்து நின்று
நம்பியெனை வந்தவனும் நலமடைய வேண்டுமென
நாண்வளைத்துப் பகழி தொட்டேன்
நடந்தகதை முடிந்ததிது நடப்பதினி நல
பலவாறு நவின்று நின்ற [மென்று
செம்பதுமத் தடியண்ணல் உளங்கொண்ட திருச்
சிறுபறை முழக்கி யருளே ! [செல்வ!
செந்தமிழர் செல்வமென வந்தகவி மன்னநீ
சிறுபறை முழக்கி யருளே ! (2)

84 நாடாளு மாசைவர வெனைக்கொல்ல நின்துணையை
நயந்துமிகக் கொண்ட எம்பி,
நலமறியக் குரக்கினத்தின் செய்கைநிலை
தன்செயலால் நாட்டி விட்டான்; [உலகத்தே
ஏடாளும் புகழுடைய நினதுசிலை தொடுத்தசரம்
என்வலிய மார்பி னூடே
இன்று நுழை வுற்றசெயல் தனிலதனுல்
கினியவனும் சொந்த மாக [கிட்கிந்தைக்
வீடாளும் அரசெனக்கு விரும்பியவன் தந்ததனுல்
விளம்புமொரு செய்தி கேள்நீ
விரைந்திவனும் தவறுசெயின் ஒருசரத்தால்
விடவையாய் என்று வாலி [இவனுயிரை
சேடாரும் வகைசொன்ன உரைதமிழிற் செப்பியவ!
சிறுபறை முழக்கி யருளே!
செந்தமிழர் செல்வமென வந்தகவி மன்ன நீ
சிறுபறை முழக்கி யருளே! (3)

85 பொங்கரவின் சீற்றமென உயிர்த்துவரு மிளையவனும்
போர்கண்ட வில்லை யூன்றிப்
பொருதுசின முற்றவனய் நின்றநிலை கண்டுவரு
பூங்கொடியாள் தாரை யோடு
மங்கையரை நோக்காது தரைநோக்கி மாமிகண்ட
மருகன்போல் நின்ருன் தன்னின்
மலர்முகத்தை நனிபார்த்தே எம்மில்லம் தனில்
மலரடிகள் பட்ட பேறும் [நின்றன்
இங்கெவர்க்கும் எட்டாத புண்ணியமாம் வானவரும்
எய்தரிய செல்வ முற்ருேம்
இங்குனது சினமாற்று படைவீரர் அஞ்சுகிருர்
இனிதருள வேண்டு மென்றே
செங்கரங்கள் கூப்பியவள் செப்பியசொல் இடம்
சிறுபறை முழக்கி யருளே [பியவ!
செந்தமிழர் செல்வமென வந்தகவி மன்ன நீ!
சிறுபறை முழக்கி யருளே! (4)

86 வெய்யபகை அழித்தரசு தந்தவர்கள் உங்களது
வீரமதை உணர்ந்து நிற்பார்
வீறுபெறு வாலிவலி மாயவொரு சரமுதவு
வீருமக் குதவி வேண்டா
உய்யுவழி பெற்றவர்கள் உமையிகழ்வர் எனில்
உயிரிழந்து போவ ருண்மை; [விரைவில்
உலகுபுகழ் கற்புமயில் சீதையினை நாடிவரும்
உதவியது செய்வர் மெய்யே;
நம்மையுயர் வுறவைத்த நாயகர்தாம் மகிழ்வுபெற
நடத்துசெயல் அறிந்து, தூதர்
நாலுதிசை யுளபடைகள் தமையழைக்கப்
எனநவின்ற தாரை சொல்லைச் [போயினர்கள்
செம்மையுறு தமிழ்மொழியில் நன்மைபெறச்
சிறுபறை முழக்கி யருளே! [செப்பியவ!
செந்தமிழர் செல்வமென வந்தகவி மன்னநீ!
சிறுபறை முழக்கி யருளே (5)

87 போருற்ற வேளையிற் பகைகொண்டு களம்வந்த
பொல்லாத அரக்கர் சேனை ;
புகைகொண்ட நெருப்புக்கேஆற்ருத பஞ்செனப்
போயுற்றங் கொழியு மாறு
நேருற்ற இராவணன் மீதெய்த சுடுசரம்
நினைவெலாம் அழித்து, மேலும்
நிலையுற்ற மகுடங்கள் படைவாளி யாவுமே
நிலமீது வீழ வைக்க
வேரற்ற மரமென வலிசாய்ந்து நின்றதை
வென்றதோர் வள்ளல் கண்டு
வீறுற்ற படையுடன் போருக்கு நாளைநீ
விரைவுடன் வருக வென்று
சீருற்ற மொழியினில் சொல்லியசொல் செப்பினுய்!
சிறுபறை முழக்கி யருளே !
செந்தமிழர் செல்வமென வந்தகவி மன்னநீ!
சிறுபறை முழக்கி யருளே! (6)

(வேறு)

[பன்னிரு சீர்ச் சந்த விருத்தம்]

88 அரிதென வயல்வர் நினைசெயல் முடிதிறம்
அமைந்தவன்; அனுமனெனும்
அன்பர்கள் பணிசெய அமைந்தவன் இராமனின்
ஆணைகள் பெற்றவனாய்,
பொருகடல் தனையுடன் கடந்தொரு வனமதில்
பொருந்திய சீதையினை,
புகழ்பெறக் கண்டவள் தருமணி பெற்றுடன்
புண்ணிய மூர்த்தியினை
விரைவுடன் கண்டவள் துயர்தனை அகற்றிட
விளம்பிய சொல்கேட்டு
வேதனை அகன்றுளம் மகிழ்வது கொள்நிலை
கவியினில் விளம்பியவா!
முருகுடன் வளர்தமிழ் தனையறி புலவநீ!
முழக்குக சிறுபறையே!
முத்தமிழ் வித்தகன் எனவரு கம்பநீ!
முழக்குக சிறுபறையே (7)

89 கண்டனன் கற்பினுக் கணியினை இலங்கையில்
எனவுரை கழறியவன்;
கடுவிட மனையவர் திறல்மிகு மரக்கர்தம்
கடுந்திறல் அடக்கியவன்;
வண்டிமிர் பூவணி சீதையைக் கண்டவள்
வளர்துயர் மாற்றியவன்;
வலியவர் அரக்கர்தம் மன்னவன் எதிரினில்
வார்த்தைக ளாடியவன்;
மண்டிடு சினமிகு மதியிலி அரக்கர்கள்
மனக்கொதிப் புடனேதீ
மற்றவன் வாலினில் வைத்ததை நகரினில்
வைத்தவன் புகழ்பாடித்
தெண்டிரை கொழிகடல் வளர்பவற் கன்பநீ
முழக்குக சிறுபறையே!
தென்றலைத் தன்கவி கொண்டநல் மன்னவ
முழக்குக சிறுபறையே. (8)

90 இத்தரை வளைகடல் கடந்திவண் வந்ததும்
எழிலுறை சீதையெனும்
எம்மனை இருப்பிடம் அறிவுற முயன்றினித்
தேடுதற் கிடமின்றி
அத்தனை இடத்தினு மலைந்தனன் என்துணைக்
கவியினம் அக்கரையில்
அறிந்திடத் துடித்திடும் நிலையினில் அமர்வுற
அன்னையைக் காணாமல்
வித்தகன் திருவடி சேர்ந்தினி என்சொல
விளைவது துன்பமென
விரைந்திவண் உயிர்விடல் நலமெனக் கருதிடும்
வீரனின் அவலநிலை
முத்தமிழ்க் கவியினிற் செப்பிய கம்பநீ!
முழக்குக சிறுபறையே!
முக்கடல் அமுதென நற்கவி தந்தவ!
முழக்துக சிறுபறையே. (9)

91 மேருவை விண்ணினை விரிந்துள உலகினை
வென்றுபி ளந்தோட
வேரினி இலையெனச் சொலுவணம் நூறிடு
விறலுடைச் சிலைசுமந்த
ஆரியன் பகழிகள் வலியன எனுமுரை
அறிந்தும் உரைத்தனையே;
அஞ்சினை ஆதலின் மறைத்தனை உருவினை
ஆதலின் நீபிழைத்தாய்!
வீரமும் பெருமையும் பெற்றவன் என்றுரை
விளம்பிடு நீயந்த
வெல்வலிப் பறவைமுன் நின்றிட வழியிலை
என்றுரை விளம்பிடுநற்
காரிகை மொழியினைக் காவிய மாக்கினை!
முழக்குக சிறுபறையே!
கல்வியிற் பெரியவன் எனவரு கப்பநீ!
முழக்குக சிறுபறையே. (10)

10. சிறுதேர்ப் பருவம்

(வேறு)

[பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்]

92 எய்தரிய உலகங்கள் பலவாறு துதிசெய்ய
இருக்கின்ற எனது நாதன்;
இதயத்தில் உருவாகி வளர்கின்ற காதலை
என்னுள்ளம் மகிழு மாறு
பொய்யற்ற மறைபோலும் சொல்கொண்டு செவி
புகன்றெனக்கே உயிரைத் தந்த [குளிரப்
புண்ணியமே! தவப்பயனாய்ப் பூத்துவரும் அறம்
புகலுதற்கோர் வார்த்தை இல்லை [போல்வாய்!
நெய்யுற்ற தீபோல எனையாண்ட துன்பங்கள்
நீங்கிடயான் வாழ்வு பெற்றேன்;
நினக்குரிய கைமாறு செய்யவழி இல்லெனக்கு
நீவாழ்க! என்று வாழ்த்தும்
செய்யவள்தன் உரைபுகன்ற பொய்யறியாக் கவி
சிறுதேர் உருட்டி யருளே! [மகன்நீ
சேலாடும் வயல்கொண்ட தேரழுந்தூர் வாழ்
சிறுதேர் உருட்டி யருளே. [கம்ப! (1)

93 கரியகடல் தனையிந்தச் சிறியவடி வதுகொண்டு
கடந்தெங்ஙன் இங்கு வந்தாய்!
கருதறிய தவப்பலனே! முனிவர்தரு சித்தி
கட்டுரைப்பாய்; என்று சீதை [களோ
அரியசெயல் செய்யனுமன் தனைவினவ அன்னவனும்
அவளடியைத் தொழுது வாழ்த்தி;
அஞ்சனையாள் பெற்றவள்நான் அஞ்சனத்தை
தண்ணலடி சிந்தை வைத்தே [ஒத்தநிறத்
பெரியகடல் தாண்டியிவண் உன்னைநனி காணவந்து
பெருமைபல பெற்று விட்டேன்;
பிறவியெனும் கடல்கடந்தேன் பேரின்பம் தனை
எனவுரைசெய் அனும னுக்குந் [யுற்றேன்
திருமகள்தன் வாழ்த்தருளும் திறந்தமிழிற் கூறியநீ
சிறுதேரு ருட்டி யருளே!
செந்தமிழர் உய்யவென வந்தகவி மன்னநீ
சிறுதேரு ருட்டி யருளே! (2)

94 விலங்குமனத் தரக்கருறை வெற்பினிடைப் பிரிவு
வேதனையில் உறைந்து வாடும் [தரும்
விலக்கரிய தவமலரை, இறைவியென மறைபேச
இலங்கிவரும் அன்னை தன்னை ;
இலங்கையினில் யான்காணேன் ; இற்பிறப்பும் நற்
இணைந்துவரும் கற்பும் சேர்ந்தே [பொறையும்
எழில்நடந்தான் இடக்கண்டேன் ; உனைப்பிரியா
நடக்குமோர் இளைய வீரன் [துடனுகி
வலங்கொள்ளச் சமைத்தவொரு சாலையிடை
வாழ்கின்ற தன்மை யொத்த [இருந்துதவம்
வனிதையினை நான்கண்டேன் ; வணங்காத
வாழ்வழிக்கும் நெருப்பே என்று [முடியரக்கர்
சிலைநிகரும் தோளனுமன் செப்பியசொல் செப்பியநீ
சிறுதேரு ருட்டி யருளே ;
சேலாடும் வயல்கொண்ட தேரழுந்தூர்வாழ்கம்ப
சிறுதேரு ருட்டி யருளே ! (3)

95 மாநகரம் முழுவதிலும் தானெழுந்து பற்றியதீ
மாகுரங்கொன் றிட்ட தன்று
மலரிருந்த தையலினைச் சிறைவைத்தாய் அவள்
மன்னவனுன் கொற்ற மோடு [மனத்தீ
தேனலருஞ் சோலைகளைத் தெய்வநலத் திலங்கை
திசைதோறும் எரித்த தென்றும், [யினைத்
தெய்வமலர்ச் சீதைதவம் நின்தவத்தின்
சீறியே அழித்த தென்றும்; [திறமதனைச்
வானரமொன் றிந்நகரில் வைத்திடும்தீ எனவென்று
நந்திதந்த சாப மென்றும்,
வழங்கிடுசொல் வீடணனை மதியாத இராவண
வாழ்விழந்து போன காதை, [னும்
தேனலர்ந்த சொற்களினுல் தானளந்தே
சிறுதேரு ருட்டி யருளே! [உரைத்தவன்நீ
திருமகளின் உளமுறையும் பெரியகவி
சிறுதேரு ருட்டி யருளே! [மன்னவன்நீ 4

96 பாதகஞ்செய் அரக்கரின முளைத்துவரு கின்றவிவன்
பழுதுபடச் செய்த போதும்,
பார்ப்பதில்லை எந்நலங்கள், கேட்பதில்லை பிறர்
பலவாறு புகல்வ தென்னை ; [சொற்கள்,
வேதியர்கள் தம்துயரைப் போக்கவென வந்தசெயல்
பொருந்துவதாம் ; அபய மென்று
விளம்பியவர் நலங்காத்தல் எனதுகடன் ;
வேறொன்றும் நினைத்த லில்லேன் [இனியவரே
ஆதலால் வீடணன் சொல் அபயமொழி கேட்டவுடன்
அளித்துள்ளேன் அபய தானம்;
அன்புடைய நீரவனை அழையுமெனச் சொல்லி
அடைக்கலப் பெருமை சொல்லும் [யவன்
தீதகன்ற வள்ளல்மொழி செப்பியநற் கவியரச !
சிறுதேரு ருட்டி யருளே !
திருமகளின் உளமுறையும் பெரியகவி மன்னவநீ
சிறுதேரு ருட்டி யருளே ! (5)

(வேறு)

[பதினான்கு சீர்ச்சந்த விருத்தம்]

97 கருநிற முகிலென வருபடை முனமொரு
கம்பமு டன்பாய்ந்து
கண்விழி பிதுங்கிட அவர்சிரம் அறுத்துடன்
காற்றென வருந்தேரில்
தருவலி படைத்தவைந் தளபதி உயிர்விடத்
தன்வலி காட்டியவன்
தனிச்சிறு குன்றென வளரிரு தோளிணை
கொட்டியே தாவியவன்,
பருவரை நிகர்தரு முடலமை அரக்கர்கள்
பரிபவ முற்றோட
படுகளத் திந்திர சித்தனின் கொடுங்கணை
பட்டிட அடங்கியவன்
உரைசொல இராவணன் உளச்சினம் உரைத்தவ
உருட்டுக சிறுதேரே!
உலகக் கவிஞர்தம் தலைமைக் குரியவ!
உருட்டுக சிறுதேரே! (6)

(வேறு)

[பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்]

98 அயன்முதலாய் வந்தகுல மதனிடைநீ தோன்றி
அத்தனையும் ஓதியே அறிந்தாய்; [மறை
ஆற்றலுள மன்னவன்நீ தீவினையை நயந்தவல
மாகடலில் வீழ்ந்துமே அமிழ்ந்தாய்;
மயன்செய்த நகரெரியில் வெந்ததென நீகலங்கி
மனக்கவலை பற்பல அடைந்தாய்;
மாசில்பர தாரமதை அஞ்சிறையில் அடைத்த
மாருத காதலால் அடைவேம்; [வளை
தயங்காது பேசுவது மானமிடை பேணுவது
காமமெனச் சொல்லியே திரிவோம்;
தாரணியில் நன்றுநம கொற்றமென நின்று
கும்பனுரை தன்னையும் உலகில் [மொழி
செயங்கொண்ட தமிழாலே தந்துலகை வென்றகவி
சிறுதேரு ருட்டி யருளே!
சேலாடும் வயல்கொண்ட தேரழுந்தூர் வாழ்
சிறுதேரு ருட்டி யருளே! [கம்ப!
(7)

99 பரியமலை எனவுடலைக் கொண்டவலிக் கும்பகன்னன்
நெடுநாளாய்ப் பயிலு றக்கப்
பள்ளிதனை விட்டெழுப்பி விடவெழுந்து வரக்
இராவணனும் பரிந்து நோக்கி, [கண்ட
தருகவெற்றி குரக்கினத்தைத் தானழித்திங் கென
தனிமலைபோல் நின்ற அன்னன் [வேண்டத்
தகுபெரும்போர் வந்ததுவோ தனிச்சீதை துயர்
தானில்லை யோநம் பீடும்]மாறத்
வருபுகழும் மாய்ந்ததுவோ எனத்தரும நெறிபேச
மறித்தவனை வைதே உன்றன்
வாய்திறந்து நெறிசொல்ல நீயமைச்சன் தானோ
றவன்கேட்க, வந்த சொல்லைத் [வென்
திருவளரும் செந்தமிழால் தருபுலமைக் கவிமகன்நீ
சிறுதேரு ருட்டி யருளே!
திருமகளின் உளமுறையும் பெரியகவி மன்ன
சிறுதேரு ருட்டி யருளே! [வன்நீ (8)

100 உந்துவிதி என்பிடரைப் பிடித்துந்தக் களம்செல்லும்
உளங்கொண்டேன் ஒன்று சொல்வேன்
காலனுக்கும் அச்சம்வர அன்னவனை ஆடவிட்ட
கடுந்திறமை பெற்ற யானும்
முந்தியந்தக் களத்திடையிற் பொன்றியபின் கயிலை
முயன்றெடுத்த தோளாய்! இந்த [யினை
முயற்சியினைக் கைவிடுக! எனைவென்ருர் நினை
முயன்றிட்டால் வெற்றி காண்பார்; [வெல்ல
சந்ததமும் புகழ்கொண்டாய்! எனச் சொல்லிக் கள
தன்னுயிரை ஈந்து நன்றிச் [மேகித்
சரித்திரத்தில் இடம்பெற்ற முன்னோடி கும்பகன்
சரிதத்தைச் சந்த மாக்கிச் [னன்
செந்தமிழில் வரையவென வந்தகவி மன்னவநீ
சிறுதேரு ருட்டி யருளே!
சேலாடும் வயல்கொண்ட தேரழுந்தூர் வாழ்
சிறுதேரு ருட்டி ளருளே. [கம்ப! (9)

(வேறு)

[பன்னிரு சீர்ச் சந்த விருத்தம்]

101 அஞ்சனை பெற்றவன் அரியணை தாங்கிட
அம்புவி எல்லாமும்
அரிதினில் வலம்வரு வாலியின் சேயெனும்
அங்கதன் வாளேந்த
மிஞ்சிய புகழ்க்குறு நாயகன் பரதனும்
வெண்கவி கையேந்த
மென்மனத் திளையவர் இருவரும் நலமுடன்
கவரிகள் மேல்வீச
எஞ்சலில் புகழ்கொடைச் சடையனின் மரபினர்
ஏந்தியே தருமுடியை
எழில்பெரு தவப்புகழ் கொள்குல முனிவரும்
எடுத்துடன் சூட்டியதைச்
செஞ்சொலில் கவிதையெ னத்தரு கம்பநீ
உருட்டுக சிறுதேரே!
செந்தமிழ் உலகினை வெல்கவி மன்னவ!
உருட்டுக சிறுதேரே. (10)

வாழ்க நலம்!

கம்பர் பிள்ளைத் தமிழ் முற்றிற்று.

கம்பர் பிள்ளைத் தமிழ்

இரண்டாம் பரிசில்

புலவர், முத்து. சம்பந்தன்,
மீ. சு. உயர்பள்ளி,
காரைக்குடி–1
தமிழ்நாடு.

KAMBAR PILLAI TAMIZH

(Second Prize)

MUTHUSAMY SAMBANDHAN,

Karaikudi, Tamil Nadu.

Born 13—9—1939

நன்றியுரை

இக் கம்பர் பிள்ளைத் தமிழ்க் காப்பியப் பிள்ளைக்கு ஒப்பனை செய்து உருப்பொலியச் செய்த என் உடன்பிறவாத் தமையனார் 'கவியரசு' முடியரசனார் அவர்களுக்குஎன்றென்றும் கடப்பாடுடையேன்.

இப் பிள்ளையின் உள்ளக் கிடக்கையை (ஆங்காங்கே குறிப்புப் பொருள், உள்ளுறை பொருள்களை)ப் புலப்படுத்தி எழுதியுள்ள என் உடன்பிறவா இளைய தமையனார் 'அனிச்ச அடி' நாடகக் காப்பிய ஆசிரியர் 'பாவலர்மணி' புலவர், ஆ. பழநி அவர்களுக்கும் கடப்பாடுடையேன்.

இந் நூலை வெளியிட்டும், பரிசிலளித்துப் பாராட்டும் செய்த பன்னூல் ஆசிரியர் வரகவி, திரு. நாச்சிகுளத்தார் (No. 1. Sri Bahari Road, Penang. Malaysia) அவர் களுக்கு என்றும் நன்றியன். பரிசில் தொகையை வழங்கி யுள்ள அன்பர் வழக்கறிஞர். திரு. R. இராசசிங்கன் M. P. அவர்களுக்கும் நன்றியுடையேன்.

காரைக்குடி
15—5—78

அன்பன்,
முத்து. சம்பந்தன்.

முன்னுரை

புதுமையின் பெயரால் பொருந்தாக்கவிதைகள் புற்றீசல் போலத் தோன்றி வரும் இற்றை நாளில் 'பண்டைமரபு பழுநிய பாக்கள் கொண்ட இலக்கியம் பாடுக, பரிசிலும் தருகிறோம்' என ஊக்குவித்தோரால் எழுந்ததே இக் கம்பர் பிள்ளைத் தமிழ்க் காப்பியம்.

தமிழுள்ளமும், தமிழ்த்தொண்டும் கொண்ட தக்கார், மலேசியா நாட்டுப் பினங்கு வாழ்தமிழர் உயர்திரு. நாச்சி குளத்தார் அவர்களின் அறிவிப்பே நான் இக்கம்பர் பிள்ளைத்தமிழ் எழுதத் தூண்டுகோலாயிற்று.

தெய்வப் பெயரால் சிற்றிலக்கியங்கள் செய்வது எளிது. ஏனெனில் இருக்கும் புராணங்கள் யாவும் கருத்துச் செறி-வுக்குக் கைகொடுக்கும். சான்றோர் பெயரால் இலக்கியம் சமைத்தல் என்பது மிகவும் அரிது. அஃதும், பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நம் இலக்கியச் சான்றோர்களைப் பற்றி எழுதுவது என்பது எத்தகைய இடர்ப்பாட்டிற்குரியது என்பது யாவரும் அறிந்த ஒன்று. அன்றியும் நம் சான்றோர்களைப் பற்றிக் கதைகள் உள்ளனவே தவிர உண்மை வரலாறுகள் எங்கே உள்ளன?

இந்நிலையில் கம்பரைப் பற்றிப் 'பிள்ளைத் தமிழ்' இயற்றற்கு அவர்தம் காப்பியத்தைத் தவிர வேறெது துணை நிற்கும்? ஆயினும், அவரைப் பற்றிய மறுக்க முடியாத வரலாற்றுக் குறிப்புக்களும் உள்ளனவே! அவ்வாலாற்றுக் குறிப்புக்களையும், கம்பரின் காப்பியத்தையும் அடிப்படையாகக் கொண்டு இக் 'கம்பர் பிள்ளைத் தமிழ்' இயற்றப்பெற்றுள்ளது.

தெய்வங்கள் பற்றிய பிள்ளைத் தமிழ்க்கும் சான்றோர்கள் பற்றிய பிள்ளைத் தமிழ்க்கும் காப்புப் பருவத்தில் ஒரு புது மரபை உருவாக்கியுள்ளார், திருவாவடுதுறை ஆதீனஅவைப் பெரும்புலவராய் வீற்றிருந்து, தமிழும் சைவமும் தழைத்தினிது ஓங்குமாறு செய்த, திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள்.

தெய்வங்களைப் பற்றிப் பிள்ளை அவர்கள் பாடியருளிய பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் காப்புப் பருவம், பாட்டுடைத் தெய்வத்தைக் காக்குமாறு பிறதெய்வங்களை அழைத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

பிள்ளை அவர்கள் சேக்கிழார், அம்பலவாண தேசிகர் ஆகிய இரு சான்றோர்களைப் பற்றிப் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார்கள். அவ்விரு இலக்கியங்களிலும் பாட்டுடைச் சான்றோர்களைக் காக்கத் தெய்வங்களை அழைத்துக் காக்குமாறு காப்புப் பருவம் அமைத்தாரல்லர்.

'சேக்கிழார் பிள்ளைத்தமிழில்' பெரிய புராணப் பாடல் தொடர்களைக் கொண்டு காப்புப் பருவப் பாக்களை அமைத்துள்ளார்.

'அம்பலவாண தேசிகர் பிள்ளைத் தமிழில்' திருநந்தி தேவர் முதலிய ஞானசாரியர்களையும் சந்தான குரவர்களையும் குறிப்பிட்டுக் காக்குமாறு காப்புப் பருவம் அமைத்துள்ளார். (திருநந்திதேவர் முதலாக) 'ஆன்றோர் இலக்கண முகமாகக் காவற் கடவுளாவார் இவரெனத் துணிந்து கூறியது' என்ற குறிப்பும் உள்ளது. அவ்வாறு பிள்ளை அவர்கள் பாடியருளியது ஆராய்தற்குரியது.

தெய்வங்களைப் பற்றிய பிள்ளைத் தமிழில் தெய்வங்களை விளித்துக் காக்குமாறு அமைத்தலும், சான்றோர்களைப் பற்றிய பிள்ளைத் தமிழில் அவரவர் துறைக்குரிய சான்றோர்களை விளித்துக் காக்குமாறு அமைத்தலும் சால்புடைத்தெனை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் கருதினார் போலும்.

ஆதலின் பிள்ளை அவர்களின் அடிபோற்றிக் காப்புப் பருவத்தைக் 'கம்பர்க்கு' ஏற்றவாறு. வான்மீகி, தமிழ்இலக்கண இலக்கியச் சான்றோர்கள், நாயன்மார், ஆழ்வார் ஆகியோரைக் குறிப்பிட்டுப் பாட்டுடைத்தலைவரைக் காக்குமாறு அமைத்துள்ளேன்.

இக்கம்பர் பிள்ளைத் தமிழில் பெரும்பாலும் கம்பராமாயணச் சொற்களும், சொற்றொடர்களும் — ஏன்— சிற் சில இடங்களில் பாடலடிகளும், பாடற்பொருள்களும் அமைக்கப் பெற்றுள்ளன. இயற்கைப் புனைவுகளாகிய திருவழுந்தூர் வளமும், சோழநாட்டின் வளமும் படிப்பவர்க்கு விருந்தாகும் பான்மையன.

நூல் உங்கள் கையில் இருக்கிறது. உங்களுக்கு உவகை தரின் அதுவே எனக்குப் பெருமை.

காரைக்குடி,
15—5—1978

அன்பன்,
முத்து. சம்பந்தன்.

கம்பர் பிள்ளைத் தமிழ்

படைப்பு

'கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ்வளர்க்கும்'
நம்பன்' கணேசனார் நற்கழற்கே — கம்பன்மேல்
சாற்றியுள பிள்ளைத் தமிழ்மாலை உள்ளுவந்து
போற்றிப் படைத்தேன் புரிந்து.

முத்து. சம்பந்தன்.

தமிழ் வணக்கம்

1 தேன்வளர் குறிஞ்சி கான்வளர் முல்லை
தெளிபுலம் நிலையறு பாலை
சீர்வளர் மருதம் திரைவளர் நெய்தல்
திகழ்ந்தொளிர் ஐவகைத் திணையும்
ஈன்றவள், ஆய்புலம் ஊன்றிய மாந்தர்
இருவிழி மணியென இலங்கி
எழில்கொழி தமிழெனும் தொழுதகும்அணங்கின்
இணைசிலம் படிமலர் பணிவாம் ;
வான்புகழ் படைத்துத் தானுல களந்த
வண்டமிழ் வளமெலாம் நுகர்ந்து
வடமொழிச் சொல்லைத் தமிழினிற் சேர்க்கும்
வழிமுறை வரன்முறை அமைத்தோன்
ஆன்தரு பாலும் தேன்கனிச் சாறும்
அளையுமி ராமனின் கதையை
அளித்தருள் கம்பன் களித்தெழு மதலைக்
கனிசெயும் தமிழ்க்கவி தழையவே.

நூல்

1. காப்புப் பருவம்

வான்மீகி

2 உலகிடை வழங்கிய வடமொழி உணர்ந்ததில்
ஓங்குயர் மதிப டைத்தோன்
ஒப்புயர் வில்லா உறுதவம் புரிந்திட
ஓர்வளர் புற்று றைந்தோன்,
இலகிடும் பொருகணைச் சலதியன் வேடனை
ஏசிய முன்றொ டர்கொண்(டு)
இராகவன் மாகதை எழுதுவான் மீகியை
இறைஞ்சுதும்; இன்ப மென்றும்
குலவிடும் தமிழிற் குழைவுறு மனத்தினன்
கொஞ்சிடும் மொழிபு கன்று
கோதறு வில்லியின் மீதுறு காதலைக்
குறையா திசைத்த எங்கோ!
நிலவிடும் தோகை நிலையுடற் கண்கள்
நிறைகழை கண்டு மஞ்ஞை
நிமிர்ந்துதன் இனமென மயங்கிடும் ஊரனை
நெடிதிவண் காக்க வென்றே. (1)

சலதியன்—வஞ்சகன்; வில்லி—இராமன்;
எம்+கோ; தோகை—சோலை; கண்—கணு;
கழை—கரும்பு.

அகத்தியர்

(வேறு)

3 அகரமுதல் உயிர்க்கணமும் ககரமுதல் மெய்க்கணமும்
ஆராய்ந் தறிந்து ணர்ந்தோன்
அகத்திணையும் புறத்திணையும் அணிந்தொளிருந்
ஆழ்ந்துப யின்று ணர்ந்தோன் [தமிழ்மொழியை
பகரரிய அறிவொளியான் முத்தமிழ்க்கும் இலக்-
பாவார் அகத்தி யத்தைப் [கணமாம்
படைத்தருளிச் செந்தமிழாம் பயிர்வளர்த்த
பராவிப் பணிந்து வப்பாம்; [அகத்தியனைப்
தகவெழின்மெய் நிறைசொல்லில் தழைத்திங்கே
தாயாம் தமிழ்மொ ழிக்குத் [ஓங்கிநிற்கும்
தனையளித்த தனிமகனுய்த் தமிழ்மகனுய்ச்
தானே தனக்கு நிகராய்ப் [சான்ருேனுய்த்
புகலரிய யாப்புடைய புகழ்பெற்ற காப்பியத்தைப்
பூரித்தளித்த வள்ளல்
பொங்கிவரு புனற்பொன்னி தங்கிவளர் அழுந்
[தூரின்
புலவனைப் புரக்க வென்றே. (2)

பா – நூற்பா

தொல்காப்பியர்

(வேறு)

4 ஆருயிரி னுருவாகி ஐம்புலனை வளர்க்கின்ற
அன்னைமொழி தமிழ்மொழியை அறிந்த மைந்தன்
அகத்தியற்கு மாணுக்க னுகியவன் முதன்மை
[யுற்றே
அரியதொரு பெரும்புலமை பெற்ற செல்வன்,
பேருலகில் தமிழ்மொழியிற் பேசுமிரு வழக்காய்ந்து
பிழையகல எழுத்தொடுசொல் பொருள்பி ரித்துப்
பேறரிய இலக்கணத்தைப் பாரறியத் தந்தவனைப்
பெரும்புகழ்த்தொல் காப்பியனை அஞ்ச லிப்பாம்;
ஏருறவா லிவ்வைய மியங்குமெனும் நன்னினைவால்
இருக்கின்ற நன்செயெலாம் நீர்மை கொள்ளும்
எச்செல்வ மானுலு மச்செல்வம் எல்லாமே
எழுந்தீண்டிக் குவியவரும் பான்மை கொள்ளும்
காருருவுங் கால்வலியாற் கறங்குதலுஞ் சேர்வான்
காலத்திற் பொழிதலிலும் ஒத்தி யங்கும் [பால்
காரோடும் மேதியொடும் சீராடும் அழுந்தூரின்
கவிமன்னன் கம்பனையே புரக்க வென்றே. (3)

பேறுஅரிய—பெறுதற்கரிய; (ஈற்றடி முன் ஆறுசீர் மேகம்—மேதி ஒப்புமை) மேகம்:— கார்உரு—கரியஉரு; கால்—காற்று; சேர்+வான்+பால்—சேர்ந்த வானில்; காலம்—பருவகாலம்; மேதி—(எருமை):-கார்உரு—கரிய உரு;கால்—காலாகியஉறுப்பு;சேர்+வான்+பால்—சேரும் நல்லபாலை; காலம்—காலை, மாலை(பொழுது).

திருவள்ளுவர்

(வேறு)

5 இழுமென் மொழியான் விழுமிய சொற்ற
எழுசி ரிரடியன்,
எண்குண மிக்கோன் தன்னோ டுவமை
இலனோர் வாலறிவன்,
அழுவம் நிகராங் குறளா லகமாம்
அலர்மே லேகியவன்,
ஆழி யறவோன் திருவள் ளுவனின்
அடிகளை ஏத்துதுமே!
குழுமுங் கருங்கார் கொட்டும் மழையால்
குறையாப் பெருவெள்ளம்
குமுறுங் கடல்வாய் கூடுதல் போலக்
கொழுமைக் கடல்வண்ணற்
கொழுதும் முகிலாய்ப் பொழிகவித் துளிகள்
கூடிப் பெருக்கெடுத்துக்
குனிவரி சிலையோன் குணக்கடல் சேரக்
கொடுத்தவற் காத்திடவே. (4)

அழுவம் கடல்:
கடல்வண்ணற் கொழுதும்—கடல்வண்ணனைக் குடையும்; சிலையோன் - இராமன் குணம்+கடல்= குணக்கடல்; கொடுத்தவற் காத்திடவே—கொடுத்தவ (கம்ப)னைக் காத்திடவே.

நக்கீரர்

(வேறு)

6 ஈத்துவக்கும் இன்பத்தால் இசைபெற் றோங்கும்
இணையில்லாத் தமிழ்க்குலத்தின் காதல் வாழ்வில்
இன்'கொங்கு தேர்வாழ்க்கை' என்னும்
ஏற்பட்ட பூசலிலே 'இறையனாரே, [பாட்டால்
யாத்திருக்கும் பொருள்நுட்ப திட்பம் என்ன?
என்கருதி அமைத்துள்ளீர், இயம்பு வீரே?'
என்றுரைத்தாய், கனல்பறக்க விழித்த போதும்
எதிர்த்தெழுந்த நக்கீர! கழல்ப ணிந்தே
ஏத்தெடுத்தோம்; எம்முயிராந் தமிழ்மொ ழிக்கே
எழுத்துக்கும் சொல்லுக்கும் பொருளி னுக்கும்
இறையாலும் பிழைவருதல் கூடா தென்னும்
எண்ணத்துள் வலிமைபெறத் தமிழை அன்றே
காத்தவன்நீ, ஆதலினெம் விழைவை ஏற்றுக்
கடிகமழும் கொடியாவும் ஓங்கு தெங்கின்
காய்வருடப் புயல்சுமக்கும் அழுந்தூ ராளன்
காப்பியத்தான் கம்பனையுங் காப்பாய் நன்றே (5)

இளங்கோ அடிகள்
(வேறு)

7 உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்துவர்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும்
உற்றிடும் அரைசியல் பிழைத்தோர்க் கறமே
ஓர்கூற் றாமென உரைத்தோன்
திரையார் பொன்னித் திருமகள் கண்ணகி
சிலம்பொலி செவியுள் அழுந்தச்
சிலையுளம் அழுந்தச் செய்த இளங்கோ
திருவடி எண்ணுவம் போற்றி;
வரையாச் செல்வம் வரையாய் அழுந்தும்
வருவிருந் தோம்புநர் இட்ட
வளவிய உணவு வயிற்றிடை அழுந்த
வன்பசி இடமிலா தழுந்தும்
கரைசார் கனிகளிற் காளைகண் ணழுந்தக்
கனிகண் மண்ணி லழுந்தும்
காட்சியார் அழுந்தூர் மாட்சியான் கம்பனைக்
கண்ணெனக் காத்தருள் கென்றே. (6)

சிலையுளம் அழுந்த—கண்ணகியின் உருவம் மனத்தில் பதிய; ('கரை ......அழுந்தும்' :-கரைசார் கனிகளில்—கரையிலுள்ள கனிகளில், காளை கண் அழுந்த—காளைகளின் கண்கள் படவே அவற்றை அக்காளைகள் பறிக்க, கனிகள் மண்ணில் அழுந்தும் " அக்கனிகள் மண்ணில் சிந்தி அழுந்தும் எனவும், கரையில் உள்ள கன்னியர்கள் மீது காளை போன்ற இளைஞர்களின் கண்கள் அழுந்தியதால் அதனைத் தாங்க மாட்டாத அம் மகளிரின் கண்கள் நாணத்தால் தரைநோக்கி அழுந்தும் எனவும் இருபொருள் கொள்க)

சீத்தலைச் சாத்தனார்

(வேறு)

8 ஊரலர் தூற்றிய தூற்றலில் ஒன்றையும்
உள்ளங் கொள்ளா உயர்குண மங்கை
உரிமைக் கோவலன் உயிரகன் றதன்பின்
ஒப்பிலள் இல்லற வாழ்வினை; அன்றியும்
தேரறச் செல்வியம் மாதவி தன்மகள்
தெள்ளிய அறிவினள் மணிமே கலையைச்
சேர்த்தனள் துறவில்அச் செய்தியை யாத்த
சீத்தலைச் சாத்தனை ஏத்துதும் நன்றே;
சீரணி வான்முகில் வெண்மை துறக்கச்
செந்நெல் விளைந்து தன்பயிர் துறக்கச்
சேற்றின் முதிர்கழை சாற்றினைத் துறக்கச்
செய்யவள் தன்னைத் தவ்வை துறக்க
நேரல ரானார் பகையினைத் துறக்க
நேருறு வறிஞரை நிரப்பு துறக்க
நீடிய வளநிறை திருவழுந் தூரின்
நிலைபெறு கம்பனைப் புரந்தருள் கென்றே (7)

நிரப்பு — வறுமை; ('சீரணி — நிரப்பு துறக்க' எதிர் நிலைப்பொருளன.)

திருத்தக்க தேவர்

(வேறு)

9 எவ்வாய் மருங்கு சென்றாலும்
எழில்வாய் மகளிர் மன்றல்கொள்
ஏந்தல் பெருமை இயம்புங்கால்
ஏற்ற சந்தம் இசைத்தவன்காண்,
செவ்வாய் எண்மர் நுகர்ந்ததன்பின்
செய்ய துறவு பூண்டவன்பேர்
சிந்தா மணிசெய் திருத்தக்க
தேவன் தாளைப் போற்றுதுமே;
எவ்வாய் நாவைப் பாமணக்கும்
எடுத்த காவைப் பூமணக்கும்
ஈவோர் கையை மழைமணக்கும்
ஏற்போர் கையைப் பொருள்மணக்கும்
வெவ்வே றெழிற்பா வைநீக்கி
விருத்தப் பாவை மணங்கொண்டு
வென்றி கொள்ளுந் திருவழுந்தூர்
வேந்தன் கம்பற் புரக்கென்றே. (8)

வாய் நா - வாயிலுள்ள நா; மணக்கும் - மணங்கொள்ளும் (மணந்து கொள்ளும்); கா—சோலை.

சமய குரவர் நால்வர்

(வேறு)

10 ஏடார்மலர் வாடும்மலர் என்றேமனம் எண்ண
இறைவன்மகிழ் செந்தேன்தமி ழிசையாம்மலர்
[மாலை
எடுத்தேயணிவித்தோர்பணி இயற்றுப்புகழ் அப்பர்,
ஏனூர்திரு வாரூருறை ஓர்சுந்தரர், அன்பு
வாடாதொளிர் மணிவாசக வள்ளல்பெருமானூர்,
வளமார்தமிழ் வலமேவிய பிரமாபுரச் செம்மல்
வரலாற்றொடு மிணையுஞ்சம யாசாரியர் நால்வர்
மலர்மாணடி மனஞ்சேர்ந்திடத் தொழுவாந்தலை
[தாழ்த்தே
காடார்குழல் மடவாரெலாம் களைகட்டிடும் காலம்
காதார்குழை அளவோடிய கண்ணின்நிழல் கண்டு
கயலாமெனக் கதுவும்மட நாரைக்கணம் நாணக்
காணுங்கயல் நகைகொண்டவண் கழுநீரிடைத்
[துள்ளும்
நாடாவளம் நாளுந்தரும் வேளாண்மையில் ஓங்கும்
நனிவன்கொழு நுனிபாய்ந்துழ அழுந்துந்திரு
[வழுந்தூர்
நாமேவிய பாவாலுயர் நல்லேரெழு பஃதை
நவின்றேயுயர் வளநாடனின் நலங்காத்தருள்
[கென்றே. (9)

பிரமாபுரச் செம்மல்-சீகாழித்திருஞான சம்பந்தர்;
ஏரெழுபஃது-ஏரெழுபது என்னும் நூல்.

சடகோபர்

(வேறு)

11 ஐந்நிலத்தில் முல்லைநிலம் விரும்ப லன்றி
அழகான குறிஞ்சியிலும் அமர்ந்த மாலை
ஆயிரம்நான் கடுக்கிவரும் பாவாம் பூவில்
அந்தாதித் தொடைசூட்டிக் கூவிக் கூவி
நைந்துருகும் மனத்தானைத் தமிழ்நா வானை
நன்மாறப் பெயரானை நம்மாழ் வானை
நாவலர்பா பண்மருவப் பாடி ஞானை
நற்குருகூர்ச் சடகோபன் தனைத்து திப்பாம்;
மைந்துமிகு புலவரெலாம் வாழ்த்திப் போற்ற
மற்றவர்கள் சீரெடுத்து வணங்கிப் போற்ற
வார்கூந்தல் நப்பின்னை போலவாகி
வான்தமிழிற் பாவிசைத்த சடகோ பன்மேல்
செந்தமிழிற் பேர்பாடி ஊரும் பாடிச்
சீர்பாடி 'அந்தாதி'த் தொடையும் பாடித்
திகழொளிசேர் புகழலங்கல் சூட்டிக் கொண்ட
திருவழுந்தூர்க் கம்பனையே காக்கவென்றே.(10)

★

மாலை-திருமாலை; நா+அலர்+பா; அந்தாதி - சடகோபர் அந்தாதி.

2. செங்கீரைப் பருவம்

(வேறு)

12 மெய்வண்ண அறிவுடைய மேலோரான் இவ்வுலகம்
மேன்மேலும் வாழு மெனவே
மேலவர்தங் காப்பியத்துள் உலகமென முதற்
விண்டோதும் ஓது முறையே [சொல்லை
மைவண்ணன் காப்பியத்தும் மங்கலமாம் அச்சொல்லை
வைத்தாள வாய முதமே
வண்ணமொடு பெருகிவர மடித்தவலக் காலின்
மற்ருேர்கால் ஏறி யுறவே [மேல்
கைவண்ண ஏடேந்தக் கையாணி கோலமிடக்
கவிபாடி மகிழு புலவ!
காதுண்ட சிறுகுழையும் மேனின்ற சூழியமும்
கண்டோரை யாட விடவே
செய்வண்ணம் சிறந்தோங்கும் பைவண்ண
செங்கீரை யாடி யருளே! [அழுந்தூர
திருவெண்ணெய் வருசடையன் அருளுள்ளம்
செங்கீரை யாடி யருளே! [உறைகம்ப
(11)

செய் — நன்செய்; பை — பசுமை: திருவெண்ணெய் - திருவெண்ணெய் நல்லூர்; சடையன்—சடையப்ப வள்ளல்.

13 கார்குலவு நிறத்தான்பேர்க் காப்பியத்தைச் செய்த
கற்றூர்கள் ஏம முறவே [பின்பு
காவிரிசூழ் திருவரங்கத் தமையரங்கக் கவின்
கள்ளாரும் பாவி ரியவே [மேடை
சீர்குலவு சடையன்பேர் நூறுகவிக் கொன்ருகச்
சென்ரேங்கி ஏற்ற முறவும்
'தெய்வப்பேர்க் காப்பியத்துள் மனிதப்பேர்
சேர்ந்துவரப் பாட்டி சைத்தல் [அடிக்கடியும்
நேர்முறையோ? அன்றன்று; நீக்கிடுக!' என்ருங்கு
நின்றசிலர் கூறி விடவும்
நெறிதவழும் நீர்மையனை அறிவறிந்த வெண்
நிலைத்தோங்கு நேய முறவே [ணெயனை
தேர்வுசெயும் ஆயிரத்தில் ஒருவனெனத் தேர்ந்
செங்கீரை யாடி யருளே! [திசைத்தோய்
திருவெண்ணெய் வருசடையன் அருளுள்ளம்
செங்கீரை யாடி யருளே. [உறைகம்ப
(12)

கள் - தேன்

14 துன்னிவரு முகில்வண்ணன் தோன்றியுலா வரும்
தோள்கண்டார் தோளே கண்டார் [போது
தொடுகழல்சேர் தாள்கண்டார் தாளேகண்
துளங்கல்கண் டாரும் அஃதே [டார்,தடக்கைத்
சென்னிமுதல் முழுவடிவைச் சேல்விழியார்
[தம்முள்ளும்
சேர்த்தொன்ருய்க் கண்டார் யாரோ?
செம்பஞ்சுச் சீறடியார் செயல்போலப்
சிந்தித்துத் திளைக்குந் தோறும் [பயில்வோரும்
தொன்றுமுதிர் சொல்கண்டார் சொல்லேகண் டார்
[பொருளின்
தொகைகண்டார் தொகையே கண்டார்
தொகுத்தணி கண்டாரும் அஃதேகண்
சுவைமுழுதும் யாரே கண்டார்? [டாரன்றிச்
தென்தமிழில் நுண்பொருள்கள் பின்னிவரச்
செங்கீரை யாடி யருளே! [செய்தவனே
திருவெண்ணெய் வருசடையன் அருளுள்ளம்
செங்கீரை யாடி யருளே! [உறைகம்ப
(13)

துளங்கல் – அசைவு

15 கொடியாடக் கொம்பாடக் கொழுந்தோடு மலர்
கொத்தோடு குலுங்கி யாடக் [பூத்துக்
கோத்தும்பி தேன்ஞிமிறு சுரும்பினங்கள்
கோதியவன் கொங்கி லாட [மகரந்தம்
அடியோடு கழைசாய்த்துப் பிழிசாறு வழிந்தோட
அடுகின்ற புகைவா னேறி
ஆதவனின் கதிரொளியை மறைப்பதுபோ
அடையடையாப் பரந்து லாவ [லணிதிரண்டே
இடியோடு விண்ணூடு கடிதேறி விளையாடும்
எழிலியென அதைம யங்கி
இசைக்குயில்கள் வாய்மூட எழிற்றோகைமயிலாட
எழினியெனத் திரையு மாடச்
செடியாடு மலராடத் தென்றல்வள ரழுந்தூர
செங்கீரை யாடியருளே!
திருவெண்ணெய் வருசடையன் அருளுள்ளம்
செங்கீரை யாடி யருளே. [உறைகம்ப
(14)

'கருப்புச் சாற்றைக் காய்ச்ச, அதனால் எழுந்த புகை முகில் போல் தோன்ற அதனைக் கொண்டல் என மயங்கிய குயில் வாய் மூடியிருத்தல் ஏற்புடையதுதான்! ஏனெனில் அது மயங்கும் இயல்பினது. மயக்கம் இல்லாதவனாகிய நீ செங்கீரையாடி யருளாதிருத்தல் ஏன்?' என்பது கருப் பொருளால் தோன்றும் குறிப்பு.

(வேறு)

16 தலைக்கடன் இதுவெனத் தாயுனை ஈன்று
தாங்கிப் புறந்தந்தாள்;
தன்கடன் இதுவெனத் தந்தையும் ஓர்ந்து
சான்றோன் எனச்செய்தான்;
குலக்கொழுந் துனக்குக் கொல்லன் கடனெனக்
கொடுத்தான் எழுத்தாணி;
கொற்றவன் நினக்கு நற்கவி வேந்தெனக்
கொடுத்தான் மணிமுடியே;
நிலைக்கடன் உளதென நேர்ந்தொரு காவியம்
நிறுவிப் பெயர்ந்தாயே!
நீடிய புகழே! நேடிய நட்பே!
நெறியோ டெழுந்துயர்பா
அலைக்கொரு கடலே! கலைக்கொரு நிதியே!
ஆடுக செங்கீரை!
அகிலிடு கொழும்புகை முகிலிடும் ஊர
ஆடுக செங்கீரை (15)

பா அலைக்கு ஒரு கடல்.

17 புவிபுகழ் தயரதன் பொன்னணி நினக்குப்
புனையவும் வந்தானே!
பொன்செய் தொட்டில் பொருவில் கோசலை
பூட்டவும் வந்தாளே!
சிவிகையும் கொண்டு செய்யவன் பரதன்
சீர்செய வந்தானே!
சிலைதவழ் கையன் செறிகழல் இலக்குவன்
தேர்கொடு வந்தானே!
கவிகையும் கொண்டு சத்துருக் கனனும்
காணிய வந்தானே!
கண்களி கொள்ளக் கனிந்துயர் தமிழ்த்தாய்
காதலின் முன்னாளில்
* அவிசொரிந் தாயிரம் வேட்ட பின் வந்தோய்
ஆடுக செங்கீரை!
அகிலிடு கொழும்புகை முகிலிடும் ஊர
ஆடுக செங்கீரை. (16)

---

* வேள்வி செய்து பெற்ற பிள்ளை என்றோ தவமிருந்து பெற்றபிள்ளை என்றோ கொள்க.

18 மஞ்சனை வண்ணன் வான்பொருள் யாவும்
வழங்கி வந்தோங்க,
மலரணி குழலி அலருரை மங்கை
வாழ்த்த வந்தோங்க,
நெஞ்சுறும் எண்ணம் கொஞ்சுறு மொழியில்
நிரலே நின்றோங்க,
நெறிபடுஞ் சொல்லில் முரிபட லின்றி
நிமிர்ந்து கொண்டாங்கே
பஞ்சிழை கொண்ட செஞ்செவே யாடை
பரந்து சென்றுங்குப்
பாவியல் பயிலும் காவியஞ் செய்து
பன்னிய பண்பாள!
அஞ்சன வண்ண! செஞ்சொலின் மன்ன!
ஆடுக செங்கீரை!
அகிலிடு கொழும்புகை முகிலிடும் ஊர
ஆடுக செங்கீரை. (17)

மஞ்சனை—மஞ்சு அனைய; பன்னிய-கூறிய.

19 அற்றங் காவாச் சுற்றுடைப் பூந்துகில்
அரையில் நின்ருட,
ஆயிரங் கதிரொளி பாய்ந்தொளி ராழி
அணிவிரல் வந்தாட,
மற்றுங் கோவை மணிபொன் முத்து
மார்பி லசைந்தாட,
மாற்றுயர் பவள மணிவாய் இதழில்
மலர்நகை மின்ருடக்
குற்றங் காணுக் கோதையர் சூழ்ந்து
குரவை பயின்ருடக்
கோனே பொன்னே தேனே முத்தே
என்றே கொண்டாடச்
செற்றஞ் சேரார் சேரழுந் தூர
செங்கோ செங்கீரை!
சீரிய கூரிய தீவிய மொழியாய்
செங்கோ செங்கீரை. (18)

தீவிய—இனிய

20 ஐயவி அப்பிய நெய்யணி முச்சி
அசைய அதனோடும்
அணிபிறை போல முப்புரி முத்தணி
அழகிய நுதலாட,
மையணி புருவ மலர்முக நுதலில்
வயங்கிய பொட்டோடு
வான்முழு மதியென வயிரச் சுட்டியும்
வந்து செறிந்தாட,
மெய்யரை ஞாணில் மேவிய மணியொடு
விளங்கிழை வடமாட,
மென்கழல் தண்டை வில்லிடு கிண்கிணி
மிடைந்து கலந்தாடத்
தெய்வப் பாடல் செய்கவி வேந்தே
செங்கோ செங்கீரை!
சீரிய கூரிய தீவிய மொழியாய்
செங்கோ செங்கீரை. (19)

வில் - ஒளி

21 கால்படு தூளிக் கணம்படு முன்னங்
கல்லும் கனியாகும்;
கைபடின் முள்ளும் கவினுற விரிந்து
கான்கொள் மலராகும்;
பால்வண அன்னம் பைந்நிறக் கிள்ளை
பசுங்கண் மயில்யாவும்
பார்வை படினே பாவைய ராகிப்
பரதம் பயின்றிடும்;
கால்வலி யானை கலைமான் உன்றன்
கண்ணொளி படும்போதே
கன்னிய ராகிக் களிநடம் புரியும்;
கழிபுனல் நிலைதோறும்
சேல்விளை யாடும் திருவழுந் தூர
செங்கோ செங்கீரை!
சீரிய கூரிய தீவிய மொழியாய்
செங்கோ செங்கீரை. (20)

கனியாகும்—கன்னியாகும்; பால்வண—பால்வண்ண,

3. தாலப் பருவம்

(வேறு)

22 தேம்பாய் பலவின் நிழலாடித்
தீரா ஆவல் மேலோங்கத்
திரிந்து திரிந்து புன்மேய்ந்து
திரிந்த மருப்புப் புனிற்றெருமை
தேம்பா மாணாக் கன்நாளும்
தேர்ந்த பாடம் மனத்திருத்தத்
திரும்பத் திரும்பப் பயிலல்போல்
தேமா நிழலில் அசைபோட்டுக்
கூம்பா மலர்சூழ் குளம்படிந்து
குடைந்தே யாட மடிநெரிந்து
கூடும் அமுதம் பெயக்கண்டு
குளிர்நீர் பிரித்துப் பெடையன்னம்
தீம்பால் பருகும் திருவழுந்தூர்ச்
செல்வா தாலே தாலேலோ.
தெய்வத் தமிழ்த்தாய் ஈன்றுமகிழ்
சேயே தாலே தாலேலோ. (21)

'நீரோடு கலந்த பாலைப் பிரித்துத் தனக்கு வேண்டியதை மட்டும் எடுத்துக் கொண்ட அன்னத்தைப்போல, வான்மீகியின் இராமாயணத்தில் தமிழ் மரபுக்கு ஏற்றதை மட்டும் எடுத்துக் கொண்டவன்' என்பது குறிப்புப் பொருள்.

23 நெஞ்சில் இன்பச் சுமையேற
நெடுவா னுச்சி வெயிலேற
நேரும் பசியும் உடனேற
நேரேர் உழவர் வழிநோக்க
அஞ்சல் அஞ்சல் எனச்சிலம்பும்
அணியின் ஒலிகேட் டகமலரும்;
அன்னம் பயில நடைபயின்றே
அருகிற் சென்று முறுவலிக்கும்
மஞ்சள் முகத்து மருதியர்கள்
மணங்கொள் தத்தங் கொழுநர்க்கு
வரையா அன்பை அமுதோடு
மகிழ்ந்தே யூட்டிப் பொழுதெல்லாம்
செஞ்சொல் விளைக்கும் திருவழுந்தூர்ச்
செல்வா தாலே தாலேலோ!
தெய்வத் தமிழ்த்தாய் ஈன்றுமகிழ்
சேயே தாலே தாலேலோ. (22)

மருதியர் — மருதநிலப்பெண்டிர் (உழுதுலமங்கையர்);
செஞ்சொல் — செம்மை + சொல்; - செந்நெல், (சொல் என்பதற்குச் சொல் என்றும் நெல் என்றும் இருபொருள் கொள்க.)

24 எய்தும் பொருளை உள்நினைவார்
ஏற்றம் உயர நீரசையும்
எருது பூட்ட நேரசையும்
இணையும் ஏரின் நிசையசையும்
செய்யும் செயலில் சீரசையும்
செறிந்த எருவின் தளையசையும்
செம்மை சான்ற அடிபதியும்
சேந்து நீரின் தொடைபொலியும்
மொய்கொள் புலத்தைப் பண்படுத்தி
முளைத்துத் தோன்றும் களைகட்டி
முறுகி வளரும் பயன்கண்டு
முழுமை பெற்ற மனத்தோடு
செய்யுள் விளக்கும் திருவழுந்தூர்ச்
செல்வா தாலே தாலேலோ!
தெய்வத் தமிழ்த்தாய் ஈன்றுமகிழ்
சேயே தாலே தாலேலோ. (23)

தொடைபொலியும் —கட்டுதல் (தேக்குதல்) சிறக்கும்- எதுகை மோனைத் தொடைகள் விளங்கும்; புலம்—நிலம்;- அறிவு; களைகட்டி - களை நீக்கி;பிழைநீக்கி; செய்யுள் - நிலத்துள் ;— பா (செய்யுள் என்பதற்கு நிலத்துள் என்றும் பா என்றும் இரு பொருள் கொள்க.)

25 கொழிக்கும் முத்து நகைமாதர்
கொண்ட பணியைத் தலைக்கொண்டு
குரலைக் குறிலா அமைவித்துக்
கொடுவாய்க் கதிர்வாள் கூன்பிறையைப்
பழிக்கும் நுதலிற் பதிந்தொளிரும்
பருவப் புருவ வில்கோட்டிப்
பாய்கண் அம்பை எய்தெய்து
பறிக்கும் களையோ டுயிர்பறிக்க
விழித்து நோக்கும் அவர்கொழுநர்
விடுமூச் சாங்கு நெடிலாக
வினையில் கையை இடையூன்றி
வெஃகிச் செய்யும் வேளாண்மை
செழித்துச் சிறக்கும் திருவழுந்தூர்ச்
செல்வா தாலே தாலேலோ!
தெய்வத் தமிழ்த்தாய் ஈன்றுமகிழ்
சேயே தாலே தாலேலோ. (24)

வேளாண்மை - பயிர்த்தொழில்;. வேள் + ஆண்மை — காமன் செய்கை. (வேளாண்மை என்பதற்கு இருபொருள் கொள்க.)

26 புட்டில் சுமந்த கோதண்டன்
புக்க காலை மிதிலைவளர்
பூவை கண்ட காட்சியினைப்
பொன்னி அவற்காண் மாட்சியினைச்
சுட்டிச் சொல்ல மனங்கொண்டோ
சொல்லும் பொருளும் அணிசேர்த்துச்
சொரிவான் வேண்டி விரலமுதைத்
துவர்வாய் வைத்தே ஆராய்ந்து
தொட்டிற் கிடந்து மேன்முகட்டைத்
துணைப்பூ விழியால் பார்த்திருந்து
தோலா நாவால் இசைகூட்டிச்
சுவைத்தே னமுதப் பாடல்தரத்
திட்டஞ் செய்தாய்! திருவழுந்தூர்ச்
செல்வா தாலே தாலேலோ!
தெய்வத் தமிழ்த்தாய் ஈன்றுமகிழ்
சேயே தாலே தாலேலோ. (25)

துவர் — பவளம்

(வேறு)

27 எண்ணில் எழுத்தில் தன்னிற் சிறந்தோன்
இருத்தல் கண்டொருவன்
இன்னுந் தன்னை அவற்கும் மேலா
இலங்க முயல்வான் போல்
வண்ணந் தீன்ற வெண்ணித் திலத்தின்
வண்ணங் கண்டன்னம்
மறு, தன் வண்ணம் என்றே நாணி
மணிநீர் குடைந்தாடி
வெண்ணித் திலத்தின் குவைமே னின்றிள
வெயிலின் கதிராடி
விரித்த சிறகின் ஈரம் புலர்த்தி
வெண்மை மெருகேற்றும்
தண்ணந் துறைசேர் திருவழுந் தூர
தாலே தாலேலோ!
தண்டமிழ்ப் பொழிலில் தழைகவிக் குயிலே
தாலே தாலேலோ. (26)

வள்+நந்து—வளமான நத்தை;
மறு—களங்கம் (தன் வண்ணம் மறு என மாற்றிப் பொருள் கொள்க)'நித்திலத்தின் வெண்மை கண்டு நாணிய அன்னம் மணிநீர் குடைந்தாடியும், வெயிலில் ஈரம் புலர்த்தியும் நித்திலத்திற்கு நிகராக விளங்கவேண்டும் என எண்ணினாற்-போல், நினக்கு நிகராக விளங்கவேண்டும என்று புலவர்கள் முயன்றும் வெற்றி பெறவில்லை' என்பது குறிப்புப் பொருள்,

28 தெண்டிரை இலங்கைக் கண்டியின் மன்னன்
சீயப் பரராசன்
தேடா வறுமை நீடிய தாலே
தேம்பும் நாட்டார்கள்
கொண்டிடும் பசியின் கொடுமையைப் போக்கக்
கொள்ளான் வழியேதும்,
கொழிதமிழ்ப் புலவர் [1]நாவாய் மொழியாற்
குறித்தான் திருமுகமே!
நண்பொடும் அதனைக் கண்ணுற் றதுமே
[2]நாவாய் நாவாயா
நல்லுயிர் ஓம்பும் உலைக்குறு பொருளந்
நாளே ஈந்தானோர்
தண்ணளி வெண்ணெய்க் கண்ணனின் நண்ப
தாலே தாலேலோ!
தண்டமிழ்ப் பொழிலில் தழைகவிக் குயிலே
தாலே தாலேலோ. (27)

---

1 நா + வாய் + மொழி. 2 நாவாய்—கப்பல்; வெண்ணெய்—திருவெண்ணெய் நல்லூர்; கண்ணன்—சடையப்ப வள்ளலின் பெயர்களுள் ஒன்று.

29 பொற்சங் கெடுத்துப் பாலைப் புகட்டின்
புந்தி வளராதாம்,
புத்தொளி வெள்ளிச் சங்கால் புகட்டின்
வித்தை பொலியாதாம்,
செற்றம் இலராய் மற்றவர் செப்பத்
திருப்பாற் கடல்மூழ்கித்
திருமால் கையில் திகழும் சங்கைச்
சேர்த்தார் கொடுவந்தே!
முற்றிய அன்பால் பெற்றவள் நாளும்
முப்பால் முகந்தூட்ட
முன்னிமை சொக்கப் பொன்வளர் தொட்டில்
முத்தே கண்வளராய்!
சற்றுங் குறையாத் தகைசால் புலவ
தாலே தாலேலோ!
சங்கத் தமிழின் துங்கக் கவிஞ
தாலே தாலேலோ. (28)

30 நீரிற் சங்கம் உறங்க மேதி
நிழலிற் படிந்துறங்கும்,
நேர்தாள் வண்டும் உறங்கச் செய்யாள்
நெடுந்தா மரையுறங்கும்,
தூரில் ஆமை உறங்கச் சிப்பி
துறையிற் றுதைந்துறங்கும்,
தோன்றும் போரில் அன்னம் உறங்கத்
தோகை பொழிலுறங்கும்,
ஊரில் யாரும் உறங்க உறங்கா
துன்னிமை போராடல்
உனக்கிது முறையோ புனக்கிளி யனையாய்?
உயிரே கண்வளராய்?
தாரில் ஊறும் வேரிக் கவியே
தாலே தாலேலோ!
சங்கத் தமிழின் துங்கக் கவிஞ
தாலே தாலேலோ. (29)

———

தார்—பூ; போர் — வைக்கோற்போர்; தோகை — மயில்; வேரி—தேன்.

31 முன்னை நல்வினை முதிர்பய ளுல்வரு
முத்தே சீராளா!
முற்றிய வேள்வியின் நற்றவக் கொழுந்தே
மூவாப் பேராளா!
தொன்மை சேர்தமிழ் வன்மை மேவிய
தோலா நாவோயே!
துறைபெறு விருத்தம் உறைபெறு கவிக்கோர்
தோன்ற லானுயே!
நன்னர் மேவிய கீர்த்தியி ஞயக
நாட்பூ வாயோனே!
நண்ணிய பொருளே! புண்ணிய நின்னை
நாடார் யாரிங்கே?
தன்னிக ரில்லாத் தண்டமிழ்ப் புலவ
தாலே தாலேலோ!
சங்கத் தமிழின் துங்கக் கவிஞ
தாலே தாலேலோ. (30)

☆

நாட்பூ—நாளில் பூத்த பூ (அன்றலர்ந்த மலர்),
பூவாயோன்—பூப்போன்ற வாயினன்.

4. சப்பாணிப் பருவம்

(வேறு)

32 சேறீன்ற தாமரைகள் தேனீன்று வண்டுக்குச்
சிந்தாமல் விருந்து வைக்கும்,
செழிப்பான பொழில்யாவும் பூவீன்று வருகின்ற
தென்றற்கு விருந்து வைக்கும்,
ஆறீன்ற தன்நீரை அருகீன்று வயற்கெல்லாம்
அமுதாக்கி விருந்து வைக்கும்,
அவ்வயலும் வளமீன்றே ஆங்குவளர்
அளவின்றி விருந்து வைக்கும் [உயிர்க்கெல்லாம்
நாறீன்ற நெற்பயிர்கள் நூறீன்று நட்டார்க்கு
நன்ருக விருந்து வைக்கும்,
நயனீன்ற சாறெல்லாம் பயனீன்று கண்ணுக்கு
நாடோறும் விருந்து வைக்கும்,
தாறீன்ற வாழையெலாம் அணிலூட்டும் அழுந்தூர
சப்பாணி கொட்டி யருளே!
தமிழென்னும் அளப்பரிய இமிழ்கடலைக்
சப்பாணி கொட்டி யருளே. [குடைந்தவனே
(31)

ஆறு + ஈன்ற + தன் + நீரை; ஈண்டு- நெருங்கு; நாறு-நாற்று; நட்டார் - நடவு செய்தார், (நட்புற்ருர்) சாறு - விழா. 'அழுந்தூரில் உள்ள இயற்கைப் பொருள்களெல்லாம் தம்மிடமுள்ள பொருளை வழங்கி விருந்து வைக்கும் இயல்பு உடையவாய் இருப்ப, நீ மட்டும் சப்பாணி கொட்டி, என் கண்ணிற்கும் செவிக்கும் விருந்து வைக்காதிருத்தல் ஏனோ?' என்பது குறிப்புப் பொருள்.

33 சேர்ந்தொளிருந் தாதுகுக்கும் சோலைதொறும்,
செறிந்திருக்கும் காடு தோறும், [சண்பகமும்
தேமலரின் போதவிழும் பொய்கைதொறும்,
[வெள்ளியெனத்
திகழ்மணலின் தடங்கள் தோறும்,
வார்ந்தொளிரும் மாதவியின் வேலிகொண்டு
வளர்பூக வனங்கள் தோறும், [வானோங்கி
வயல்தோறும், வளர்தெங்கு செவ்வாழை
வளர்கின்ற வனங்கள் தோறும், [பூந்தாழை
தீர்ந்தறியாக் கால்பலவா ஊர்ந்தேறி யூர்தோறும்
சென்றூட்டிச் சென்ற போதும்
சேர்ந்தவுடல் பலவற்றின் உள்ளிருந்தும் ஓயாத
தேயாத உயிர்கள் போலச்
சார்ந்துவரு புனற்பொன்னி யூர்ந்துவரும் அழுந்தூர
சப்பாணி கொட்டி யருளே!
தமிழென்னும் அளப்பரிய இமிழ்க்கடலைக்
சப்பாணி கொட்டி யருளே. [குடைந்தவனே
(32)

பூகம்—கமுகு. 'காடு தொறும், தடங்கள் தொறும். வனங்கள் தொறும் கால்பலவாகப் பிரிந்து சென்றாலும் ஓயாது தேயாது ஓடும் காவிரிபோல எத்தனைபேர் எடுத்தெடுத்து மொழியினும் புதுப்புதுக் கருத்துக்கள் தேயாமல் ஓயாமல் வளர்ந்த வண்ணம் இருப்பது நின் காவியம்' என்பது குறிப்புப் பொருள்

34 [1]சிலம்புகளே பரலாகச் சிலம்புகின்ற சிலம்போடு
செறிகழலும் சேர்ந்த தாளாள்,
சினமில்லாக் காலத்தும் செந்தீயைக் கொடு
சிந்துமிரு தீய கண்ணாள், [நஞ்சைச்
புலம்புறவே புறந்திரிவாள் புல்லுயிரும் வல்லுயிரும்
பொக்கெனவே பற்றி யுண்பாள்,
பொருந்தியுள வரைகளையே கழங்காக்கி
பொழுதுகழி யாட லுடையாள் [விளையாடிப்
சலவுருவாள் தாடகையாள் சரமொன்றால் துளைபட்டுச்
சாயுமுடல் பொழிகு ருதியால்
தனிவண்ணச் செவ்வானம் தரைமீது
சாய்ந்தாளி ஞளைசை கேட்டுச் [நனிகாணச்
சலம்புணராக் கொள்கையவர் சார்கின்ற அழுந்தூர
சப்பாணி கொட்டி யருளே!
தமிழென்னும் அளப்பரிய இமிழ்கடலைக்
சப்பாணி கொட்டி யருளே. [குடைந்தவனே
(33)

புலம்புற — தனியாக; சலம் உருவாள் - பாவத்தின் உருவினள்.
1மலைகளைப் பரல்கற்களாகக் கொண்டு ஒலிக்கும் சிலம்பு.

35 நஞ்சனைய நெஞ்சினராம் மாரீசன் சுவாகென்பார்
நாடற்ற வாழ்க்கை பெற்றும்
நாகவிழி நாகநடை நாகமன தோளினராய்
நண்ணியவர் தலைமை ஏற்க
வஞ்சனையும் பொய்வினையும் வரைவின்றி
வாளரக்கர் கூட்டம் ஈண்டி [வளர்ந்துள்ள
வாய்த்துள்ள மன்னுயிர்க்கும் மாதவர்க்கும்
மறவாமல் செய்து நிற்கக் [கொடுமைகளை
கஞ்சமலர் நயனத்தான் கைவாளிக் கஞ்சியவன்
கடலுள்மா ரீசன் போகக்
கடிவாளிக் கிரையாகி மண்வீழும் சுவாகாங்குக்
கதறுமொலி செவியி லேறத்
தஞ்சமென வருவோரை யஞ்சலெனும் அழுந்தூர
சப்பாணி கொட்டி யருளே!
தமிழென்னும் அளப்பரிய இமிழ்கடலைக்
சப்பாணி கொட்டி யருளே! [குடைந்தவனே
(34)

நாகம் – 1 பாம்பு 2 யானை 3 மலை; அன – அன்ன.

36 கன்னிமயில் அனப்பேடை கள்ளிருக்கும்
காவிக்கண் மிதிலைப் பொன்னி [மலர்க்கூந்தல்
கார்வந்து களைப்பாறிக் காலுந்த மேலுந்தும்
கடிமதில்கொள் கன்னி மாடம்
ஒன்றியவள் ஓடியகண் நிலைகுத்தக் கரியவனின்
ஒண்கண்ணை உண்க ணுண்ண
உரியவனும் கண்கொண்டான் உணர்வொன்ற
மற்றொருவர் புகுந்து கொண்டார்; [ஒருவரகம்
மன்னவையிற் சனகன்வை கார்முகத்தை மழை
வளைக்கக்கைக் கொண்ட போது [வண்ணன்
வைத்தவிழி வாங்காமல் கண்டிருக்க அஃதிற்ற
வானிடியின் ஓசை கேட்டுத்
தன்வளத்தில் தனக்குநிகர் தானேயாம் அழுந்தூர
சப்பாணி கொட்டி யருளே!
தமிழென்னும் அளப்பரிய இமிழ்கடலைக்
சப்பாணி கொட்டி யருளே. [குடைந்தவனே
(35)

கார்முகம் – வில்.

(வேறு)

37 நீதியின் வழியில் நிற்போர்க் கின்னல்
நேரினும் நிலையாதே!
நெறிமுறை தவறும் குருடர்க் கழிவும்
நேர்ந்திடும் விலகாதே!
ஓதியும் உணர்ந்தும் உணர்வழி நின்றோர்
உரைபொருள் வளங்காட்டி,
ஒப்புர வாற்றி உயர்பதம் பெற்ற
உரவோர் செயல்காட்டி,
ஊதியங் கருதா தூழியம் செய்யும்
உத்தமர் உருக்காட்டி,
உயர்செஞ் சோற்றுக் கடனுக் குயிரை
உதவினர் திறஞ்சொன்னாய்!
கோதிலர் குணத்தர் கூடமுந் தூர
கொட்டுக சப்பாணி!
தொழுவிய காவியம் எழுதிய கைகொடு
கொட்டுக சப்பாணி (36)

38 காரணி வண்ணன் பேரணி காட்டிக்
கற்பனை நயஞ்செறியக்
காண்பவ ருள்ளம் மாண்புற எழுதும்
கைவல ஓவியனே!
பேரறி வாளன் உலகம வாவிய
பெற்றியன் திருவேபோற்
பெருகூ ருணியும், பெருந்தகை யாளன்
பெற்றிடும் செல்வம்போல்
ஊரணி கொண்ட மருந்துநன் மரமும்,
ஒப்பில் நயனுடையான்
உற்றிடுஞ் செல்வம் போன்ருெளிர் கின்ற
உள்ளூர்ப் பழுமரமும்,
கூரறி வாளரும் கூடமுந் தூர
கொட்டுக சப்பாணி!
கொழுவிய காவியம் எழுதிய கைகொடு
கொட்டுக சப்பாணி. (37)

பேரணி - பேரழகு.

39 உட்புகை நெஞ்சர் உயிர்க்குல முண்ணும்
ஒழியா இயல்பாளர்
உருவில் வலியர் அருளி லரக்கர்
ஒவ்வாக் குலவேரைக்
கட்டொடும் அறுத்துப் பட்டிடச் செய்யும்
காலங் கைகூடக்
கட்டமை வரிவிற் கார்முகிற் காளை
கான்செல வித்திட்ட
ஒட்டகப் புறத்தைப் புறங்கொள் புறமே
ஒன்றும் மந்தரையாள்
ஒல்லா வாயொடும் பொல்லா நகையொடும்
உலவு தலைக்கண்டு
கொட்புறும் அளி,மலர் கூடமுந் தூர
கொட்டுக சப்பாணி!
கொழுவிய காவியம் எழுதிய கைகொடு
கொட்டுக சப்பாணி. (38)

கொட்புறும் - சுழலும்.

தண்டக வனத்துறை தனியவன் அரக்கனாய்த்
தான்திரி வன்கண்ணன்,
தாவர சங்கமம் யாவையும் வாரித்
தானுணும் தறுகண்ணன்,
மண்டலம் விண்டலம் எதிருநர் அழித்தவன்
மாதவள் சீதையினை
வவ்விட, வள்ளலின் வதைபட் டுதைபட
மண்ணுழை விராதன்முன்
கொண்டதன் நிலையுணர்ந் தறிவொளி கூடிடக்
கோதைவிற் குரிசில்பாற்
குழைவுறு மனத்தொடு குறைவறத் துதித்துக்
கூறிடும் மொழிகேட்டுக்
குண்டுநீ ரிலஞ்சி கூடழுந் தூர
கொட்டுக சப்பாணி!
கொழுவிய காவியம் எழுதிய கைகொடு
கொட்டுக சப்பாணி. (39)

மண் + தலம்; விண் + தலம்;
வள்ளலின் - இராமனால்; மண் + நுழை.

41 உருகிய செம்பொனும் ஓடும் ஒன்றென
உன்னும் ஒண்மதியும்
ஒன்றிய புலன்கள் ஓரைந் தடக்கும்
உரனும் உடையார்போல்
பருகிடு நீரில் வதிவுறும் ஆமைப்
பாரிய முதுகின்மேல்
பல்பொறி அலவன் நல்லுற வாடிப்
படிந்து விளையாட
அருகுசென் றதனைக் கதுவிடும் எண்ணம்
அறவே இலதாகி
அதனலம் பெருகக் கரைமருங் கிருந்தே
ஆசி யுரைநல்கிக்
குருகுகண் குளிரும் திருவழுந் தூர
கொட்டுக சப்பாணி!
கொழுவிய காவியம் எழுதிய கைகொடு
கொட்டுக சப்பாணி. (40)

★

'ஆமையின் முதுகில் அலவன் ஏறிவிளையாட அதனைக் கண் குளிரக் கண்டு குருகு களித்தாற் போல, வேறுபாடுற்று நின்ற சைவத்தையும் வைணவத்தையும் உறவாடி விளையாட விட்டுச் சமயக் கணக்கர்களையே கண்குளிர வைத்தவன்' என்பது குறிப்புப் பொருள்.

5. முத்தப் பருவம்

(வேறு)

42 புகலும் வாழ்த்து வணக்கமொடு
பொருந்து பொருளும் செறிகுவதாய்ப்
புகழும் நான்கு பொருள்பயக்கும்
புதுமை நடையும் உடைத்தாகி
நிகரில் தலைவன் றனைக்கொண்டு
நிலைக்கும் மலையுங் கடல்நாடும்
நிறுவு நகரும் பொழுதுமிரு
நெடிய சுடரின் தோற்றமொடும்
தகவின் புனைந்து மணம்புணர்த்துத்
தாதார் பொழிலும் புனலாட்டும்
சாற்றி எட்டுச் சுவைகூட்டித்
தக்கார் தருபொன் முடிசூட்டித்
திகழும் பெருங்காப் பியமுரைத்த
செவ்வாய் முத்தம் தருகவே!
செந்நெற் பழனத் தழுந்தூரின்
செல்வா முத்தம் தருகவே. (41)

பொழுது -பெரும் பொழுது, சிறுபொழுது. இருநெடிய சுடர் -ஞாயிறு, திங்கள். (ஆட்டும் என்பதைப் பொழிலொடுங் கூட்டுக)

43 எண்ணற் றெழுந்த சொற்சுவையும்
இணையற் றெழுந்த பொருட்சுவையும்
இணையுற் றெழுந்த அணிச்சுவையும்
இணைப்புற் றெழுந்த கவிச்சுவையும்
கண்ணுற் றுளிரும் அரங்கேற்றக்
கனிவுற் றார்கண் நீர்பனிப்பக்
காதுற் றார்மெய்ம் மயிர்பொடிப்பக்
கையுற் றார்செய்ம் முழக்கொலிபோய்
விண்ணுற் றதிர வியப்போங்க
விரிந்து பரந்த கடலன்ன
விளையும் நயங்கள் எடுத்தோதி
வினவற் கியைந்த விடைநல்கித்
தெண்மை திகழ மொழிமொழியும்
செவ்வாய் முத்தம் தருகவே!
செந்நெல் பழனத் தழுந்தூரின்
செல்வா முத்தம் தருகவே. (42)

தெண்மை - தெளிவு.

44 வன்சங் கீன்ற பருமுத்தும்
வட்கிக் கடலுட் போய்ப்பதிய
வால்வெண் ணிறத்தி னெருமுத்தும்
வண்மைக் கரும்புட் போய்ப்பதிய,
நன்முத் தொன்று நாணுற்று
நன்செய்ச் சாலிக் குட்பதிய,
நயங்கொள் அரிய முத்தொன்று
நாணி வேய்க்குட் போய்ப்பதியத்
துன்புற் றொடுங்கி ஒருமுத்தும்
தும்பிக் கொம்புட் போய்ப்பதியச்
சூல்கொள் மேகத் தொருமுத்தும்
தோன்ற லின்றி யுட்பதியத்
தென்சொல் முத்து விளைவிக்கும்
செவ்வாய் முத்தம் தருகவே!
செந்நெற் பழனத் தழுந்தூரின்
செல்வா முத்தம் தருகவே. (43)

வட்கி—வெட்கி; தும்பி—யானை.

45 கஞ்சம் மலர்ந்து கரைதாவிக்
காணும் இஞ்சி முத்தமிடும்,
கண்ணுற் றெழுந்த அவ்விஞ்சி
கடிகொள் மஞ்சள் முத்தமிடும்,
மஞ்சள் செழித்து வளர்ந்தோங்கி
வரிநெற் கதிரை முத்தமிடும்,
வரம்பை மேவி அக்கதிரும்
வளர்ந்த கரும்பை முத்தமிடும்,
எஞ்ச லில்லா இன்கரும்பும்
எழுந்தே கமுகை முத்தமிடும்,
எழுந்த கமுகும் இளநீரை
இனிதே முத்த, அத்தெங்கு
செஞ்ச முகிலை முத்தமிடும்,
செல்வா முத்தம் தருகவே!
செந்நெற் பழனத் தழுந்தூர
செவ்வாய் முத்தம் தருகவே. (44)

செஞ்ச - நேராக.

46 தூக்கின் அரிய இசைபயின்று
சோலை மாவின் துளிரயின்று
துணையோ டுறைந்து கருவுற்றுத்
துயரற் றீனுங் காலத்துக்
காக்கைக் கூட்டைக் கண்டுவந்து
கருதிக் குயிலும் முட்டையிடக்
காக்கை அதனை அடைகாத்துக்
கருத்தோ டிருந்து பார்ப்பெடுத்து
மூக்கில் இரையைக் கொடுவந்து
முன்னந் தனது பார்ப்போடு
முளையாச் சிறகுக் குயிற்பார்ப்பை
முனைப்புற் றூட்டி வளர்த்திருந்து
காக்கும் அழுந்தூர்க் கவிச்செல்வா
கனிவாய் முத்தம் தருகவே!
கன்னித் தமிழில் வடகதைசொல்
கனிவாய் முத்தம் தருகவே. (45)

'குயிலின் முட்டையைக் காக்கை அடைகாத்துப் பார்ப்பாக்கி இரையூட்டி வளர்த்துக் காத்தாற் போல, வடமொழிக் கதையாகிய இராமாயணத்தை மனத்திலேற்றுத் தமிழில் இராமகாதையாகப் பாடித் தமிழ் மரபெனும் இரையூட்டி வளர்த்தவன்' என்பது குறிப்பாற் பெறப்படும்.

(வேறு)

47 தளவம் புரையெம் தவள எயிற்றின்
தகைமைக் குடைந்த, கடலின்
தரங்கந் தருவெண் டரளமும் கொள்ளேம்;
ததர்கொள் மலர்கள் அணியெம்
அளகஞ் செறிந்த அருநிற மஞ்சி
அலைவு மிகுந்த முகிலும்
அளிக்கும் பனிவெண் டரளமும் வெஃகேம்;
அணிகொள் டணைத்தோட் குடைந்து
குளகக் கவியின் வளர்[1]கழை முத்தைக்
குறியேம்; இனிக்கு மெஞ்சொற்
கொளுநற் சுவையிற் குடை[2]கழை முத்தைக்
குறித்திங் கெதுவும் புகலேம்;
களபந் திகழும் மணிதிகழ் மார்பா
கனிவாய் முத்தம் அருளே!
கமுகின் கன்னல் வளரமுந் தூர
கனிவாய் முத்தம் அருளே. (46)

தளவம்—முல்லை; தவளம்—வெண்மை; ததர்—கொத்து;
கழை— 1. மூங்கில், 2. கரும்பு.

48 கொண்டல் முழங்கிக் குவிக்கும் முத்தும்,
குறுங்கண் கழையீன் முத்தும்,
குளிர்வெண் டணிலம் குவிக்கும் முத்தும்,
கொழுந்தா மரையின் முத்தும்,
வண்டல் வயல்நெற் கதிரீன் முத்தும்,
வளர்வேய் வெடித்தீன் முத்தும்,
வழையி னடியில், கதலித் தூரில்,
வரம்பில், குரம்பில், சாலில்,
கண்டல் அடிக்குள் வதிந்தே நந்து
கருதி இடுநன் முத்தும்,
களமர் சிறுவர் முகந்து வந்து
கடைமுன் பரப்புங் காட்சி
கண்டின் புறுங்சற் கண்டின் மொழியோய்
கனிவாய் முத்தம் அருளே!
கமுகின் கன்னல் வளரமுந் தூர
கனிவாய் முத்தம் அருளே. (47)

கடை - வாயில்.

49 மங்கை கழுத்தின் வடிவைப் பழித்து
வளர்ந்தே உயர்ந்த கமுகு
வடிகுலைப் பசுங்காய், வளமை மஞ்சள்
வண்ணம் அடைந்தி ராமன்
அங்கை, அகல்கண், அடிகள், உரிய
அளவின் அமைந்த இதழ்கள்
அமைவுறச் சிவந்து திகழ்தல் அனைய
அழகின் பழுத்துப் பொலியத்
தங்கும் கிளிகள் தமக்குக் கோவை
தருநற் கனியென் றெண்ணித்
தலையுறும் அலகாற் கதுவக் காய்போல்
தலைகள் தயங்கும் காட்சி
கங்கி லிருந்து கண்டு வியப்போய்
கனிவாய் முத்தம் அருளே!
கமுகின் கன்னல் வளரமுந் தூர
கனிவாய் முத்தம் அருளே. (48)

தயங்கும்—அசையும்; கங்கு—வயல் வரம்பு.

'கிளிகள் கமுகின் பழத்தைக்கோவைக் கனியெனக் கருதிக் கதுவ, கோவை அன்மையை அறிந்து, ஆசையழிந்து ஏமாந்தாற்போல, முத்தம் தருவாய் என்ற என் நம்பிக்கை அழிந்து நான் ஏமாறாதவாறு முத்தம்தருக!' என்பது குறிப்புப் பொருள்.

'கிளியின் ஏமாற்றம் கண்டு வியந்தவன் நீ. என் ஏமாற்றத்தையும் கண்டு வியக்க விரும்பாதே!' என்பதும் குறிப்பால் கொள்ளக்கிடக்கின்றது.

(பழத்தைப் பற்ற முனையும் கிளிகளின் தலைகள் பாக்குக்காய் போல் காட்சியளிக்கின்றன.)

50 நாமுறு கடலே ஆடையி னுடீஇய
நனிமிகு தொன்மை உலகில்
நால்வகை நிலத்தின் பால்வகை நிறீஇய
நலமெழு நம்முன் அறிவர்
ஆமுறு செழுநா அசைவுற எழீஇய
அழகுறும் செம்மைத் தமிழில்
ஆகிடும் கடல்நூற் பாகினை அளீஇய
அறிவினர் பின்னோர் சுவைக்க
ஏமுறு மனத்தொ டியற்றினர் தரீஇய
இலக்கண இலக்கியம் அயின்றோர்
யாம்பெறு இன்பம் யாவரும் பெறீஇய
ரெனச்சொலும் தமிழின் மரபைக்
காமுறு புலவ தோமறு மொழியோய்
கனிவாய் முத்தம் அருளே!
கமுகின் கன்னல் வளரமுந் தூர
கனிவாய் முத்தம் அருளே, (49)

நாம் – அச்சம்; ஆம் – அழகு.

51 முன்னைப் பழைமைக் கொருமுதுப் பழைமை
முதிரும் முதன்மைப் பொருளாய்,
மொழியும் புதுமைக் கொளிதரு புதுமை
முகிழ்க்கும் மும்மைத் தமிழாய்த்
தென்றற் பொதியில் திகழ்வான் மதியாய்த்
திருமால் வடபாற் குன்றம்
தெற்கில் குமரி ஆயிடைத் திகழ்ந்து
செங்கோ லாட்சி சிறந்த
மன்னர் மூவர் மடிவளர் மகளாய்
மறையோர் இறையோர் எவரும்
மடிதற் றெழுந்து பணிசெய மகிழ்ந்து
மகவொரு நான்கு மீன்ற
கன்னித் தமிழின் இன்சொற் கிள்ளாய்
கனிவாய் முத்தம் அருளே!
கமுகின் கன்னல் வளரமுந் தூர
கனிவாய் முத்தம் அருளே. (50)

★

மகவொரு நான்கு — கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு என்னும் நான்கு மொழிப் பிள்ளைகள்

6. வருகைப் பருவம்

(வேறு)

52 நாமந் தருபேர் மலையிழிந்து
நாஞு வகைய மணியோடும்
நத்தும் பொன்னின் துகளோடும்
நடன மயிலின் பீலியொடும்
வாமக் களிற்றுக் கொம்போடும்
வயிரக் கள்ளி அகிலோடும்
மணத்தின் மிக்க சந்தோடும்
மலரின் தாதுத் தேனேடும்
ஏமந் தருநற் பொருளின்னும்
யாவை உளவோ அவைவாரி
ஏம்பல் மிக்க வணிகர்போல்
ஏதம் நீக்கிப் பரந்துவரும்
காமர் பொன்னி சூழழுந்தூர்க்
கம்ப நாடா வருகவே!
கட்டுத் தறியும் கவிபாடும்
கம்ப நாடா வருகவே. (51)

நாமம் - அச்சம்; சந்து - சந்தனம்; ஏம்பல் - ஆரவாரம்.

53 வளருஞ் செந்நெற் பயிர்பேணி
வளைந்த கதிரின் நிலையுணர்ந்து
வரிப்பல் குயத்தா லரிந்தெடுத்து
வயலின் களத்திற் கட்டடித்தார்
அளவின் மேரு நெற்குன்றம்
அமைய, அரியைப் போரிட்டார்
அதனைப் பரப்பிக் கடாவிட்டே
அடையும் நெல்லில் ஒருபங்கை
உளமும் மகிழ இரவலர்க்கும்
உடனீந் துவந்தார் பொதியேற்றி
உருக்கொள் பண்டி மனைசெலுத்தி
உழுதுண் வாழ்வே உயர்வென்னும்
களமர் குழுமும் திருவழுந்தூர்க்
கம்ப நாடா வருகவே!
கட்டுத் தறியும் கவிபாடும்
கம்ப நாடா வருகவே. (52)

அரி—வைக்கோல்; பண்டி - வண்டி.
'களமர்கள் இரவலர்க்கு ஈந்துவக்கும் அழுந்தூரில் தோன்றிய நீ, நான் இரந்து நிற்பதறிந்தும் வாராதிருக்கலாமோ?' என்பது குறிப்புப் பொருள்.

54 நாட்கொள் போது நிறைகூந்தல்
நறவும் நாணும் இன்றீஞ்சொல்
நவ்விக் கண்ணின் மருதியர்தாம்
நடந்து செல்லும் நடையழகை
வேட்புற் றன்னம் பின்றிரிய
விரிந்த நளினப் பள்ளியிடை
மேவி வளரும் இளம்பிள்ளை,
மேயும் மேதி கன்றுள்ளிக்
கோட்பின் விளித்துச் சோர்பாலைக்
குளிர்நீர் நீக்கிப் பருகியதும்
கூடும் அரிய துயில்கொள்ளக்
குலவும் தேரை தாலாட்டும்
காட்சி வளரும் திருவழுந்தூர்க்
கம்ப நாடா வருகவே!
கட்டுத் தறியுங் கவிபாடும்
கம்ப நாடா வருகவே. (53)

கோட்பு—வலிமை.

55 புயலைத் தாக்கிப் பொருதெங்கு,
புறக்காழ் பொதியுங் கரும்போந்தை
பொருந்து பாளை அரிந்துவிடப்
பொங்கிக் கலயம் வழிதேனும்,
துயலுங் கொம்பிற் கனித்தேனும்,
தூங்கு தாற்றின் கனித்தேனும்,
தொடையி னிழியு மிருல்தேனும்,
துலங்கும் ஆலைக் கழைத்தேனும்
மயங்கிச் சேர்ந்து வரம்போட
வாளை கெண்டை கயல்கெளிறு
வராஅல் உளுவை மண்டுகம்
வாய்வைத் தருந்திக் களிதூங்கும்
கயங்கள் வயங்கு திருவழுந்தூர்க்
கம்ப நாடா வருகவே!
கட்டுத் தறியுங் கவிபாடும்
கம்ப நாடா வருகவே. (54)

போந்தை — பனை.
திருவழுந்தூரில் பெருகி வரும் பல்வகைத் தேனும் உண்ட வாளை முதலியன களித்துக் கிடந்தாற்போல, உன் வருகையால் நான் களிக்கவேண்டும் என்பது கவியின் உட்கிடக்கை.

56 குளிர்வெண் பணிலம் உலவிவரக்
குவியும் முத்து வரம்பெல்லாம்,
கோவைக் கனியி னீட்டத்தாற்
கூரும் பவளம் பரம்பெல்லாம்,
நளிர்கொள் நீரிற் கலந்துவந்து
நண்ணும் செம்பொன் குரம்பெல்லாம்,
நற்பால் வண்ணச் சிறகன்னம்
நாடுஞ் சாலிப் பரப்பெல்லாம்,
துளிர்கள் தழைய மலர்தழையச்
சோரும் செந்தேன் கரம்பெல்லாம்,
தோகை ஓகை கொண்டாடத்
தூங்க லோசை காவெல்லாம்
களிவண் டீண்டும் திருவழுந்தூர்க்
கம்ப நாடா வருகவே!
கட்டுத் தறியும் கவிபாடும்
கம்ப நாடா வருகவே. (55)

தூங்கலோசைக் களிவண்டு காவெல்லாம் ஈண்டும் என மாற்றிப் பொருள் கொள்க.

57 நெளிக்கும் தோகை நிரந்திருக்க
நின்ற தெங்கின் அரிபாளை
நிறைக்கும் நறவைப் பதனறிந்து
நேடி இறக்கி நெய்யரியால்
புளிக்கும் முன்னர் வடிகட்டிப்
புதிய தெளிவைப் பனைதந்த
பொருந்து பசிய குடைநிறையப்
புரிந்தே யூற்றி உழையாளர்க்
களிக்க அவரும் அதைப்பருகி
அகமும் முகமும் மலர்ந்தொளிர
அதனைக் கண்டு தாம்பருகி
அளவ ளாவித் தம்மகமும்
களிக்குங் களமர் வாழமுந்தூர்க்
கம்ப நாடா வருகவே!
கள்ளின் சொல்லாற் கவியளித்த
கம்ப நாடா வருகவே. (56)

பசிய - பசுமையான; உழையாளர் —சூழ்ந்திருப்பவர்.
'களமர் பாளையின் நறவைப் பதனறிந்து இறக்கினாற்போல் நீ சங்க இலக்கியத்திலிருந்தும், நூறள் முதலியவற்றிலிருந்தும் கருத்துக்களை இறக்கினாய் என்பதும், பசிய குடையில் ஊற்றிக் கொடுத்தாற்போல விருத்தப்பா எனும் குடையில் ஊற்றித் தந்தாய் என்பதும், அருகிலிருந்து பருகியோர் களித்து மகிழ்ந்தாற்போல நின் காவியத்தேறலை மாந்திக் களித்தனர் என்பதும், அவர் மகிழ்ந்ததனைக் கண்டு மகிழ்ந்த களமரைப் போல நீயும் மகிழ்ந்தவர்க் கண்டு மகிழ்ந்தாய்!' என்பதும் உள்ளுறை பொருளாகும்.

58 நீலக் கடல்சூழ் இவ்வுலகில்
நெருப்புக் கோளின் வெப்புற்று
நெறிபட் டொவ்வாப் பொறியுற்று
நீடுந் தூசி அடையுற்றுக்
காலம் விளைத்த ஒருகருங்கல்
கருதா ரின்றி வழிகிடக்கக்
கண்டு நினைந்து கைக்கொண்டு
கனத்துப் படிந்த துகளகற்றிக்
கோலம் விளைத்து வடிவமைத்துக்
கோடி நுணுக்கங் குலவிவரக்
கோயிற் கடவுட் படிமத்தைக்
குறித்துப் பொளியும் ஓசையொடு
காலங் குலவும் திருவழுந்தூர்க்
கம்ப நாடா வருகவே!
கட்டுத் தறியும் கவிபாடும்
கம்ப நாடா வருகவே. (57)

கால் + அங்கு + உலவும் (கால்— காற்று).
'காலம் விளைத்த ஒருகருங்கல்லானது சிற்பியின் கைவண்ணத்தால் வணங்கும் கோவிற்படிமம் ஆனாற்போலக் காலத்தால் விளைந்த இராமனின் கதைக்கு உன் கைவண்ணத்தால் மானிடர் வணங்கும் தெய்வத் தன்மையை அளித்தாய்!' என்பது உள்ளுறை பொருள்.

59 எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்கோ
எந்தாய் உன்னை இனியழையேன்!
எண்ணெய் கண்ணுக் கினிக்கட்டேன்!
ஏதுங் கசப்பு மருந்தூட்டேன்!
மண்ணிற் புரண்ட தேனென்று
மறந்தும் என்றுங் கேளேனே!
வாயில் வடியும் நறுந்தேனை
வழித்துத் துடைக்க இனிக்கருதேன்!
விண்ணின் நிலவை வேண்டினையோ?
மின்னும் உடுக்கள் விரும்பினையோ?
வெறிதே கண்ணைக் கசக்குவதேன்?
விம்மிப் பொருமல் உனக்கழகோ?
கண்ணிற் குவளை மலரவரும்
கம்ப நாடா வருகவே!
கட்டுத் தறியும் கவிபாடும்
கம்ப நாடா வருகவே. (58)

உடுக்கள்—விண்மீன்கள்.

60 சாலிக் கதிர்செந் தாமரையில்
சாய்ந்து தொங்குஞ் சால்பொப்பத்
தங்கச் சுட்டி பட்டமொடு
சாந்துப் பொட்டில் பட்டாடத்
தாலி ஐந்து படைதழுவிச்
சந்த மார்பில் தழைத்தாடத்
தயங்கு மகரக் குழையாடத்
தனித்த வலயம் கைக்கடகம்
ஆலித் திருக்க அரைஞாணில்
அசையும் மணிகள் சலசலக்க
அடிகொள் சதங்கை கிண்கிணியும்
அம்பொற் சிலம்பு மென்றண்டை
காலிற் செறிந்து கலகலக்கக்
கம்ப நாடா வருகவே!
கட்டுத் தறியும் கவிபாடும்
கம்ப நாடா வருகவே. (59)

ஆலித்திருக்க—ஒலித்திருக்க.

61 வடசொற் கடலின் வரைகண்ட
வசையில் ஐய வருக,தமிழ்
வளமுங் கடந்தோய் வருக,உரு
வரையோ வியமே வருக,அழற்
புடமிட் டெடுத்துப் பழங்கதையைப்
புதுக்கும் புலவ வருக,புகழ்
பொதிந்த மெய்யே வருக,புரை
பொருந்தாக் குணனே வருக,மொழி
சுடர்கொள் நாவின் நயமுரைக்கும்
சொல்லின் செல்வ வருக,மறுத்
தொடரா மனனே வருக,ஒளி
துலங்கும் மதியே வருக,அலை
கடலின் நெடிது கற்றுயரும்
கம்ப நாடா வருகவே!
கட்டுத் தறியும் கவிபாடும்
கம்ப நாடா வருகவே. (60)

★

7. அம்புலிப் பருவம்

(வேறு)

62 ஆதித்தன் அருள்செய்ய அருங்கலைகள் நிறைவுபெற
அணிமுழு மதியு றுதலால்
அகிலத்தார் உவப்படைய ஆரிருளும்இரிந்தோட
அழகுற ஒளித ருதலால்
ஆதிக்கஞ் செல்கின்ற அரங்கொன்றைத்
[தனக்கென்றே
அமைத்தவண் நிலைபெ றுதலால்
அணிசெய்யும் புலிக்கொடிவிண் ணசைந்தாடும்
[வளவனவன்
அவையினிற் பொலிவு றுதலால்
யாதிக்கும் உறைபவர்கள்ஏமுற்றுப் போற்றிடவே
இசையொடு துதித்தி டுதலால்
யாவரையும் ஈர்க்கின்ற பாவரையும் இவன்
[நிற்கும்
இயைந்தநற் றுணையினன்காண்
ஆதித்த குலமகனின் அடலுரைக்கும் புலவனுடன்
அம்புலீ யாட வாவே!
அழகுதவழ் திருவழுந்தூர் பழகுதமிழ்க்
[கம்பனுடன்
அம்புலி யாட வாவே! (61)

ஆதித்தன்—கதிரவன்;— கம்பரின் தந்தையார்;
யாதிக்கும்— எல்லாத் திசைகளிலும்; ஆதித்த குலமகன்
— இரகுவம்ச இராமன்.
(இது முதல் மூன்று பாடல் சாமம்)

63 இரக்ககுணச் சிறப்பியல்பன் எழிற்கங்கைக் கரை
[யுடையான்
இணையிலா அன்பு கொண்டோன்
ஏற்றமிகும் உருவுடையான் எதிரில்லா
[வலிமையுறும்
எழிற்குகன், விலங்கியல்புக்
குரக்குநிலைக் குரிசிலவன் கிட்கிந்தைக் குரியவனாய்க்
கொடுமையுற் றலைந்து பின்னர்க்
கோனாட்சி தான்பெற்ற வாலிதம்பி,
[வளைவிளையும்
குளிர்கடல் சூழி லங்கை
அரக்கர்குலத் தண்ணலவன் அண்ணன்வழி
[அகன்றுவரும்
வீடணன் ஆகி யோரை
அண்ணலொடு நண்பாக்கி அகங்கனிந்து
[மகிழ்ந்தனன்காண்
ஆதலின் நினைவி ழைவான்
அரசுரிமை துறந்தவனைப் பரசிடுமிப் புலவனுடன்
அம்புலீ யாட வாவே!
அழகுதவழ் திருவழுந்தூர் பழகுதமிழ்க்
[கம்பனுடன் (62)
அம்புலீ யாட வாவே!

அண்ணல் — இராமன்;

64 உன்நிலவால் ஒளிதந்தே உலகளப்பாய்! [பயிர்க்குலமும்
உயிர்க்குலமும் ஓங்க வைப்பாய்!
ஒருமீனும் உடனுறைய உடுக்குலமும் சூழ்ந்துவர
உலவிநீ உயர்ந்தி ருப்பாய்!
தன்கவியாற் களிதந்தே உலகளப்பான், [தமிழ்ப்பயிரும்
மன்னுயிரும் தழைய வைப்பான்,
தனிச்சடையன் உடனுறையத் தமிழ்ச்சுவைஞர் [சூழ்ந்திருப்பத்
தலைநிமிர்ந் துயர்ந்தி ருப்பான்,
இன்பமிகு தென்றலொடும் உன்னேடும் பிறந்து [வளர்ந்
தெழில்நிறைந் திலங்கு கின்ற
என்றுமுள தென்தமிழை இயம்பியிசை [கொண்டிலங்கும்
இவன்நினக் கிசைந்த வன்காண்
அன்னமொடுங் கானடைந்தோன் அழகியம்பும் [புலவனுடன்
அம்புலீ யாட வாவே!
அழகுதவழ் திருவழுந்தூர் பழகுதமிழ்க் [கம்பனுடன்
அம்புலீ யாட வாவே! (63)

அன்னம் — சீதை; கானடைந்தோன் — இராமன்;

(வேறு)

65 கலைமதி நீயென வினைத்தொகைப் பொருளொடும்
கழலுறுவ துணர்கி லையோ!
கவினிழந்த தொவ்வொரு திங்களும் ஒருநாள்
கட்படா தொளிகு வையே!
கலைபயில் தெளிவொடு கட்டுரை வன்மைகொள்
கற்பனை வளமு டையான்,
கல்வியிற் பெரியனெக் காலமும் ஒளிர்குவன்,
கருவிலே திருவு டையான்
குலைமதி அடைந்தனை, நிலைமதி அடைந்தனன்,
குவலயம் உனைம றைக்கும்;
குலவிடும் இவனுடன்; கோமகற் கொப்பெனக்
கூறிடத் தகுதி யில்லாய்,
அலைமகள் கொழுநனின் நிலையுரை இவனுடன்
அம்புலி யாட வாவே!
ஆர்வலர் சூழமுந் தூர்வளர் கம்பனொ
டம்புலீ யாட வாவே! (64)

குவலயம்—உலகம், சந்திரனை மறைக்கும் (சந்திர கிரகணம்) குவலயம்—உலகத்தார்; இவனுடன் (கம்பரொடு) குலவிடும்—குழைவார்கள்; (இது முதல் மூன்று பாடல் பேதம்)

66 ஏழிரு கலையொடொன் றுடனிவண் [1]நிலவாய்
[2]நிலவாய் எனவு ணர்வாய்
எண்ணெண் கலைகொளும் யாப்புக் கலையொடு
[3]நிலவாய் இலங்கு கின்றான்,
சூழிரு ளகத்தொடு சுடர்விட் டுலவிச்
சுழலுதல் நின்வ ழக்கம்,
தூயநல் லகத்தொடு சுடர்முகம் பொலியத்
துலங்குதல் இவன்ப ழக்கம்,
பூழியர் குலத்தவ ரேயுனைப் போற்றுவர்
புவிடை இவற்பு கழ்ந்து
போற்று தவரிலர், புதுமையன் இவற்குநீ
பொருந்துமா றறிய கில்லோம்
ஆழிகொள் நெடுங்கை அழகனைப் புகழ்வனொ
டம்புலீ யாட வாவே!
ஆர்வலர் சூழமுந் தூர்வளர் கம்பனொ
டம்புலீ யாட வாவே! (65)

நிலவாய்- 1. நிலவாகி, 2. நிலவமாட்டாய், 3. நிலம்+வாய்—நிலத்திடை; பூழியர்குலம்- பாண்டியர் மரபு; ஆழி-அரசாணை; அழகன்- இராமன்.

67 இரவலர் காவலர் ஏற்றிட வருவாய்!
இரவுக் கெழுகு வைநீ!
எழுந்தே வளர்வாய் விழுந்தே தளர்வாய்!
இழிவெண் மதியு டையாய்!
புரவலர் இரவலர் போற்றிட வருவான்
புதுப்பொருள் ஈந்து வப்பான்,
பொருளும் அணியும் புனைந்திவன் பொலிவான்
பொதிசெம் மதியு டையான்,
[1]உரமலர் விரிந்தவற் கொருவகை யானும்
ஒப்பிலாய் எனவு ணர்ந்தும்
உனையிவன் அழைத்ததும் உன்பெறும் பேறென
உன்னுக முன்னி னைந்தே!
அரமெனக் கூர்மதி [2]உரம்பெறும் இவனுடன்
அம்புலீ யாட வாவே!
ஆர்வலர் சூழமுந் தூர்வளர் கம்பனெ
டம்புலீ யாட வாவே! (66)

இரவு + அலர் (மலரும்) கா + அலர் (மலர்); இரவு—(இரத்தல்)
இரவுப் பொழுது; உரம்—1. அறிவு 2. வலிமை;

68 வான்மதி! முழுமதி எனவரின் சனகியின்
வாண்முகச் செவ்வி யீவன்,
வளர்மதி எனவரின் வடிவுறும் அன்னவள்
வாணுதல் ஒப்பு விப்பன்,
கூன்மதி யாய்வரின் கோலவில் லாக்கிக்
குவவுறும் அழக னின்தோள்
குலவிட வைத்தவன் நிலவிடச் செய்துநின்
கொட்புறும் நிலைத விர்ப்பன்,
தோன்றிய புகழொடு தோன்றிய தோன்றலைத்
தொழுதிட வருகு வையேல்
தொலைவிலாப் பெருமையும் தொழுதகு
துதைந்திடப் பெறுகு வையே! [நிலைமையும்
ஆன்றநற் புதுமைகள் சான்றவிப் புலவனொ
டம்புலீ யாட வாவே!
ஆர்வலர் சூழுழுந் தூர்வளர் கம்பனொ
டம்புலீ யாட வாவே! (67)

சனகி - சானகி; செவ்வி—அழகு, கொட்பு—சுழலல்;
(இதுமுதல் இரு பாடல் தானம்)

69 தண்ணளி சுரந்தருள் வெண்ணெய்நல் லூர்வளர்
சடையனை உவந்து வந்து
தன்மனம் அளித்தனன், நவில்தொறும்
தகைமிது நன்றி தந்தான், [நவில்தொறும்
பண்ணவன் இக்கம்ப நாடுடை வள்ளல்போல்
பாரிடை வள்ள லில்லை,
பாரியை நிகர்த்திடும் மாரியின் மேலதாப்
பாரிக்கும் தன்மை கொண்டான்;
கண்மணி யிவனுடன் விண்வெளி யிழிந்துநீ
கனிவொடு கூடி நின்றால்
காரணி கொடையினன் ஆதலின் நிற்கொரு
காப்பியம் படைத்த ளிப்பான்
அண்ணிய பேர்க்கெலாம் பண்ணளிப் பானுடன்
அம்புலி யாட வாவே!
ஆர்வலர் சூழமுந் தூர்வளர் கம்பனொ
டம்புலி யாட வாவே! (68)

காரணி கொடையன் — கம்பர் பெயர்களுள் ஒன்று;
அண்ணிய — அணுகிய.

70 எல்லைநீத் திருக்கவும் செருக்குறு மதியாய்
மதியாய் இவன ழைப்பை!
எல்லினைப் பழமெனப் பற்றிய மாருதி
இவனுழை இநந்தி டல்காண்!
[1]செல்லினை விழுங்கிடுந் திறமுணர்ந் திருப்பினும்
திருந்திலை! இவன்தி ருக்கைச்
[2]செல்லினைக் கருதிலை! சிவப்புறுங் கண்ணவன்
சீறியே அதையெ றிந்தால்
வல்விரைந் தேகுமோர் கணையென வந்துனை
வருத்திடும் நிலையு ணர்வாய்!
வானவர் வானரர் தானவர் யாரையும்
வரிக்குளே அடக்கி னன்காண்!
அல்லியுங் குவளையும் புல்லிடும் ஊரனொ
டம்புலீ யாட வாவே!
ஆர்வலர் சூழுழுந் தூர்வளர் கம்பனொ
டம்புலீ யாட வாவே! (69)

எல் - ஞாயிறு; செல் - 1 மேகம், 2 எழுத்தாணி;
(இது முதல் இருபாடல் தண்டம்)

71 *இராவணன் ’நீயிவன் அழைப்புக் கிணங்கா
திருத்தலில் வியப்பி லைகாண்!
இவனுறு பொறுமைக் கெல்லையொன் றுண்டெனா
எண்ணுக! உள்நி னைந்தால்
[1]இராவணம் செய்யுமிவ் வெறுழினன் சுவடொற்
றெழில்கவி படைப்ப வர்கள்
எள்ளள வாகிலும் இடந்தர இசையார்,
[2]இராவணம் கொண்டு முல்வாய்!
இராவணன் வீழ்ச்சியும் இராகவன் ஆட்சியும்
இக்கவி மாட்சி மையாம்!
என்னினிப் புகல்வதோ? உன்நிலைக் கிரங்குவல்!
ஏதினிப் புகலி டஞ்சொல்?
அராபதம் முரல்பொழில் விராவிடும் நாடனொ
டம்புலீ யாட வாவே!
ஆர்வலர் சூழமுந் தூர்வளர் கம்பனொ
டம்புலீ யாட வாவே! (70)

---

* இராவணன் - இரா+வ (ண்) ணன் - இரவுவண்ணன்; உள் - மனம்; இராவணம் - 1 இராதவண்ணம், - 2 அழுகை; மறுழினன் - வலியவன்; அராபதம் - வண்டு.

8. சிற்றிற் பருவம்

(வேறு)

72 கோடி யுடுவிற் கொளிகொடுத்த
குருவெண் முத்தால் எயிலெழுப்பிக்
கோட்டை யமைத்துக் குடிபுகுந்து
குறுவாய்ப் பணிலக் கலமிட்டுத்
தேடித் தேனே உலைநீராத்
தேக்கி முத்துப் பைஞ்சாலித்
தேன்சோ றடுமோர் கவனத்தால்
செல்வா! வருத லறியாது
கூடி யமர்ந்தோம் அதுவன்றிக்
கூடுஞ் செருக்கா லமரவிலை!
கோடா மனத்தாய் அதற்காகக்
கூருஞ் சீற்றப் பார்வையொடும்
ஆடிப் பெருக்குப் போல் விரைந்தாய்?
அடியேம் சிற்றில் சிதையேலே!
அழுந்தூர்த் தோன்று பெருங்குணனே
அடியேம் சிற்றில் சிதையேலே. (71)

உடு – விண்மீன்.

73 காசிப் பட்டுக் கஞ்சுகந்தான்
கனக்கு மென்று கைவிட்டுக்
காஞ்சிப் பட்டு மெய்யணிந்து
கண்ணிற் கரிய மையெழுதி
மாசில் மாவின் கனிநாடி
வண்டு துளைத்த மறுப்போல
வண்ணக் கன்னம் மையிட்டார்
வருங்கண் ணேறு கழிதற்கே!
தூசில் தூசி தோயாமல்
தோழர் துணையா ஆடென்று
சொல்லி அன்னை உனைவிடுத்தார்
சொல்லை மீறி இவண்வந்தாய்
ஆசி கூறி அருளாயோ?
அடியேம் சிற்றில் சிதையேலே!
அழுந்தூர்த் தோன்று பெருங்குணனே
அடியேம் சிற்றில் சிதையேலே. (72)

கஞ்சுகம் – சட்டை ; தூசு - ஆடை: தூசி – புழுதி·

74 வள்ளல் இராமன் காடாள
மைந்தன் பரதன் நாடாள
வரங்கள் பெற்ற கைகேயி
வடித்த சிற்றி லீதென்றோ
உள்ளங் கொண்டாய் சிதைத்தற்கே?
உனக்கும் ஐயம் வரலாமோ?
உருத்துப் பார்த்தல் ஒவ்வாதே!
உரைநூற் கிடைக்கை உணர்ந்தோயே!
எள்ளற் செய்கை இழைப்பாயோ?
எம்மோ டிணைந்தே யாடாயோ?
எற்று முன்றுள் நோவாதோ?
ஏழை எமக்கே இரங்காயோ?
அள்ளுஞ் சுவைசேர் நூலளித்தோய்
அடியேம் சிற்றில் சிதையேலே!
அழுந்தூர்த் தோன்று பெருங்குணனே
அடியேம் சிற்றில் சிதையேலே. (73

கொள்ளுஞ் சுவையா றுடனமுது
கூட்டி வைத்துச் சமைத்துள்ளோம்;
கோமான் உனக்கும் விருந்தளிக்கக்
குழுமி நிற்கும் எங்களுக்கு
விள்ளுஞ் சுவையோ ரெட்டுள்ளும்
வீரச் சுவையில் நீமிக்கு
வெருவும் அச்சச் சுவையோடு
விரும்பா அழுகைச் சுவையூட்டி
உள்ளம் உவகைச் சுவைபெறவோ
ஓடி வந்து நிற்கின்றாய்?
உன்றாள் பரலி லுறலாமோ?
ஒன்னார் செயல்நீ செயலாமோ?
அள்ளிக் கொள்ளும் அழகோனே
அடியேம் சிற்றில் சிதையேலே!
அழுந்தூர்த் தோன்று பெருங்குணனே
அடியேம் சிற்றில் சிதையேலே. (74)

ஒன்னார் — பகைவர்

76 அட்டிற் புகையோ கார்படைக்கும்!
அரிசி களையுங் கழுநீரோ
அஞ்செங் கழுநீர் மலர்படைக்கும்!
அமுதின் கஞ்சி யாருகி
[1]மட்டில் வயலின் பயிர்படைக்கும்!
மலர்கள் சேர்ந்து தொடைபடைக்கும்!
மகர யாழை அளிபடைக்கும்!
மடிமை காணுத் தேனீக்கள்
[2]மட்டு நாடிக் கிளைதோறும்
வளரும் பிறைபோல் இருல்படைக்கும்!
மாட்சி கண்டு நூல்படைத்து
வழங்கி நின்ற பெருவள்ளால்
அட்டற் செயல்நிற் கழகாமோ?
அடியேம் சிற்றில் சிதையேலே!
அழுந்தூர்த் தோன்று பெருங்குணனே
அடியேம் சிற்றில் சிதையேலே. (75)

மட்டு — [1] அளவு, [2] தேன்; அட்டல் — அழித்தல்.
'அழுந்தூரில் இயற்கையே படைக்கும் தன்மையுடையதாக விளங்குகிறது. அவ்வூரில் பிறந்த நீயும் நூல்படைப்பவனுக இருக்கின்ருய். அவ்வாறிருக்க எம்படைப்பாகிய சிற்றிலை நீ அழிப்பது தகாது' என்பது குறிப்புப் பொருள்.

77 சொல்லுஞ் சொல்லை வெல்லுஞ்சொல்
தோன்ற லின்றிச் சொல்கின்ற
சொல்லும் வல்ல இராகவனும்
தொடரும் இளவல் இலக்குவனும்
நல்ல தவத்துக் கோசிகனார்
நயந்த வேள்வி காத்தற்கு
நடுக்கான் நின்றே அதுமுடித்தார்
நடந்தம் மூவர் மிதிலைக்குச்
செல்லும் வழியில் ஒருகல்லும்
செம்மல் இராமன் கால்பட்டுத்
தெரிவை யான கதையதனைச்
செப்பும் நீயோ சிறுமியர்பால்
அல்லல் இழைக்க அருகுற்றாய்?
அடியேம் சிற்றில் சிதையேலே!
அழுந்தூர்த் தோன்று பெருங்குணனே
அடியேம் சிற்றில் சிதையேலே. (76)

தெரிவை — பெண் — அகலிகை.

'இராமன் கால் கல்லைப் பெண்ணாக்கிற்று. அதனைப் புகழ்ந்து பாடிய நீ எம் வீட்டைக் காலால் மண்ணாக்க வருகின்றாய். நீ படைத்த இலக்கியத்திற்கு நீயே முரணாக நடக்கலாமா?' எனக் குறிப்பால் வினவியதாம்.

78 கருமை மேதி கன்றுள்ளிக்
கனத்த குரலான் தான்முழங்கக்
காற்றி லேறும் அம்முழக்கும்
காயஞ் சாடிக் காருடைக்கும்,
பருவ மேகம் மழைபடைக்கும்,
பாயும் வெள்ளம் மடையுடைக்கும்,
பாவும் தென்றல் அரும்புடைக்கும்,
பரிய பொகுட்டைச் சுரும்புடைக்கும்,
உருவ வேழம் இருளுடைக்கும்,
ஒற்றைக் கதிர்நெல் உழக்குடைக்கும்,
ஒப்பில் கட்டோ கலமுடைக்கும்
ஊர! சிற்றில் உடைப்பாயோ?
அருமை படைக்கும் சோணுடா
அடியேம் சிற்றில் சிதையேலே!
அழுந்தூர்த் தோன்று பெருங்குணனே
அடியேம் சிற்றில் சிதையேலே. (77)

காயம் - ஆகாயம்; வேழம் - கரும்பு.

'அழுந்தூரில் கார் உடைக்கப்படுதல், மடை உடைக்கப் படுதல் முதலிய உடைப்புச்செயல்கள் ஆக்கத்திற்குப் பயன் படுகின்றன. இத்தகைய ஊரில் பிறந்த நீ எவ்வித ஆக்கமும் தராத-அழிவைமட்டுமே தரக்கூடியதாகிய சிற்றில்உடைப்பை மேற்கொள்ளலாமோ? இஃது அழுந்தூரில் பிறந்த உனக்கு முறையாமோ?' எனக் குறிப்பால் வினவியதாம்.

79 என்பைத் தோலே போர்த்திருக்கும்
இழிந்த உடலைக் கொண்டுலவி
இயற்கை அறிவும் இல்லாமல்
எண்ணம் போகும் போக்கேகும்
வன்பு மனத்துள் மறம்புக்கு
வடித்த பாவப் பெருவீட்டை
வளரும் அறம்தன் கால்கொண்டு
வலிந்தே அழித்தல் வழக்கன்றோ!
அன்பே நிறைந்த நெஞ்சினரேம்
அமைக்கும் சிற்றில் அழிக்கவரல்
அறமோ? மறமோ? யாதுரையாய்?
அன்புற் றமர்ந்த வழக்கெதுவோ?
அன்பின் செவ்வி நனிகண்டோய்
அடியேம் சிற்றில் சிதையேலே!
அழுந்தூர்த் தோன்று பெருங்குணனே
அடியேம் சிற்றில் சிதையேலே. (78)

'அறம் மறத்தை அழிப்பதுதான் இயல்பு. அவ்வறம் அன்பையும் அழிக்குமோ? நீ அன்புடையார் சிற்றிலைச் சிதைப்பையேல் பெருங்குணன் என்னும் பெயருக்கு இழிவு வரும். ஆதலின் சிற்றில் சிதையற்க!' என்பது குறிப்புப் பொருள்.

80 குளவி தன்வாய் நீரிட்டுக்
குழைத்த மண்ணாற் கோட்டையெனக்
கூட்டை அமைக்கும், சிதல்தன்வாய்
குழைத்த மண்ணாற் புற்றமைக்கும்
வளமைப் புதுமைக் கோசலத்தின்
மன்னர் மன்னன் தயரதனின்
மன்னும் உயிருக் குயிராக
வயங்கும் இராமன் கொலுவிருக்கக்
கிளவி என்னும் மண்கொண்டு
கிளைத்த விருத்த நீரளைந்து
கிளத்தற் கரிய காப்பியமாம்
கேழ்கொள் கோவில் உருவாக்கி
அளவில் புகழை அடைந்தோயே
அடியேம் சிற்றில் சிதையேலே!
அழுந்நூர்த் தோன்று பெருங்குணனே
அடியேம் சிற்றில் சிதையேலே. (79)

'அறிவிலா உயிர்களும் கோசலத்தில் இல்லம் அமைக்கின்றன. நீயும் சொல்லே மண்ணைக் கொண்டு காப்பியக் கோவில் அமைத்தாய்! அதனால் பெரும்புகழைப் பரிசாகப் பெற்ருய்! எங்கள் சிற்றிலேச் சிதைத்தால் நீ புகழை இழப்பதோடு பழியையும் எய்துவாய்! ஆதலின் சிற்றில் சிதையற்க!' என்பது குறிப்புப் பொருள்.

81 பாட்டின் திறத்தால் பலர்புகழைப்
பாரிற் பரவா மற்சிதைத்தாய்!
பலருள் பதிந்த அழுக்காற்றைப்
பண்புத் திறத்தால் நனிசிதைத்தாய்!
ஈட்டம் கெழுமும் ஆயிரமாம்
இராமர் புகழை நினதாக
ஈட்டிக் கொண்டாய்! எல்லாரும்
ஏற்கும் செயல்கள் பலபுரியக்
கோட்டி தோறும் புகழ்ந்தார்கள்!
கோதை எங்கள் சிறுவீட்டைக்
குலைக்கும் ஒன்றுச் செயல்கண்டால்
கூடி நின்று பழிப்பாரே!
ஆட்டி வைக்கக் கருதுவையோ?
அடியேம் சிற்றில் சிதையேலே!
அழுந்தூர்த் தோன்று பெருங்குணனே
அடியேம் சிற்றில் சிதையேலே. (80)

★

கோட்டி—அவை, குழு;
(தொந்தரவு செய்யும் மகவை 'ஏன் ஆட்டி வைக்கிருய்?' என்றல் வழக்கு.) 'பிறர் புகழைச் சிதைத்தலும் அழுக்காற்றைச் சிதைத்தலும் புரிந்த பழக்கத்தால் எம் சிற்றிலும் சிதைக்க எண்ணினை போலும்! அனுல் அவற்ருல் உனக்குப்-புகழ் கிடைத்தது. எம் சிற்றில் சிதைத்தால் பழிதான் கிடைக்கும் ஆதலின் பழக்கத்தால்வந்த சிதைக்கும் இயல்பை விட்டொழிப்பாயாக!' என்பது குறிப்புப் பொருள்.

9. சிறுபறைப் பருவம்

(வேறு)

82 உதிக்கின்ற கதிரவனின் உருநிகர்த்த சூட்டுடைய
ஒண்சிறை வார ணங்கள்
உயர்குவையைச் சீக்கவொளி யுமிழ்கின்ற
உலவுமின் மினிக ளெனவே [பன்மணியை
மதிக்கின்ற குருவியினம் வலியலகாற் பற்றியவை
மரந்தொறுந் தூங்கி யசையும்
வான்கூட்டுள் பதித்துவிட வரிசையுறத்
மணிவிளக் கெனத்தி கழவே [தூங்குகிற
கதிர்க்கின்ற மாட்சியினுற் காரிருளாம் பகையகலக்
கழிமகிழ் வுயிர டையவே
காவலுறு மன்றுதொறும் மேவலுறு தூண்டாத
கதிர்விளக் கெனப்பொ லியவும்
திதிக்கின்றசெய்கைவளர் திருவழுந்தூர் வளர்செல்வ
சிறுபறை முழக்கி யருளே!
தென்தமிழும் வடமொழியும் வந்துபணி செய்
சிறுபறை முழக்கி யருளே. [புலவ (81)

திதித்தல் - காத்தல்.

'மின்னும் மணிகளைத் தேர்ந்தெடுத்துப் பறவைகள் கூட்டில் வைக்க, அவை தூண்டா விளக்கைப் போல் விளங்கி, இருளை அகற்றினுற்போலப் பொருள் ஒளி மின்னும் சொற்களையும் தொடர்களையும் காவியத்தில் தக்க இடத்தில் அமைத்து, அவற்ருல் கற்பாரின் மன இருளை அகற்றியவன்' என்பது குறிப்புப் பொருள்.

83 வைகறையில் எழுகதிரை வரவேற்க வாரணங்கள்
வலியதஞ் சிறக சைக்கும்
மனத்திலுறு களிபொங்க இனத்திெைடு தம்
வருகென வாழ்த்தி சைக்கும் [வாயால்
மைகவரும் விழியினரும் மலர்மஞ்சந் துயிலுணர்ந்து
மலர்விழி மலர்ந்தெ ழுந்து
வாயிற்கு நீர்தெளிக்க வரச்சிலம்பின் ஒலி
வளத்தரை கோல மிடவே [முழக்கும்
கைகவரும் வளைமுழக்கும் கறவையினம் கன்றுள்ளிக்
கடம்படு குரல்மு ழக்கும்
கன்றுகளும் பால்பருகக் கருதித்தம் தாயுள்ளிக்
கனைமிகு குரல்மு ழக்கும்
செய்கவரும் நீர்முழக்கும் செறியழுந்தூர் வளர்செல்வ
சிறுபறை முழக்கி யருளே!
தென்தமிழும் வடமொழியும் வந்துபணி செய்
சிறுபறை முழக்கி யருளே. [புலவ (82)

கனை - ஒலி.

84 வாக்குயர்ந்த வள்ளலிடம் நீக்கரிய காமமுறும்
வலியவள் உருவொ ளித்து
வஞ்சியென நஞ்சமென வஞ்சமனக் கதிர்வல்லி
வருகுவ தெனவ டைந்து
நோக்கறிந்து கொள்ளாமல் ஊக்கமுட னுரையாட
நொறுங்கிய தவளி னெண்ணம்
நூக்கரிய ஆசையினள் தாக்கணங்காய்த்
நுவலரும் இளைய சிங்கம் [திரும்பிவர
மூக்கரிந்து விட்டுவிட மொய்ம்பழிந்த சூர்ப்பணகை
மொழியுமப் புலம்ப லுக்கு
முன்னெழும்பும் ஓசைக்குப் பின்னெழும்பும்
முறைமுறை முழக்கி வரவே [தாளவிசை
தீக்கொழுந்து மலர்க்கயங்கள் சேரழுந்தூர் வளர்
சிறுபறை முழக்கி யருளே! [செல்வ
தென்தமிழும் வடமொழியும் வந்துபணி செய்
சிறுபறை முழக்கி யருளே. [புலவ (83)

இளைய சிங்கம் - இலக்குவன்.

85 ஆற்றலிலும் அறிவினிலும் அளந்தோத இயலாத
அழகனின் வலியி கழ்ந்தே
அரக்கியவள் உரைத்தபடி அவனோடு முனி
அமர்செய முனைந்தெ ழுந்த [வோடும்
காற்றினிலுங் கனலினிலுங் கடியானைக் கொடியானைக்
கரனெனும் பெயரி னானைக்
கணைதாங்கி வில்தாங்கிக் கைவாங்கித் தலை
களத்திடைப் புரள வைத்துக் [வாங்கித்
கூற்றுவனை வரவழைத்துக் குறையாத விருந்தாகக்
கொடுத்தவக் குலக்கொ ழுந்தைக்
குழுமிவருந் தவமுனிவர் கொண்டாடிக்
குழுமினர் முழக்க மிடவே [கண்டாடிக்
தீற்றுபுகழ் செவியேற்றுத் திருவழுந்தூர் வளர்செல்வ
சிறுபறை முழக்கி யருளே!
தென்தமிழும் வடமொழியும் வந்துபணி செய்
சிறுபறை முழக்கி யருளே. [புலவ (84)

அழகன் – இராமன்; அரக்கி—சூர்ப்பணகை.

86 தூயவினை புரிவார்க்குச் சூழ்பயனும் நன்றென்று
சொலுமொழி துலக்க முறவே
தொடர்வினைகள் இடர்தந்து படர்ந்துவரலில்
துகளற நுணித்த றிந்தார், [லென்பார்
மாயவினை புரிவார்க்கு மாயவினை உண்டென்னும்
வழக்கதும் வலிமை பெறவே
மாயவுரு மானுகி மாரீசன் விளையாட
மதவலி எழுது புகழான்
ஆயகணை ஒன்றெய்ய அம்மாய மாரீசன்
அகம்பதிந் துயிர்க வரவே
அலறுமவன் ஓலமதும் அண்டமெலாம் எதி
அதற்கிசை அமைத்த படியே [ரொலிக்க
தேயமெலாம் புகழ்பரவும் திருவழுந்தூர் வளர்செல்வ
சிறுபறை முழக்கி யருளே!
தென்தமிழும் வடமொழியும் வந்துபணி செய்
சிறுபறை முழக்கி யருளே! [புலவ (85)

மதவலி – மிகுவலி; எழுது புகழான் – எழுதும் புகழுடைய இராமன்.

(வேறு)

87 எவ்வினை யாற்ற லேய்ந்த போதும்
இழிவுறு செயலைப் புரியின்
இளிவர லேற்றே இன்ன லெய்தி
இறுதியி லழிவ துறுதி;
நவ்வியின் நோக்கி தம்பி மனையாள்
நல்லெழி லுருமை வவ்வி,
நனந்தலைக் காடு தம்பி நாட
நலிவுகள் அவனுக் களித்த
வெவ்வினை வாலி வீருர் வேந்தன்
வியப்புறு வலிய னவனும்
வியன்கணை பாய்ந்து வீழ நெய்தல்
விளிபறை முழக்க மிடவே
தெவ்வினைத் தேய்க்கும் திருவழுந் தூர
சிறுபறை முழக்கி யருளே!
செவியுறு கேள்விச் செல்வக் கோவே
சிறுபறை முழக்கி யருளே. (86)

தெவ் - பகை.

88 நெய்யணி கூந்தல் நிலவொளி நெற்றி
நெறியறி பிணையின் விழிகள்
நிலவிடும் மங்கை மலர்முகம் கண்டு
நிறைநற விதழ்த்தா மரையும்
உய்வகை ஏதும் உறுவது காணு
தொருதனிப் பதமொ டிருந்தே
உறுதவஞ் செய்ய இருகயற் குஞ்சும்
உடனெழுந் ததிலே உகளக்
கொய்யறு குமுதக் குவிமுகை, சாரைக்
கொடுந்தலை புரையக் கயலைக்
கொளுமென அஞ்சிக் குரங்குதன் கையைக்
குனிப்புற நெரித்தும் நொடித்தும்
செய்வினை மயங்கும் திருவழுந் தூர
சிறுபறை முழக்கி யருளே!
செவியுறு கேள்விச் செல்வக் கோவே
சிறுபறை முழக்கி யருளே. (87)

'மனமெனும் குளத்தில் எண்ணத் தாமரையில் அறமெனும் கயல் துள்ளிக் கிடப்ப, மறமெனும் குவிமுகை, சாரைத் தலை போல் தோன்ற அறிவெனும் குரங்கு அஞ்சிக் கிடக்க அதன் அச்சம் நீங்குமாறு மெய்யுணர்வாம் பறையினை முழக்குக' என்பது குறிப்புப் பொருள்.

(வேறு)

89 திருவளர் பூவைச் சுரும்பினஞ் சேர்ந்து
தேனுகர் முழக்கொலியும்
தெளிபுன லாறு திகழலை மோதித்
திண்கரை பொருமுழக்கும்
உருகெழு கோவில் தருமுர சோங்க
ஒருதுழல் வளைமுழவம்
உயர்வகை மேளம் ஒருங்கிணை நாத
சுரமுட னுறுமுழக்கும்
இருவினை ஆய்ந்தார் ஒருநெறி நிற்பார்
இசைத்திடு தமிழ்முழக்கும்
இருகைத் தாளம் எடுத்திடு மார்ப்பும்
எழுப்பொலி பிறக்கிடவே
முருகுயர் கையால் திருவழுந் தூர
முழக்குக சிறுபறையே!
முத்தமிழ்த் துறைதேர் உத்தமக் கவிஞ!
முழக்குக சிறுபறையே. (88)

90 புகர்முக வேழம் புரையுநன் மேதி
புனலிடைப் புகுமுழக்கும்,
பொசுக்கென வாளை புரண்டெழுந் தாங்குப்
புறமெலாம் திரிமுழக்கும்,
தகர்கணு வேழப் பிழிவினை ஆலை
தருபொழு தெழுமுழக்கும்,
தனிச்சுவைச் சாறும் தழைத்தவன்ன ஆறாய்த்
தளிர்த்தெழும் அலைமுழக்கும்,
இகலுறு காளை எதிரெதிர் தோன்றி
இடியொடு பொருமுழக்கும்
இடமெலா மோங்க, இரவலர் ஏற்க
இடுபொருள் முழக்குறவே
முகமலர் பூக்கும் திருவழுந் தூர
முழக்குக சிறுபறையே!
முத்தமிழ்த் துறைதேர் உத்தமக் கவிஞ!
முழக்குக சிறுபறையே. (89)

புகர் - புள்ளி.

91 வகையுறும் எழுத்தும் வளவிய சொல்லும்
வாழ்வியல் தருபொருளும்
வரைவுறும் இலக்கண வரன்முறை ஓரார்,
வளமைகள் செறிந்தொளிரும்
தொகையுறு பனுவல் தொடுதலும் இல்லார்
துணிவொடு கவியெழுதித்
துளிர்த்தெழு தமிழிற் களைகளைப் பெய்து
சுழலுவர் புலவரெனப்
புகைமனத் தவராற் புகழ்தமிழ்த் தாயும்
புழுங்குவள் பொலிவிழந்தே
பொருந்தல ருள்ளப் புரையெனும் புட்கள்
பொருக்கென இரிந்தோட
முகைவிரி முறுவல் திருவழுந் தூர
முழக்குக சிறுபறையே!
முத்தமிழ்த் துறைதேர் உத்தமக் கவிஞ!
முழக்குக சிறுபறையே. (90)

★

புள் - பறவை.

10. சிறுதேர்ப் பருவம்

(வேறு)

92 மாரதங்கள் செலுத்துவதில் வல்லவனுந் தயரதனின்
மகவாப் பிறந்து வளர்ந்து
வரிவில்லில் தொடுகணையின் கலைபயின்று
வலத்தான் மனைழநி றத்தான் [துலங்குமொரு
பாரதத்தில் தோன்றியவன் பலநீதி அறிந்தவொரு
பழையன் இராம னெழுந்து
பாரதஞ்செய் அரக்கர்வலி பறந்தோடச் செய்
பரிவோ டுரைத்த தமிழாம் [ததனைப்
[1]பாரதத்தில் வீற்றிருந்து, தாரணிந்த பார்வேந்தர்
பணிந்தே வரிசை தரவும்
பாவாணர் வாழ்த்துரைக்கப் பல்லாண்டு பலர்
பவனிவரு பேர ரசனே, [கூறப்
தேரழுந்த லில்லாத திருவழுந்தூர் வருசெல்வ
சிறுதேர் உருட்டி யருளே!
செப்பரிய புகழ்த்தேரிற் செலவயரும் உயர்கம்ப
சிறுதேர் உருட்டி யருளே. (91)

பார் + அதம் + செய்; 1. பா + ரதம் = பாவாகிய தேர்.

93 செப்புகிற சொல்லெல்லாம் சேர்ந்தறையும் ஆணி
செறிந்தே பொலிந்து மிளிரச் [யெனச்
சிதையாத அசையெல்லாம் சீரிழைத்த சட்ட
திகழ்ந்தே இணைந்து செறிய [மெனத்
ஒப்பரிய சீரெல்லாம் உயராரக் காலாக,
ஒன்றிய தளைகள் குடமா,
உருவாகும் தொடையாவும் உருள்கின்ற
உருக்கொள் அடிகு திரையா, [சக்கரமா,
துப்புநிறை பொருளச்சா, துலங்கும்பா தேர்த்தட்டா,
தொகுத்தஅணி மணிக ளாகத்
துதைகின்ற சந்தமெனுந் தூவண்ணந்
துகளறு மெருகு கூட்டிச் [தீற்றிப்பின்
செப்பமுறுங் காப்பியத்தேர் செலுத்துதிரு வழுந்தூர
சிறுதேர் உருட்டி யருளே!
செப்பரிய புகழ்த்தேரிற் செலவயரும் உயர்கம்ப
சிறுதேர் உருட்டி யருளே. (92)

94 அறமழுங்கு பனத்தானின் அறமற்ற செயல்கடிந்
அளவிலா வலிமை அடைந்தோன் [தோன்
ஆயினுந்தன் முன்னவனை அகலாதோன்,
அருமைத் தமையன் நெடிதே [வீடணனின்
உறங்குவதும் உண்ணுவதும் உடைக்கும்ப
டுறுபோர்க் களம்பொ ருங்கால் [கன்னனே
உத்தமனின் சணையைந்தால் உறுப்புவலக்
உதவுமிடக்கை பின்னும் [கைமுன்னும்
குறங்குகளில் வலமுன்னும் இடப்பின்னும்
குருதியெனும் புனலி லுருளக் [குறைபட்டுக்
குன்றனைய உடலுருளக் கொடிமுடிபோல்
குலைவுற் றரக்கர் உருளத் [தலையுருளக்
திறமழுங்கா உழவர்சூழ் திருவழுந்தூர் வருசெல்வ
சிறுதேர் உருட்டி யருளே!
செப்பரிய புகழ்த்தேரிற் செலவயரும் உயர்கம்ப
சிறுதேர் உருட்டி யருளே. (93)

உத்தமன்—இராமன்; குறங்கு—தொடை.

95 வாரணங்கள் ஒரெட்டின் வலியடங்க மதமடங்க
வலிந்தே பொருத வுரமும்,
வளர்சிமய இமயத்தை வலப்வருங்கால்
வரைத்தோள் படைத்த வலியும். [பெயர்த்தபெரு
நாரதனுக் கிசைநுட்ப நயம்யாவும் உரைநாவும்,
நயந்தே சிவன்த ருமொரு
நனிவலத்து வாட்படையும், நன்மணமே
நறியமலர் பலதொ டுத்த [கமழ்கின்ற
தாரணிந்த முடிபத்துஞ் சரமொன்ருற் சிதறுண்ணச்
சரிந்தே இலங்கை யரசன்
தரைமகட்குப் புறந்தந்து சாய்ந்துருளத்
தனிவீர முடனு ருளவே [தணவாத
சேரலரும் புகழ்பரவச் செய்ததிரு வழுந்தூர
சிறுதேர் உருட்டி அருளே!
செப்பரிய புகழ்த்தேரிற் செலவயரும் உயர்கம்ப
சிறுதேர் உருட்டி யருளே. (94)

உரம் – மார்பு; சேரலர் – பகைவர்; பரவ – துதிக்க,

96 கள்ளமன வாளரக்கன் காமக்கண் பட்டவுடல்
களங்கம் அடைந்த தெனவே
கருதுபவர் இருப்பினவர் கருத்ததனை அகற்
கருதும் திறம்பா மனத்தள் [றற்குக்
புள்ளிமயிற் சாயலினள் பூவைமொழிச் சானகியாள்
புகையும் எரியிற் புகுந்து
பொற்புடைய கற்பொளியைப் புவியோர்க்கும்
பொருந்தும் வகையி னிறுவ [கணவற்கும்
எள்ளளவும் ஐயமிலா தேற்றுக்கொண்டி லக்குவனொ
டிலங்கை யகன்ற யோத்தி
எய்தற்கே இராகவனும் எழில்புட்ப கவிமானம்
இயக்கிவிசும் பூர்ந்த செலவைத்
தெள்ளுதமி ழேற்றிமகிழ் திருவழுந்தூர் வருசெல்வ
சிறுதேர் உருட்டி யருளே!
செப்பரிய புகழ்த்தேரிற் செலவயரும் உயர்கம்ப
சிறுதேர் உருட்டி யருளே. (95)

97 அரியணையி னடிதாங்கி அனுமன்தான் சுமைகொள்ள
அரியின் குலத்து தித்த
அங்கதன்தான் உடைவாளை அங்கைகொள,
அண்ணனுக் குரிய தென்றே [அரசுரிமை
அரியதவம் ஒருபதினான் காண்டுகளும் செய்பரதன்
அணிவெண் குடைக விக்க,
ஆருயிராம் ஈரிளவல் சீருயரும் கவரிகொள,
அடையாக் கதவம் உடையான்
விரிபுகழன் சடையப்பன் விழைமரபில் வருமொருவர்
மிளிர்பொன் மவுலி ஏந்த,
வேதஞ்சொல் வசிட்டன்தான் வீரற்குப்
விழிகளாற் கண்டு மலரத் [புனைகாட்சி
தெரிதருபுன் னகையோடு திருவழுந்தூர் வருசெல்வ
சிறுதேர் உருட்டி யருளே!
செப்பரிய புகழ்த்தேரிற் செலவயரும் உயர்கம்ப
சிறுதேர் உருட்டி யருளே. (96)

அரியின் குலம் — குரங்குக் குலம்; வீரன் — இராமன்.

98 முன்மலர்ந்த தாமரையும் முகையவிழாச் செங்குமுதம்
முருகார் குவளை மலரும்
மொய்த்துவளர் கயத்துள்ளே முடுகிப்பாய்
முனிவுறு வாளை வெடிபோய்த் [மேதியினுல்
தென்னையிள நீர்க்குலையைத் தீண்டிடவும் அவ்விளநீர்
தெளிநீர்க் கயத்து ளுதிரத்
திடுக்குற்ற அம்மேதி திசைபார்த்துக்கரையேறத்
தெருளுற்ற வாளை மீன்கள்
பின்மகிழ்ந்து கயத்துகளப் பெருவளையின் வாய்நின்று
பிணைகால் பதித்த அலவன்
பேருவகை யொடுபார்க்கப் பின்னுந்து
பெரியபா ராட்டி சைக்கத் [தவளைகளும்
தென்றல்வளர் மருதவளஞ் சேரமுந்தூர் வருசெல்வ
சிறுதேர் உருட்டி அருளே!
செப்பரிய புகழ்த்தேரிற் செலவயரும் உயர்கம்ப
சிறுதேர் உருட்டி யருளே. (97)

வெடிபோய் – தாவி

99 தொழுவோரின் உள்ளத்துள் துளும்புகிற பேருவகை
தொடர்ந்து நிலைபெற் றிலங்கச்
சுடர்கின்ற வன்கொழுவுந் தொளைக்கின்ற
தொடிப்பு முதிகஃ சாகவே [நிலத்தின்மண்
உழுவோரான் உணக்கமுற உயர்தொழிலால் விளை
உறுநெற் கதிர்கள் பொலிய [புலமும்
ஊக்கமொடு கதிரறுத்துந் தேக்குகளஞ்
ஒளிக்கண் மருத மகளிர் [சூட்டடித்தும்
எழுந்தோகை முகம்பொலிய எவ்விடத்தும் நில்லாமல்
இவணவண் சுழன்று திரிய
எருத்தசைய அவர்போல இயங்கவுடற்
இமைத்த லிலவா யிருக்கச் [கண்களெலாம்
செழுந்தோகை மயிலாடுந் திருவழுந்தூர் வருசெல்வ
சிறுதேர் உருட்டி யருளே!
செப்பரிய புகழ்த்தேரிற் செலவயரும் உயர்கம்ப
சிறுதேர் உருட்டி யருளே. (98)

தொழுவோர் — தொழுதுண்டு பின்செல்பவர்.

செல்விருந்து பேணற்கும் வருவிருந்து காணற்கும்
செழிக்கும் மனத்து மகளிர்
செந்நெல்லைப் புழுக்கியதைச் செங்கதிரின்
சிதரு துலர்த்தி வரவே [இளஞ்சூட்டில்
இல்லிருக்கும் முன்புறத்தில் எழிற்சிறைய
எளிதிற் கவர முயல [வாரணங்கள்
எழுந்தோச்ச எண்ணுமல் இருங்குழையைப்
இடத்திற் பரவு குழைகள் [பறித்தோச்ச
நல்லிளைய சிறுவரெலாம் நடைபயிலுஞ் சிறுதேரின்
நடையைத் தடுத்து நிற்க
நலியுமவர் போலன்றி நன்னெறியை
நளியுங் குழைகள் உருளச் [உண்ணினைந்து
செல்குழுமி வளஞ்செய்யுந் திருவழுந்தூர் வருசெல்வ
சிறுதேர் உருட்டி அருளே!
செப்பரிய புகழ்த்தேரிற் செலவயரும் உயர்கம்ப
சிறுதேர் உருட்டி அருளே. (99)

நளி - செறிவு (நிறைவு); செல் - மேகம்.

101 பளிங்கதனுற் பாரமைத்துப் பவளத்தாற்
பசும்பொன் முகடு வேய்ந்து [காலமைத்துப்
பலகோடி விண்மீனும் பளிச்சிடுதல் போல்வயிரம்
பதித்துக் கதிரை விழுங்கும்
மிளிர்வளரும் மரகதங்கோ மேதகம்புட் பராகமணி
மிடைந்து கதிர்வி ரிக்க
மின்னலுறு மாணிக்கம் கண்ணிலுறு
வெங்கதி ரெழுந்து லாவ [போதெல்லாம்
நளிர்கடலில் விளைமுத்துள் ஒளிநீர்மை பலவாய்ந்து
நவையில் பரிய முத்தால்
நால்கின்ற மாலைகளை நூல்கொண்டு சுற்றியிட
நளினந் திகழ முகுடன்
தெளிநுட்ப மதிக்கலைஞர் உளிகொண்டு யாத்துள்ள
சிறுதேர் உருட்டி யருளே!
செப்பரிய புகழ்த்தேரிற் செலவயரும் உயர்கம்ப
சிறுதேர் உருட்டி யருளே. (100)

★

பார்—தேர்த்தட்டு; கால்— சக்கரம்; மிளிர்—ஒளி;
வெங்கதிர்— ஞாயிறு; நால்கின்ற—தொங்குகின்ற.

முற்றும்.

படித்து மகிழ்க!

நபிகள் நாயகம்

பிள்ளைத் தமிழ்க் கோவை

(பரிசில் பெற்றவை)



விவரங்களுக்கு:

புலவர், வா. மு. சேதுராமன்,

1, சாமி பண்டாரம் தெரு,

சென்னை - 600002.